# யுனெஸ்கோ கூரியர்

ஜூலை 1984—தனிப்பிரதி ரூ. 2-00



ஆ∴ப்ரிக்காவின் கடந்த காலத்தைத்
திரும்பவும் கண்டுபிடித்தல்

# வாழ வேண்டிய காலம்...

## 23 | கரீபியத் தீவுகள்

### கறுப்பர் குடிசைத் தெரு



அன்னை டைன் தம் கைகளை ஒவ்வொரு மாலையும் கவனமாக கழுவினாள; ஞாயிற்றுக்கிழமைக் காலையில் மிக நுணுக்கமாக கழுவினான். அவை கருகி, பாறையில் அடித்து, மண்ணில் புதைந்து, மண் ஒட்டியவாறே வெளியே எடுக்கப்பட்டவைபோல் தோன்றின; அவை கழிவுநீரில் தோய்ந்து, வெயிலில் உலர்ந்தது, அவ்வெள்ளைத் துணியின் தூய்மை கெடுமாறு கிடந்தது, அக்குடிசையின் இருளில் தெரிந்தது.''

இவ்வரிகள் மார்ட்டினிக் எழுத்தாளர் ஜோசப் ஸோபல் எழுதிய ''லா ருய் காஸ் நெக்ர்'' (1950, 'கறுப்பர் குடிசைத் தெரு') எனும் நெடுங் கதையிலிருந்து எடுக்கப்பெற்றவை. இக் கதை 1930களில் மார்ட்டினிட் பண்ணையாட்களின் போராட்டத்தை விவரிக்கின்றது. இந்த ஆண்டிலிய இலக்கியப் படைப்பை யூழான் பால்சி எளபார் 'ருய் காஸ் நெக்ர்' (1983) எனும் பெயரில் திரைப்படமாக ஜோசே இயக்கியிருக்கிறார். இரு பாத்திரங்களான அவனுடைய பாட்டி அன்னை டைனி ஆகியோரை இப்படத்தில் காணலாம்.

# தமிழர் நாட்டுப்புறப் பண்பாடு

என். வானமாமலை

நாட்டுப்புற இயலின் தந்தையாகிய தாம்ஸ், "சமுதாயத்திலுள்ள பாமர மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் ஆராய்வதே நாட்டுப்புறவியல்" என விளக்குகிறார். தேசியப் பண்பாட்டினை இரு பண்பாடுகளாகப் பகுத்துக்காட்டுகிறார் கார்க்கி. ஒன்று தொழிலாளர் வர்க்கப் பண்பாடு; மற்றொன்று உயர்குடியினர் பண்பாடு. இக்கால மானிடவியலறிஞர்களும், பெருந்திறப் பண்பாடு, சிறுதிறப் பண்பாடு என இரு பண்பாடுகளைக் குறிப்பிடுகின்றனர். இதில், சிறுதிறப் பண்பாடு என்பது தொழிலாளர் பண்பாடாகும். பாமரர் படைக்கும் இலக்கியமே நாட்டுப்புற இலக்கியமாகும். பாமர மக்கள் தங்கள் வாழ்க்கையை அன்றாடம் வளப்படுத்தும் நம்பிக்கைகள், பாடல்கள், நடனங்கள், மந்திர முறைகள், சடங்குகள், சமயங்கள், நாடகங்கள் போன்ற நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கும் ஆன்மிகப் படைப்பே நாட்டுப்புற இயலாகும்.

பாமர மக்களின் கலை நடவடிக்கைகள் அனைத்தும் அவர்களின் சமூக வாழ்வில் வேரூன்றியவை. நாட்டுப்புற வாழ்வும், நாட்டுப்புற இயலும் இணைபிரியாதவை. அவர்களின் வாழ்க்கையின் சமூகநிலைமைகள், அவர்களுடைய உள்ளங்களில் பிரதிபலித்து, அவர்களுடைய, வாழ்வைப் பாதுகாக்கின்ற அல்லது மாற்றுகின்ற சமூக பண்பாட்டு நடவடிக்கைகளில் வெளிப்படுகின்றன. நாட்டுப்புற வாழ்விலிருந்து நாட்டுப்புறப் பண்பாடு தோன்றுகிறது. நாட்டுப்புறப் பண்பாட்டின் ஊற்றுக் காலாக விளங்குவது அவர்களின் உலகியல் வாழ்வாகும்.

பண்டையப் பண்பாடுகள் அனைத்தும், படிப்பறியாப் பாமர மக்கள், வாய்மொழி வாயிலாகவும், சைகைகள், உடல் அசைவுகள் மூலமாகவும் வெளிப்படுத்திய நாட்டுப்புற இலக்கிய பிரிவுகளை கொண்டிருந்தன. ஏட்டு இலக்கியங்களில் புலமை பெற்ற அறிவார்ந்தவர்கள், கவிதைகளையும், நாடகங்களையும், தத்துவ நூல்களையும் இயற்றினார்கள். உயர் குடியினரின் பண்பாடு எழுத்து வடிவம் பெற்றது. நாட்டுப்புறப் பண்பாடு எழுதா இலக்கியமாக, வாய்மொழி மரபாக விளங்கியது.

பண்டைய நாகரிகங்களில் மிகச் சிலரே கற்றறிந்தவர்களாக இருந்தனர். பெரும்பாலானவர் எழுத்தறிவில்லாதவர்கள். எனினும், அவர்கள் பண்பாட்டுப் படைப்புகளை உருவாக்கினார்கள், அவை, வாய்மொழி வாயிலாகவே பெருகிப் பரவின.

உணவுப் பொருள்களை விளைவிப்பதே நாட்டுப்புற மக்களின் முக்கிய தொழிலாக இருந்தது. அதற்கு அவர்கள் மழையை நம்பியிருந்தனர். மழை வேண்டி அவர்கள் சில சடங்குகளைச் செய்தனர். உலகிலுள்ள எல்லா நாட்டுப்புற மக்களிடமும் இந்த நம்பிக்கை பொதுவாக நிலவுகிறது. செய்யும் சடங்குகளினால் மழை பொழிவதில்லை. எனினும், இச்சடங்குகளினால் மழைபொழியும் என அவர்கள் நம்புகின்றார்கள்

## மந்திரச் சடங்கு

மழை வேண்டும் சடங்கு ஒன்றை ஒரு சங்கப்பாடல் விவரிக்கிறது. மலைவாசிகள், ஒரு மலையின் உச்சியில் ஏறி, அங்கிருந்து பாறைகளை உருட்டிவிட்டார்களாம். "மழையே வருக" எனக் கூறியவாறே அவர்கள் சில தானியங்களை அந்த மலை முகட்டில் தூவினார்கள். இயற்கை ஆற்றல், மனித முயற்சியை முடுக்கிவிடும் என்னும் கருத்து இச்சடங்கின் உட்பொருளாகும். மந்திரங்களின் உட்பொருளும் இதுவேயாகும். இந்தச் சடங்கில் மூன்று கூறுகள் உள்ளன: (1) பாறைகளை உருட்டிவிட்டு ஓசை உண்டாக்குதல்; (2) மழை பொழிய வேண்டும் என்ற விருப்பத்தைக் கூவுதல்; (3) தரையில் விழுமாறு சில பொருள்களை எறிதல். இச்சடங்கின் இக்கூறுகள் அனைத்துமே மழை பொழியும்போது நிகழ்பவை என்பது குறிப்பிடத்தக்கது.

## சமயச் சடங்குகள்

சில நேர்வுகளில் சடங்குகளினால் மழைபொழியாமற் போகலாம். அப்போது, தாங்கள் சடங்கினைத் திறம்படச் செய்யவில்லையென மக்கள் கருதுகின்றார்கள். அதனால், சடங்கினைவிட அதிக ஆற்றல் வாய்ந்த தெய்வத்திடம் முறையிடுகின்றார்கள். இப்பொழுது அவர்கள் மழைக்கடவுள் வருணபகவானுக்கு பூசைகள் நடத்துகிறார்கள். மேலும், மழையளிக்கும் மற்றக் கடவுளர்களான கங்கை, நாராயணன் போன்றோரையும் வழிபடுகின்றார்கள். இந்த வழிபாடுகள், தங்களின் மழைவேண்டல் சடங்கிற்கு அரண் சேர்க்கும் என நம்புகின்றார்கள். மழை மந்திரமும், கடவுள் வழிபாடும், மந்திர—சமயச் சடங்கு முறையின் ஒரே அங்கமாகும். இக்காலத்திலுங்கூட மழைவேண்டி, வழிபாடுகளும், நாடகங்களும், இசைபாடுவதும் நடைபெறுவதைக் காணலாம்.

## இக்கால மந்திர—சமயச் சடங்கு

வட ஆர்க்காடு மாவட்டம் கிராமம் ஒன்றில், இன்றும் மக்கள் பருவமழை பொய்க்குமாயின் 'கங்கை பூசை' என்னும் சிக்கலான சடங்குகளைச் செய்கின்றார்கள். செல்வந்தர்கள் தங்கள் இல்லங்களில் கூழ் காய்ச்சிப் பானைகளில் மாரியம்மன் கோயிலுக்கு ஊர்வலமாக கொண்டு செல்கிறார்கள். இந்த ஊர்வலத்தின்போது மழை வேண்டும் பாடல்களைப் பாடுகின்றார்கள். ஊர்வலத்தினரும், அவர்களின் பணியாட்களும் ஆற்றில் நீராடுகின்றார்கள், நீராடுவதால், தங்களை பிடித்த பீடைகளும் நீரில் கழுவப்பட்டு விடுவதாக அவர்கள் நம்புகின்றார்கள். நீராடியபின் கோயிலுக்குத் திரும்புகின்றார்கள். அங்கு கூடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு அவர்கள் பசியடங்கும் வரைக் கூழ் ஊற்றிக் குடிக்கச் சொல்கிறார்கள்.

பணக்காரர்களின் கொடுமையும், இரக்கமின்மையும் ஏழையரின் வயிற்றெரிச்சலை உண்டாக்கின என்பதும், ஆற்றில் நீராடிக் கூழ் குடிப்பதன் மூலம் அந்த வயிற்றெரிச்சல் தணிகிறது என்பதும் இச்சடங்கின் அடிப்படைத் தத்துவமாகும். இச்சடங்கில் மந்திர அம்சமே மேலோங்கியிருக்கிறது. அன்றிரவு, 'கங்கம்மா' என்ற நாடகம் நடைபெறுகிறது.

## சடங்கிலிருந்து நாடகம்

"கங்கம்மா" நாடகத்தின் கதைச் சுருக்கம் இதுதான். மழைத் தெய்வமாகிய கங்கம்மா, கருணையுள்ளங் கொண்டவள்; அவள் உலக மக்களுக்கு மகிழ்ச்சியும் வளமையும் அருள்கின்றாள். அப்போது மாரி, காளி என்னும் இரு கொடிய தேவதைகள் தோன்றி உலகில் நோய்களைப் பரப்புகின்றன. இதற்குத் தடையாக இருக்கும் கங்கம்மாவின்மீது இத்தேவதைகள் பாய்ந்து தாக்குகின்றன. நன்மைக்கும் தீமைக்குமிடையே கடும் போர் மூள்கின்றது. இந்தப் போரின் ஆரவார ஒலியைக் கேட்டு விண்ணுலகிலிருந்து சிவனும், திருமாலும் மண்ணுலகம் வருகிறார்கள். கங்கம்மாவுக்கும், மாரிக்கும், காளிக்குமிடையே நடைபெறும் சண்டையை நிறுத்தி, அவர்கள் மூவரும் சகோதரிகள் என்றும், சிவபெருமானின் மனைவியர் என்றும் கூறிச் சமரசம் செய்து வைக்கிறார்கள். நன்மைக்கும் தீமைக்கும் என்றும் சண்டை நடைபெறுகிறது என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தது இக்கதை. இந்நாடகம் நடத்தினால், மழைபொழியும் என மக்கள் நம்புகிறார்கள். இந்நாடகத்தில் கதை, நடிப்புத்திறன், இசை, பாடல் அனைத்தும் இணைந்துள்ளன. ஓர் எளிய சடங்கானது, பல நூற்றாண்டுக் கால நாட்டுப்புறக் கலை வளர்ச்சியின் காரணமாக ஒரு கலைப் படைப்பாக உருவாகியுள்ளது.

## வளமை

வளமையினையும், செழுமையினையும் நாட்டுப்புற மக்கள் விரும்புவது இயற்கை. குலமரபுச் சமுதாயங்களில், ஆதிவேளாண்மை முறைகளில் எளிமையான வளமைச் சடங்குகள் நடத்தப்பட்டன. பண்டையத் தமிழ்நாட்டில் பயிரிடும்போது வளமையைப் பெருக்குவதற்காக "வள்ளை" என்ற கூத்தினை ஆடிய பின்னரே உழவர்கள் விதைக்கத் தொடங்கினார்கள். பின்னர், வயலின் வளமையைப் பெருக்குவதற்காக சேத்திரபாலன் போன்ற வயல் தெய்வங்களுக்கும், ஆவிகளுக்கும் பூசைகள் நடத்தி, பலி கொடுக்கப்பட்டது. பாமர மக்களின் தலையாய கடவுள் கணேசர். எந்தக் காரியத்தையும் கணேசர் வழிபாட்டு

டன் தொடங்குவது அவர்களின் வழக்கம். கணேசரை வளப்பத்தின் சின்னமாகக் கருதுகிறார்கள். அறுவடையின் முதல் கதிர்க்கட்டினை கணேசருக்குக் காணிக்கை செலுத்துவது மரபு. கணபதி மாட்டுச் சாணத்திலிருந்து தோன்றியதாகத் தமிழ்நாட்டுப் பாடல்கள் கூறுகின்றன. எனவே, வினாயகர் உருவத்தை இன்றும் சாணத்தில் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. சாணம் உழவர்களால் உரமாகப் பயன்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. வினாயகர் சதுர்த்தியன்று, பெரிய வடிவளவுடை பழங்களும், காய்கறிகளும் வினாயகருக்குப் படைக்கப்படுகின்றன. வினாயகர் சிலைகள், களிமண்ணால் செய்யப்பட்டு, வண்ணந்தீட்டப்படுகின்றன. வளமைக்கும் செழுமைக்குமான தெய்வம், மண்ணின் உடைமையாகின்றார். இச்சிலைகளை மூன்று நாட்கள் வணங்கிவிட்டு, பின்னர் ஆற்றிலோ குளத்திலோ போட்டு விடுகின்றனர்.

பூமாதேவி, எல்லா வளமைக்கும் ஊற்றுக்காலாகக் கருதப்படுகின்றாள். விதைப்பைத் தொடங்குவதற்கு முன்பு, ஒரு பிடி மண்ணைப் பூமாதேவியாகப் பாவித்து வழிபடுகின்றார்கள்: அல்லது ஒரு பிடி சாணத்தின் உச்சியில் அருகம் புல்லைச் செருகி வைத்து வழிபடுகிறார்கள். இவ்வாறு சாணத்தையும் மண்ணையும் வழிபடுவதால், வயலின் வளமை பெருகும் எனப்பாமர மக்கள் நம்புகின்றார்கள்.

**முளைப்பாரி**

தென் தமிழ்நாட்டில் 'முளைப்பாரி' என்னும் திருவிழா கொண்டாடப்படுகிறது. வயலில் நடப்படும் நாற்று ஆரோக்கியமாக வளர்ந்து விளைச்சல் கொடுக்கவேண்டும் என வேண்டி இந்த விழாவைக் கொண்டாடுகிறார்கள். விதைகளை ஏழு அல்லது பத்து நாட்கள் வரை பானைகளில் போட்டு வைத்து முளைக்க வைக்கிறார்கள். இந்த ஏழு நாட்களும், பெண்கள் முக்கியமாகக் கன்னிப் பெண்கள் சில விரதங்களுடன் இந்த விதைகளுக்கு நீர் விடுகிறார்கள். இந்நாட்களில் அவர்கள் புலால் உண்பதில்லை: மது அருந்துவதில்லை. ஏழாம் நாளன்று முளைவிட்ட பானைகள் அனைத்தையும், கன்னிப்பெண், முளைப்பாரிப் பாடல்களைப் பாடிக்கொண்டு, ஊர் வலமாக எடுத்துச் செல்கின்றனர்.

முளைப்பாரிப் பாடல்களில் சில இன்றும் திருநெல்வேலி மாவட்டம் கோயில்பட்டி வட்டத்தில் பாடப்படுகின்றன. இவற்றில், விதைப்பதற்கு முன்னர் மண் எவ்வாறு பக்குவம் செய்யப்படவேண்டும் என்பது விவரிக்கப்பட்டுள்ளது முளைப்பாரிக்கான கரிசல் மண்ணைக் கன்னியர்கள் நீருடன் கலந்து உலக்கையால் குத்திக் கலந்து, தம் கைகளால் எடுத்து, முளைப்பாரி பானைகளில் நிரப்ப வேண்டும். மண்ணின் வளமையிலும் நீரிலும் கன்னியர்களின் மென்மையான கரங்கள் இணையவேண்டும் என்பதை இவை குறிக்கின்றன. இந்தச் சடங்குக்கும், விதை, முளைப்பதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையெனினும், நாற்றுகள் எத்துணை கவனமாக வளர்க்கப்படவேண்டும் என்பதை இது உணர்த்துகின்றது. மேலும், எத்துணைதான் தெய்வ அருள் இருந்தாலும், உடல் உழைப்பு இணைந்தால்தான் உண்மையான பலன் கிடைக்கும் என்பதையும் இச்சடங்கு உணர்த்துகின்றது.

**அறுவடைத் திருநாள் பொங்கல்**

உழவர்கள் தங்கள் உழைப்பின் பலனை அறுவடை செய்து மகிழ்ந்து கொண்டாடும் விழாதான் பொங்கல் திருநாள். தமிழ்நாட்டில் 15 நூற்றாண்டுகளாகப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. அன்று அறுவடை மாதம் இப்போதைவிடச் சற்று முன்னதாக இருந்திருக்கலாம். எப்படியோ தமிழ்நாட்டில் 1500 ஆண்டுகளாக அறுவடைக் காலத்தில் பொங்கல் விழா கொண்டாடப்படுகின்றது. நாட்டுப்புற மக்கள் பொங்கல் திருநாளன்று உழைப்பையும், மனித முயற்சியையும் போற்றும் பாடல்களைப் பாடுகின்றார்கள்.

**நடுகற்கள்**

நாட்டுப் பண்பாட்டின் முக்கியமானதொரு அம்சம், நாட்டுப்புறக் கதைப் பாடல்களாகும். இக்கதைப் பாடல்கள் வீரர்களைப் போற்றுவதற்காக எழுந்தவை. இந்த வீரர்கள் இராமாயணம், மகாபாரதத்தில் வரும் புராண வீரர்கள் அல்லர்; தங்கள் கால்நடைகளையும், பயிர்களையும், மகளிரையும் காப்பாற்றுவதற்காகப் போராடி வீரமரணம் எய்தியவர்கள் இவர்கள். புகழ் பெறுவதற்காக வீரத்தைக் காட்டவில்லை. தங்கள் சொந்த மக்களுக்கு உதவுவதற்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள், இவர்களுடைய உயிர்த்தியாகத்தினாலும், வீரச்செயல்களாலும் பலனடைந்தவர்களும், அவர்களுடைய சந்ததியினரும் அவர்களுடைய நினைவாக நடுகற்கள் நட்டு வணங்கி வழிபட்டார்கள். இந் நடுகற்களில் உயிர்த்தியாகம் புரிந்த வீரர்களின் வீரச்செயல்களும் பெருமையும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. வடஆர்க்காடு மாவட்டம் செங்கத்திலும், தருமபுரி மாவட்டத்தில் பல இடங்களிலும் இத்தகைய நடுகற்கள் பலவற்றைக் காணலாம்.

**மாடன் வழிபாடு**

சாதிப் பூசல்களில் சிலர் மடிந்திருக்கின்றனர். இவர்களுக்கு நடுகற்கள் இல்லை; ஆனால் இவர்களின் நினைவாக 'ஒடுக்கம்' என்னும் கல்லறைகள் எழுப்பப்பட்டுள்ளன. மேலும், இவர்களுடைய வீர வரலாறு, நாட்டுப்புறக் கதைப்பாடல்களிலும், நாட்டுப்புறக் கதைகளிலும் கூறப்படுகிறது. கொடுமையை எதிர்த்துக் கொலையுண்டு மாண்ட வீரர்களையும் சாதி வேற்றுமையால் மாண்டவர்களையும், அவர்களுடைய சந்ததியினர் தெய்வமாக வழிபட்டனர். கொலை செய்தவர்களின் சந்ததியினரும் அவர்களை வணங்குவதுண்டு. இவ்வாறு தோன்றியதுதான் "மாடன் வழிபாடு" ஆகும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்த வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது. மாடன் வழிபாடும் ஒருவகையில் வீர வழிபாடுதான். கொலையுண்டவரின் வீரத்தைப் போற்றி அவரது சந்ததியினர் அவரைத் தெய்வமாக வழிபட்டனர்; கொலையுண்டவரின் ஆவி தங்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பதற்காகக் கொலையாளியின் சந்ததியினரும் கொலையுண்டவரைத் தெய்வமாக வணங்கினர்.

ஒவ்வொரு கிராமத்திலும் மாடன் கோயில் உண்டு. அங்கு அறுவடையையொட்டி மாடனுக்குக் 'கொடை' (படையல்) கொடுக்கிறார்கள். வரலாற்று வீரர்களாக அல்லாமல், குறிப்பிட்ட சமூகத்தினரால் வணங்கப்படும் தெய்வங்கள் இந்த மாடன்கள்தாம். ஒவ்வொரு மாடனும் அம்பிகையுடனோ ஐயப்பனுடனோ தொடர்புடையவன். ஐயனார் 'வாசல்காரன்' என அழைக்கப்படுகிறார்; அதாவது இவர் தேவியின் வாயில் காப்போன் ஆவார். அம்பிகையின் உருவம், மாடன் உருவத்தைவிடப் பெரிதாக இருக்கும். ஆனால், மாடன் மூலமாகவே அம்பிகையை அணுகவேண்டும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு கோயிலில் அம்பிகையின் தலைமையில் இசக்கி, முப்புடாதி, மாரி, காளி முதலிய பல மாடன் தெய்வங்கள் இருப்பதைக் காணலாம். கொடையன்று, அந்தக் கோயிலுள்ள ஒவ்வொரு மாடன் தெய்வத்திற்கும் தனித்தனி பீடங்கள் அமைப்பார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிதம்பரபுரத்தில் ஒரு கோயில் கொடை அன்று 22 மாடன்களுக்குப் பீடங்கள் அமைக்கிறார்கள். போரோ கலகமோ நடந்த இடத்தில் மாடன்களுக்குப் பூசை நடக்கும்போது, அருள்வந்தவர்கள். தீவட்டிகளால் உடலில் அடித்துக் கொண்டுசாமியாடுவதைக்காணலாம்.

வீரர் வழிபாடு, மாடன் வழிபாடு அம்மன் வழிபாடு, வளமைச் சடங்குகள் ஆகியவற்றிலிருந்து நாட்டுப்புறக் கதைப் பாடல்களும், நாடகங்களும் தோன்றின. மனித வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளிலிருந்து நாட்டுப் பாடல்கள் எழுந்தன. இன்றைய நாட்டுப்பாடல்கள், பிறப்பு முதல் இறப்பு வரையில் மனிதவாழ்வின் பலவேறு கட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. தாலாட்டுப் பாடல்கள், குழந்தையின்பால் தாயின் பரிவுணர்வுகளையும், விளையாட்டுப்பாடல்கள் சிறுவர்களின் விளையாட்டுணர்வையும், இளமை—சமூகச் சிக்கல்களைக் காதல் மற்றும் திருமணப்பாடல்களும் முதுமை மற்றும் இழவின் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. வாழ்வின் பல்வேறு கட்டங்களில் மக்களின் பல்வேறு சமுதாய, சாதி, வர்க்க பேத உணர்வுகளை இப்பாடல்கள் பிரதிபலிக்கின்றன. உழவர் பாடல்களும் தொழிலாளர் பாடல்கள், குழுமத்துடன் தனிநபர்களின் நட்புணர்வினையும், உழைப்பின் மேன்மையினையும் வெளிப்படுத்துகின்றன. நாட்டுப்புற வாழ்வின் பெரும்பகுதியைச் சித்திரிப்பது இந்நாட்டுப்பாடல்கள்தாம்.

**நாட்டுப்புறக் கலைகள்**

நம் மக்களில் பெரும்பாலோரின் பண்பாட்டை நாட்டுப்புறப் பண்பாடு என்கிறோம். இப்பண்பாடு, அவர்களின் பாட்டுகள், சடங்குகள், நாடகங்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள் ஆகியவை அடங்கிய நாட்டுப்புற இலக்கியங்களின் வாயிலாக வெளிப்படுகிறது. கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் நாட்டுப்புற இயல் குறித்து விரிவான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நாட்டுப்புறவியல் ஆய்வுகள் குறித்து ஏராளமான வெளியீடுகளும், கட்டுரைகளும், ஆய்வு நூல்களும் வெளிவருகின்றன; கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன; வானொலி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. தமிழ் மக்களின் விரிந்த பண்பாட்டு நீரோட்டதில் நாட்டுப்புறப்பண்பாடுஒருதனிபோக்கு என்பது உணரப்பட்டு வருகிறது.

# யுனெஸ்கோ கூரியர்

**உலகைக் காட்டும் பலகணி**
**ஜூலை—1984**

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென்மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினால் இருபத்தியேழு மொழிகளில் வெளியிடப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| தமிழ் | ஆங்கிலம் | ஹீப்ரு |
| ஃபிரெஞ்சு | பெர்சியன் | கிரோடே |
| ஸ்பானிஷ் | டச்சு | -செர்ப் |
| ரஷ்யன் | போர்த்துகீஸ் | மாசிடோ |
| ஜெர்மன் | துர்க்கிஸ் | னியன் |
| அராபிக் | உருது | செர்போ |
| ஜப்பானிஸ் | கட்டலான் | -கிராட் |
| இத்தாலியன் | மலேசியன் | ஸ்லோவேன் |
| ஹிந்தி | கொரியன் | சீனம் |
| பல்கேரியன் | சுவாஹிலி | |

**விற்பனை விநியோக அலுவலகம்:**
18, கிழக்கு ஸ்பர்டங்க் சாலை, சென்னை-600 031
ஆண்டுச் சந்தா ரூ 21.

**ஆசிரியர் அலுவலகம்:**
யுனெஸ்கோ, பிளாஸ் தெ போந்தனோ,
பாரிஸ்-75700 ஃபிரான்ஸ்.

*பிரதம ஆசிரியர் :* **எதுவார்து கிளிசான்**

*தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர் :*
**மீ. முகம்மது முஸ்தபா**
(மணவை முஸ்தபா)


*அட்டை :* இன்றைய மாலியின் உட்புறக் கழிமுகப் பகுதியிலுள்ள ஷென்னே எனும் சந்தடி மிகுந்த தற்கால நகரத்தில் வாழும் இவ்விளம் பெண், கி.மு. 250—கி.பி. 300இல் களி மண்ணில் செய்யப்பட்ட நுண்ணிய விலங்குப் பொம்மைகளின் எஞ்சிய பகுதிகளை வியப்புடன் பார்க்கிறாள். இவை மேற்கு ஆஃப்ரிக்காவின் மிகப் பண்டைய நகரான ஷென்னே—ஷெனோவின் (பண்டைய ஷென்னே) அண்மைப் பகுதியில் கிடைத்தன. 12ஆம் பக்கக் கட்டுரை காண்க)


நிழற்படம்: மிஷேல், ஓபின் கிர்ட்லி © எ.என்.ஏ. பாரிஸ்.



**The Unesco Courier**


## ஆசிரியர் மடல்

மனிதன் வரலாற்றைச் சார்ந்த ஒரு விலங்கு. ஆஃப்ரிக்க மனிதன் இதற்கு விதிவிலக்கு அல்லன். உலகின் பிறபகுதிகளில் வாழ்ந்த மனிதனைப் போல் அவனும் தன் வரலாற்றையும் அதைப் பற்றிய தன் சொந்தக் கருத்தையும் வகுத்துக் கொண்டான். ஆயினும் உலகின் கற்பனையும் தப்பெண்ணங்களும் ஆஃப்ரிக்க வரலாற்றைத் திரித்து, அல்லது ஆஃப்ரிக்காவிற்கு வரலாறே இல்லாததுபோல் காட்டுகின்றன.

யுனெஸ்கோ அரிது ஆராய்ந்து நுணுகித் தயாரித்துள்ள "ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா" எனும் நூலின் எட்டுத் தொகுதிகளும் தொடர்ந்து வெளி வந்தமையால் இக்குறை தவிர்க்கப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ பொது மாநாடு இந்த 'ஹிஸ்டரி' எனும் நூலை எழுதித் தயாரிக்கும் அறிவார்ந்த பொறுப்புமுழுவதையும் பன்னாட்டு அறிவியல் குழுவிடம் ஒப்படைத்தது. அக்குழுவின் உறுப்பினருள் $\frac{2}{3}$ பகுதியினர் ஆஃப்ரிக்கர். அதன் செயலாளர் மோரிஸ் ஷ்லேலே.

யுனெஸ்கோ பொது மாநாட்டின் ஆணைக்கேற்ப அக்குழு தனது முதல் அமர்விலே அப்பணியின் முக்கியஇயல்புகளை வரையறுத்தது. அவற்றை இங்கு எடுத்துரைப்பது நல்லது:

■ இவ்வரலாறு மிக உயர்ந்த அறிவியல் குறிக்கோளுடன் எழுதப்படுமாயினும், அனைத்தையும் விரித்துரையாது, கொள்கை நோக்கைத் தவிர்க்கும் தொகுப்பு நூலாக இருக்கும். பல வகைகளில் இது அறிவின் இன்றைய நிலையையும் ஆராய்ச்சியின் போக்குகளையும் காட்டும் சிக்கல் விளக்க நூலாகஇருக்கும். கொள்கையிலும் கருத்திலும் வேறுபாடு இருப்பின் அதை எடுத்துக்காட்ட இது தயங்காது. இவ்வாறாக இது வருங்காலப்பணிக்கு வழிவகுக்கும்.

■ ஆஃப்ரிக்கா முழுவதையும் ஒரே பகுதியாக இது ஆராயும். அக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள வரலாற்றுத் தொடர்புகளைக் காட்டுவது இதன் நோக்கமாகும். இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் இவற்றைத் தனித்தனியாகப் பிரித்துள்ளன. பிற கண்டங்களுடன் ஆஃப்ரிக்கா கொண்டிருந்த வரலாற்றுத் தொடர்புகளால் ஏற்பட்ட பரிமாற்றங்களையும் விளைவுகளையும் ஆய்ந்து, அவற்றால் ஆஃப்ரிக்கா எவ்வாறு மனித இன வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்பதையும் இந்நூல் காட்டும்.

■ குறிப்பாக 'ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா' கருத்துகள், நாகரிகங்கள், சமூகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வரலாறாக இருக்கும். இது வாய்மொழி மரபின் சிறப்பையும் ஆஃப்ரிக்க கலையின் பன்முக வடிவங்களையும் அறிமுகப்படுத்தும்

■ "ஹிஸ்டரி" அகநோக்குடையது. இது அறிவுக் களஞ்சியமாயினும் பெருமளவு ஆஃப்ரிக்க எழுத்தாளர்கள் தமது நாகரிகத்தைக் காணும் நோக்கிலே எழுதப்படும். பன்னாட்டு முயற்சியினால் தயாரிக்கப்பட்டு, இன்றுள்ள அறிவுத் திரட்டைப் பயன்படுத்தி எழுதப்படும் இந்நூல் ஆஃப்ரிக்கப் பண்பாட்டு மரபுச் செல்வத்தை ஏற்றுக் கொள்ளும் நூலாகவும் அமையும்...............

தொகுதி I, 'மெத்தடாலஜி அண்டு ஆஃப்ரிக்கன் ப்ரீஹிஸ்டரி'யும், தொகுதி II 'ஏன்ஷியன்ட் சிவிலிசேஷன்ஸ் ஆஃப் ஆஃப்ரிக்காவும் ஏற்கெனவே வெளிவந்து விட்டன. (யுனெஸ்கோ கூரியர் 1979 செப்டம்பர்-அக்டோபர் இதழ் காண்க), தொகுதி IV ஆஃப்ரிக்கா ஃப்ரம் டிவெல்ஃப்த் டு திஸிக்ஸ்டீன்த் செஞ்சுரி', தொகுதி VII 'ஆஃப்ரிக்கா அண்டர் கலோனியல் டாமினேஷன்' இவ்வாண்டு வெளிவரும். யுனெஸ்கோ கூரியரின் இவ்விதழில் இவ்விரு தொகுதிகளின் சில பகுதிகளை வெளியிடுகிறோம். தொகுதி IV இன் பகுதிகள் மேற்கு, தெற்கு ஆஃப்ரிக்கப் பண்டைய நாகரிகங்கள்பற்றிப் புது விளக்கம் தருகின்றன. தொகுதி VII இன் பகுதிகள் படையெடுத்துக் குடியேறியவர்களை ஆஃப்ரிக்கர் எதிர்த்ததை விளக்குகின்றன.

### ஆஃப்ரிக்கா 12 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை


4 நானூறு ஆண்டு வளர்ச்சியும் எழிலும்
*—ஜிப்ரில் தாம்சிர் நியான்*

5 ஐஃப்—பெனின்: இரு அரசுகள், ஒரு பண்பாடு
*—ஆலன் ரைடர்*

8 ஸிம்பாப்வேயின்மறைபொருள்கள்
*-ப்ரையன் ஃபகன்*

11 ஐரோப்பா முதல் கத்தே வரை வாணிக இணைப்புகள்

12 மேற்கு ஆஃப்ரிக்காவின் மிகப் பண்டைய தலைநகர்


### அந்நிய ஆட்சியின் கீழ் ஆஃப்ரிக்கா, 1880—1935


14 குடியேற்ற அறைகூவல்
*—ஆல்பெர்ட் ஆது போஹென்*

17 நிலப்போட்டி
*-காட்ஃப்ரே என். உஸோய்க்வே*

ஒரு கண்டம் எதிர்க்கிறது

26 வட ஆஃப்ரிக்கா : நீண்ட போராட்டம்
*—அப்தல்லா லாருய்*

27 மேற்கு ஆஃப்ரிக்கா வாழ்வுப் போர்
*-எம்'பே கயே, ஆல்பெர்ட் ஆது போஹென்*

30 கிழக்கு ஆஃப்ரிக்கா: சூழ்ச்சித் திறமும் எதிர்ப்பும்.
*—ஹென்றி ம்வான்ஸி*

32 குடியேற்ற மரபு
*—ஆல்பெர்ட் ஆது போஹென்*

2 வாழவேண்டிய காலம்...
கரீபியன்: *கறுப்பர் குடிசைத் தெரு*



தென்மேற்கு நைஜீரியநகரான ஓவோவில் செய்யப்பட்ட (17.4 செ.மீ. உயரமுள்ள) இம் மட்பாண்டத் தலை பண்டைய ஐஃப் கலை மரபில் உள்ளது. ஓவோ கலையானது ஐஃப், பெனின் ஆகிய இரு பெரும் மையங்களின் கலைகளுக் கிடையே அமைந்த பாலமாக இருந்ததெனக் கருதப்படுகின்றது.

நிழற்படம் 'நைஜீரியா' இட்ஸ் ஆர்கியாலஜி அண்டு இயர்லி ஹிஸ்டரி' ©யிலிருந்து எடுக்கப்பட்டது. ஷா 1978, லாகோஸ் அருங்காட்சியகம்.

# நானூறு ஆண்டு வளர்ச்சியும் எழிலும்

ஜிப்ரில் தாம்சிர் நியான்

12 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை ஆஃப்ரிக்காவின் வரலாற்றில் முக்கிய மான காலமாகும். இந்நான்கு நூற்றாண்டுகளிலும் ஆஃப்ரிக்காவில் ஓர் ஒளிமயமான நாகரிகம் எழுந்து வளர்ந்தது. ஆஃப்ரிக்காவின் வடக்கிலும், கிழக்குக் கரைகளிலும் இஸ்லாமிய ஆதரவில் வணிக நகரங்கள் தோன்றின. இவை ஆஃப்ரிக்காவை உலக வணிகப் பாதைகள் சந்திக்குமிடமாக்கின. பெரு வணிகக் கூட்டங்கள் சகாராவைக் கடந்து சென்றன. இவை வடக்கை சூடானுடனும், ''கறுப்பர் நில''த்தை கானா, மாலி தங்கச் சுரங்கங்களுடனும் இணைத்தன.

வாணிகம் உச்சநிலையை அடைந்திருந்தது. எல்லா வகைப் பொருள்களிலும் நடைபெற்ற வாணிகம் கண்டத்தின் பல்வேறு பகுதிகளை இணைத்தது.

ஆஃப்ரிக்காவில் நகர்களும், அரசுகளும் பேரரசுகளும் பிறந்துவளர்வதற்கு இஸ்லாம் காரணமென்று வரலாற்றறிஞரும் ஆராய்ச்சியாளரும் நீண்டகாலமாகக் கருதிவந்தனர். ஆனால் இஸ்லாமின் செல்வாக்குப் பகுதிக்குத் தொலைவில் அட்லாண்டிக் கரையிலும் தெற்கு ஆஃப்ரிக்காவிலும் அரசுகளும் நகர்களும் தோன்றின. இவை சூடான் பகுதியிலிருந்தவை போன்று வளர்ச்சியும் நிறுவன அமைப்பும் பெற்றிருந்தன. இங்குதான் ஐஃப், பெனின் நாகரிகங்கள் தோன்றி, 12 முதல் 14ஆம் நூற்றாண்டு வரை உச்சநிலையிலிருந்தன. இவற்றின் கலை அருந் தனித்தன்மை வாய்ந்த மரபாக மலர்ந்தது. அகழ்வாராய்ச்சியின் பயனாக இன்று, பண்டைய மோனோமடாப்பா பேரரசான ஸிம்பாப்வேயின் நாகரிகம் படிப்படியாக தனது இரகசியங்களை வெளியிட்டு வருகின்றது. யாத்ரிகரும், பயணம் செய்த வணிகரும், வணிகப் பரிமாற்றமும் மேற்கு ஆஃப்ரிக்காவுக்கும் மாக்ரெபுக்கும், ஸிம்பாப்வேக்கும் கிழக்கு கரைக்குமிடையே நிலையான தொடர்பைக் ஏற்படுத்தினர் என்பது இன்று நமக்குத் தெரிகின்றது.



நைஜீரியத் தலைநகர், லாகோஸ் நங்கை

நிழற்படம் ருனோ பார்பே மாக்னம், பாரிஸ்

---

*5 முதல் 11ஆம் பக்கம் வரை, யுனெஸ்கோவின் 'ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா'வின் 'ஆஃப்ரிக்கா ஃப்ரம் தி டுவெல்ஃப்த் டு தி சிக்ஸ்டீன்த் செஞ்சுரி' எனும் 4ஆம் தொகுதியின் இரு அதிகாரங்களின் பகுதிகளையும், அக்காலத்தில் கண்டங்களுக்கிடையே நிகழ்ந்த பரிமாற்றங்களில் ஆஃப்ரிக்காவின் பங்கை ஆயும் 3ஆம் அதிகாரத்தின் சுருக்கத்தையும் தருகின்றோம். பேராசிரியர் டி.டி. நியான் 4ஆம் தொகுதியின் பொறுப்பாசிரியர்; இதன் ஆங்கிலப் பதிப்பு இவ்வாண்டின் இறுதியில், யுனெஸ்கோ, ஹைனமன், (லண்டன்) கலிஃபோர்னியப் பல்கலைக்கழக அச்சகம் ஆகியவற்றின் இணை பதிப்பாக வெளிவரும் (பின் அட்டை உட்புறம் பார்க்க).*

# ஐஃப்—பெனின் : இரு அரசுகள், ஒரு பண்பாடு

ஆலன் ரைடர்

**இன்றைய நைஜீரியாவின் ஒயோ மாநிலத்திலுள்ள ஐஃப் எனும் நக்ரை இன்னும் யோருபா இனத்தோர் புனித நகராகக் கருதுகின்றனர். இது 11ஆம் நூற்றாண்டிலிருந்து, தழைத்தோங்கிய ஒரு நாகரிகத்தின் தலைநகராக இருந்தது. 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐஃப் கலைஞர்கள் மெழுகு வார்ப்பு முறைப்படி புகழ்மிகு மட்பாண்டத் தலைகளையும், எழில் வெண்கலச் சிலைகளையும் செய்தனர். இம்முறை 13ஆம் நூற்றாண்டில் செழிக்கத் தொடங்கிய பெனின் அரசிற்குப் பரவியது. அங்கு மிக உயர்ந்த வெண்கலக் கலை 500 ஆண்டுகளாகத் தழைத்தோங்கியது.**

ஐஃபின் வரலாறு யோருபாவின் பொது வரலாற்றில் நடுவிடம் பெற்றிருப்பினும், அதைப்பற்றி நமக்கு மிகக் குறைவாகவே தெரிந்திருப்பது வியப்பாகவே இருக்கின்றது. அவ்வரசை நிறுவிய புராண வீரர் ஒதுதுவாவைப் பற்றியும் அவருக்குப் பின் உடனே பதவிக்கு வந்தவர்களைப் பற்றியும் ஓரளவு விவரங்கள் கிடைத்திருப்பினும், அதற்குப் பிற்காலத்தைப்பற்றி வாய்மொழி மரபு வாயிலாக மிகக் குறைந்த தொடர்ச்சியற்ற விவரங்களே கிடைத்துள்ளன. அகழ்வாராய்ச்சி ஓரளவு இந்த இடைவெளிகளை நிரப்பியிருப்பினும், அவ்வாராய்ச்சி இன்னும் மழலைப் பருத்திலே இருக்கின்றது.

அவ்வரசின் வரலாற்றில் முதல் பருவம் 11ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. அங்கு குடியேற்றங்கள் சிதறிக் காணப்படுகின்றன. தரைக்கு மட்பாண்டத் துண்டுகள் பரவலாகப் பயன்பட்டன. கண்ணாடி மணித் தொழிலும், இயற்கை வடிவ உருவங்களையும், குறிப்பாக மனிதத் தலையையும் செய்த அரிய மட்பாண்டக் கலையும் செழித்தோங்கின. இக்கலையின் காரணமாக, ஐஃப், நோக் ஆகிய பண்பாடுகளுக்கிடையே 1000 ஆண்டு இடைவெளி இருப்பினும், சில வேளை இரண்டும் தொடர்பு படுத்தப் படுகின்றன.

ஐஃபின் மட்பாண்டக் கலைக்கும், யோருபா பண்பாட்டின் பிற மையங்களில் காணப்படும் கலைக்கும் மிக நெருங்கிய ஒற்றுமை இருப்பது குறிப்பிடத்தக்கது ஐஃப் கலை இயல்புள்ள தலைகள் இக்கின்றன. ஓஷோக்போவின் அருகிலுள்ள அயர், இக்காரேயின் அருகிலுள்ள இதான்ரே ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. அண்மையில் ஓவோவில் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மட்பாண்டச் சிற்பங்கள் கிடைத்திருப்பது சுவையான செய்தியாகும்.

இக்கலை இயல்பு விரிவாகப் பரவியிருப்பது ஐஃபின் செல்வாக்குப் பரப்பைக் காட்டுகிறது. ஆனால் இதை ஐஃப் கலை இயல்பெனக் கருதாமல், யோருபா மக்களிடையே பரவிய சமய வழிபாட்டுச் சார்புள்ள பண்பாட்டு இயல்பெனவும் கூறலாம்.

ஐஃபில் மட்பாண்ட உருவங்களுடன் காணப்படும் மட்பாண்டத் துண்டு தரைகள் அந்நகருக்கு மட்டும் உரியவை அல்ல. அவை போன்ற தரைகள் ஓவோ, இஃபாக்கி, இக்கரின், ஏத், இட்டாஜி, எகிட்டி, இக்காரே, இன்னும் தொலைவிலுள்ள பெனின் குடியரசிலுள்ள கேட்டு, டாசா ஸூம், டோகோவிலுள்ள காப்ரேஸ் மாவட்டம் ஆகிய இடங்களிலெல்லாம் காணப்படுகின்றன.

ஐஃபில் காணப்பட்ட இத்தரைகளுள் மிகத் தொன்மையானவை கி.பி. 1100-ஐச் சேர்ந்தவை. அண்மையானவை சோளக் காம்பு வடிவம் பதிக்கப்பட்டவை; இவை 16ஆம் நூற்றாண்டுக்கு முந்தியவையாக இருக்க முடியாது. பிற்காலத்தில் இத்தரைகளும், மட்பாண்டக்



இப்படம்: மார்க், எவ்லின் பெர்ன்ஹீம் © ராஃபோ, பாரிஸ்.

**நோக் கலை (கி.மு. 900—கி.பி.200) நைஜீரியக் கலையில் மிகப் பண்டையது. இது மத்திய நைஜீரியாவில் ஸாரியா பகுதியிலுள்ள சிறு கிராமத்தின் பெயரைப் பெற்றுள்ளது. அங்குதான் முதன் முதலில் 1943இல் இத்தகைய சிற்பம் கண்டெடுக்கப்பெற்றது. நோக் நாகரிகம் பாவ்ச்சி மேட்டு நிலத்தில் மட்டும் நிலவியதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் அதைவிடப் பரந்த பகுதியில் பரவியிருந்ததாக இப்போது நம்பப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகள் நிலவிய இந்நாகரிகம் இச்சிற்பங்களை, கி.பி. 12—15ஆம் நூற்றாண்டுகளில் தென்மேற்கில் செழித்தோங்கிய ஐஃபின் மட்பாண்டக் கலையுடன் இயல்பாக இணைக்கின்றது. இடப்புறம் : ஜோஸில் தேசிய அருங்காட்சியகத்திலுள்ள நோக் மட்பாண்டத் தலை (19.5. செ. மீ. உயரம்).**

**ஆலன் ரைடர்** ஆங்கிலேயர்; பிரிஸ்டல் பல்கலைக்கழகப் பேராசிரியர்; மேற்கு ஆஃப்ரிக்க வரலாற்று வல்லுநர். இப்பகுதியின் குடியேற்றக் காலத்திற்கு முந்திய, குடியேற்றக் கால வரலாறு பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார்.



நிழற்படம் © மனித அருங்காட்சியகம், பாரிஸ்



நிழற்படம் © ஃப்ரோபெனியஸ் நிலையம், ஃப்ராங்ஃபர்ட்
மெய்ன், ஜெர்மானியக் கூட்டாட்சி குடியரசு



மட்பாண்டத்திலோ, கல்லிலோ, வெண்கலத்திலோ செய்யப்பட்ட ஐஃப் சிற்பங்கள் (12—15ஆம் நூற்றாண்டு) உருவக் கலையில் உயர்ந்தோங்கி விளங்கின. உண்மைத் தோற்றமும் மரபு வடிவமும் அமைந்த ஐஃப் தலைகள் தோற்றச் சிறப்பும் சிற்ப நுட்பமும் உடையன. உச்சியில் வலப்புறமுள்ள தலையை ஜெர்மானிய மனித இனவியலார் லியோ ஃப்ரோபெனியஸ் கண்டெடுத்தார். இவர் 1910இல் ஐஃப் சிற்பத்தை உலகிற்கு வெளிப்படுத்தினார். ஐஃப் கலையில் பெரும்பாலும் காணப்படுவது போல், இத்தலையில் நீளப் போக்கில் கோடுகள் உள்ளன. மேலே: 'ஓனி'யும் (யோருபா இனத்தவர் இன்னும் ''தந்தை''யாகக் கருதும் ''அரசன்'') அரசியும்; மேலே வலப்புறம்: ஐஃப் மரபில் வளர்க்கப்பட்டு அமர்ந்திருக்கும் உருவம் (53.7 செ.மீ. உயரம்) கறுப்பு ஆஃப்ரிக்காவின் அரிய வெண்கலச் சிற்பமாகும். நைஜர் ஆற்றங்கரையிலுள்ள டாடாவில் செய்யப்பட்ட இயற்கைத் தோற்றமுள்ள இச்சிறு சிலை, மக்களின் கருவளத்தையும் பயிர்வளத்தையும் வளர்க்கும் ட்சோடே எனும் வீரனைக் குறிக்கக்கூடும்.



தென்கிழக்குநைஜீரியாவில் அவ்காவின் அருகிலுள்ள இக்போ—உக்வு எனும் கிராமத்தில் கிடைத்த எழில்மிகு வெண்கலப் படைப்புகள். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பரந்த, ஆற்றல்மிகு அரசு இப்பகுதியில் செழித்தோங்கியது என்பதைக் காட்டுகின்றன. இக்போ—உக்வு இதன் சமயத் தலைநகராக இருந்திருக்கலாம். வலப்புறம்: (27செ.மீ—உயரமுள்ள) ஆணும் (இங்கு காட்டப்படாத) பெண்ணும் உள்ள வெண்கலத் தாங்கி. மேலே: வெண்கல வளைவு.



நிழற்படம் இக்போ—உக்வுவில் எடுக்கப்பெற்றது.
© ஷா, 1970

கலையும் மறைந்தது. 16ஆம் நூற்றாண்டில் ஐஃபில் நிகழ்ந்த அழிவினைக் குறிக்கக்கூடும்.

மட்பாண்டச் சிலைகளைப் போலவே காணப்படும் 25 ஐஃப் வெண்கலத் தலைகள் (இவை பித்தளை செம்பினால் செய்யப்பட்டவை) • அந்த அழிவுக்கு முந்திய ஆண்டுகளில் செய்யப்பட்டிருக்கலாம். அப்போது போர்ச்சுக்கீசியர் பித்தளையையும் செம்பையும் இறக்குமதி செய்துவந்தால், வார்ப்பு உலோகம் மிகுதியாகக் கிடைத்தது. இப்பண்பாட்டை அழித்த நிகழ்ச்சிகளின் தன்மையை ஊகித்துத்தான் அறிய முடியும். அந்நிய படையெடுப்பே மிகப் பொருத்தமான விளக்கமாகும்.

மேலே கூறிய விளக்கம் சரியெனில், ஐஃபில் இப்போது ஆறாம் வம்சம் 16 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதாகும். அதுவே அரண்மனையை இப்போதுள்ள இடத்தில் கட்டி, நகரின் நடுப்பகுதியை சுற்றி சுவர்களை எழுப்பியது. ஒரு வேளை இப்புதிய வம்சம், முந்திய வம்சத்தின் அரசியல், சமூக நிறுவனங்களைப் பேணியிருக்கக்கூடும். ஆயினும் கலையிலும் அரசியல் ஏற்பாடுகளிலும் முந்திய அரசு பிந்திய அரசை முற்றிலும் ஒத்திருந்ததெனக் கூற இயலாது. ஐஃப் உட்பட, யோருபா முழுவதும் அரியணை அமர்த்தும் சடங்குகளும் அரச விருதுச் சின்னங்களும் இன்று ஒன்று போலிருப்பதாலும், இச்சின்னங்கள் ஐஃபின் முற்கால வரலாற்றில் அரசர்கள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் சின்னங்களைப் போலில்லையாதலாலும், அரசுகள் முற்கால ஐஃப் அரசைப் போல் அமைந்திருந்தாலும், தற்கால யோருபா குடியாட்சி பிற்கால முடியாட்சியின் அடிப்படையிலே அமைந்ததென முடிவுகூறலாம்.

மேற்கு சூடானில் 15,16ஆம் நூற்றாண்டுகளில் அரசுகள் தோன்றி மறைந்ததினால் கினி காட்டுப் பகுதியில் அரசு உருவானது பாதிக்கப்பட்டிருக்கலாம். அவை தோன்றிப் பரவியதனால், அதே காலத்தில் அவற்றின் அருகிலிருந்த தென் அரசுகளில் கிளர்ச்சிகள் தோன்றியிருக்கக்கூடும். 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யோருபாக்களை நியூப் மக்கள் பழைய ஓயோவிலிருந்து விரட்டினர் என்றும், 75 ஆண்டுகள் கழித்து அவர்கள் தம் தலைநகருக்குத் திரும்புமுன், புல்வெளி அரசுகளின் படைவலிமையான குதிரைப் படைக்கு ஓயோக்கள் முக்கியத்துவம் கொடுத்து, தம் படையைச் சீரமைத்தனர் என்றும் நமக்குத் தெரியும். ஓயோக்கள் நியூப்புகளிடமிருந்து முன்னோர் வழிபாட்டைப் பின்பற்றினர்; புத்துயிர் பெற்ற அவர்களது அரசின் சில இயல்புகளும் நியூப்புகளிடமிருந்து பெறப்பட்டிருக்கலாம்.

போர்ச்சுக்கீசியர் கடற்கரையில் முதன் முதலில் இறங்கிய அரசு பெனின்; அவர்கள் விரைவில் அதனுடன் தூதாண்மை, வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஐஃபிற்குத் தென்மேற்கிலிருந்த பெனின் ஒருவேளை 12ஆம் நூற்றாண்டில் முடியரசாகியிருக்கலாம்.

15ஆம் நூற்றாண்டில் ஒரு பெரும் கிளர்ச்சி வரம்புக்குட்பட்ட இக் குடியாட்சியை ஒரு வல்லாட்சியாக மாற்றியது; அதனால் இச்சிறிய அரசு பெரிய குடியரசாக மாறியது. தன் தம்பியைக் கொன்ற அரியணை கவர்ந்த எவுவார் மன்னனே இம்மாற்றத்திற்கு காரணமென



நிழற்படம் © வேர்னர் ஃபோர்மன் ஆவணக் களஞ்சியம், லண்டன்.

பெனின் அரசவையில் பலவெண்கலக் கலைப் படைப்புகள் 'ஓபர்வின் (அரசனின்) புகழுக்காக அர்ப்பணிக்கப்பட்டன. பெனின் உருவங்களில் இயற்கைத் தோற்றம் இருப்பினும் பொதுவாக மரபு வடிவமே மிகுந்திருந்தது; இக்குழலோன் (1600. உயரம் 61.5 செ.மீ) ஓபாவின் அரசவையைச் சேர்ந்தவன்.

மரபுவழிச் செய்தி கூறுகின்றது. இப் போராட்டத்தின்போது தலைநகரின் பெரும் பகுதி அழிந்துவிட்டதாகக் கூறுகின்றது.

எவுவார் தலைநகரைப் புதிய முறையில் கட்டி எடோ எனும் பெயரிட்டார். இன்றும் அப்பெயரே நிலவுகிறது. நகரின் நடுவில் பெரும் குழியும் அரண்களும் அமைக்கப்பட்டன. ஐஃபின் நகர மதிலைப் போலவே இவை பழைய அமைப்புகளுக்கு குறுக்கே இருந்தன. அரண்களுக்குள்ளே ஓர் அகன்ற பாதை அரண்மனையை "நகரி"லிருந்து பிரித்தது. இந்நகரில் அரசனுக்குப் பணிபுரிந்த வணிகக் கழகங்களும், வழிபாட்டு வல்லுநரும் வாழ்ந்த குடியிருப்புகள் இருந்தன. அரண்மனையானது ஆடை அறைகள், அரசரின் தனி அலுவலர் உறைவிடம், அந்தப்புரம் என்று மூன்று பகுதிகளாக அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றிலும் அலுவலர் மூன்று தரங்களாகப் பகுக்கப்பட்டிருந்தனர். இவை எடோ கிராமங்களிலிருந்த தரங்களைப் போலிருந்தன.

எவுவாரின் பெருஞ்சுவரும் அரண்மனையின் பெரும் பகுதியும் 15ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றதாகக் கூறும் மரபுவழிச் செய்தியை அகழ்வராய்ச்சி உறுதிப்படுத்துகிறது. பித்தளையிலும் வெண்கலத்திலும் மெழுகு வார்ப்பைப் பயன்படுத்திய புகழ்மிகு பெனின் கலை வளர்ச்சி பற்றியும் அது விளக்கியுள்ளது. அங்கு கிடைத்த 16 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய எல்லா பித்தளைப் பொருள்களும் உலையில் அடித்துச் செய்யப்பட்டவை; வார்க்கப்பட்டவை அல்ல. மெழுகு வார்ப்புக் கலை முற்காலத்திலே தெரிந்திருக்குமெனினும், 16ஆம் நூற்றாண்டில்தான் ஐரோப்பிய பித்தளை மிகுதியாக இறக்குமதியானபோது இக் கலை சிறப்படைந்தது என்று அகழ்வாராய்ச்சியிலிருந்தும், இன்னும் இருக்கும் பெருந்திரளான பெனின் பித்தளைப் பொருள்களின் கலையியல்பு ஆய்விலிருந்தும் புலனாகின்றது.

பொதுவாக கறுப்பு ஆஃப்ரிக்க கலையில் மரச் சிற்பமே உயர்ந்து விளங்குகிறது. ஆனால் ஐஃப்—பெனின் நாகரிகம் இதற்கு ஓர் அரிய விதிவிலக்கு. ஏனெனில் அதில் மட்பாண்ட, வெண்கலக் கலைப் படைப்புகளைக் காணலாம். இதனால் கறுப்பு ஆஃப்ரிக்க கலை வரலாற்றில் இப்பகுதி தனிச்சிறப்பு பெறுகின்றது.

(தொடர்ச்சிIIIஇணைப்புப் பக்கம்பார்க்க)



# ஸிம்பாப்வேயின் மறைபொருள்கள்

*தெற்கு ஆ∴ப்ரிக்காவின் உள்ளே மையத்தில், இஸ்லாமிய, கிறித்துவ ஆட்சியின் செல்வாக்குப் பகுதிகளுக்கப்பால், ஸாம்பஸி, லிம்போப்போ ஆறுகளின் பள்ளத்தாக்குகளில் பல நூற்றாண்டுகளாக பல உயர்நாகரிகங்கள் வளர்ந்தன. இவற்றுள் புகழ் மிக்கது பெரும் ஸிம்பாப்வே நாகரிகம். புதை பொருளாய்வாளர், மொழியியலார், மனித இனவியலார். ஆகியோரின் அம்முயற்சியால், தொல் பெருங் கட்டிடங்களுள்ள பெரும் ஸிப்பாப்வேயின் மறை பொருள்கள் படிப்படியாக வெளிப்பட்டு வருகின்றன.*

**ஸி**ம்பாப்வேயின் எழுச்சிக்கு அடிப்படைக் காரணங்கள் எதுவாக இருந்தாலும், அது ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் என்பதில் ஐயமில்லை. இப்பகுதி, பெரும் பாறைகளுடன் அமைந்த நீண்ட கருங்குன்றில் எடுப்பான உள்ளரண்களுடன் விளங்குகிறது. மேற்குக் கோடியிலுள்ள அரண் மிகப் பெரியது; இது பருத்த கற்சுவர்களாலானது. இங்கு இரும்புக் காலத்தின் பிந்திய காலக் குடியிருப்புச் சின்னங்கள் காணப்படுகின்றன. இதன் அடிப்படையில், ஸிம்பாப்வேயின் வரலாற்றை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

இங்கு மக்கள் குடியேற்றம் தீவிரமாக் ஏற்பட்டது 11ஆம் நூற்றாண்டில் எனலாம். ஆனல், 13ஆம் நூற்றாண்டு வரைக் கற் சுவர்கள் கட்டப்படவில்லை. அது வரையிலும், சிறிய சிறிய மண் குடிசைகளே கட்டப்பட்டன. மேற்குப் பகுதியிலுள்ள கல்லரணும் அதன் பின்னரே எழுப்பப்பட்டது. குன்றுக்குக் கீழே பள்ளத்தாக்கில் கட்டிடங்கள் கட்டப்பட்டதும் 13, 14ஆம் நூற்றாண்டுகளில்தான்.

அடுத்த நூற்றாண்டில் பெரும் மதிலரண் படிப்படியாகக் கட்டப்பட்டது. இந்த மதிலரணின் சராசரி உயரம் 7.3 மீட்டர்: கனம் அடிமட்டத்தில் 5.5 மீட்டர், உயரத்தில் 1.3 முதல் 3.6 மீட்டர். 52 மீட்டர் நீளப்பகுதி, உத்திரத்தின் பாணியில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. முடிவடையாத மதில் சுவருக்குப் பதிலாகப் புதிய மதில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது இரு சுவர்களுக்கிடையிலான இடைகழியாக அமைந்துள்ளது. இது, பெரும் மதிலரணுக்கு மணிமுடியாக விளங்கும் கூம்பு வடிவ கோபுரம் வரைச் செல்கிறது. பெரும் மதிலரண், பல சிறுசிறு அரண்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கழிகளாலும் மண்ணாலும் கட்டப்பட்ட பல இல்லங்





நிழற்படம் ஜார்ஜ் கெர்ஸ்டர் © ரஃபோ, பாரிஸ்

## ப்ரையன் ஃபாகன்

களின் அடித்தளங்கள் காணப்படுகின்றன. இவை ஸிம்பாப்வே அரசர்களின் குடியிருப்பு இல்லங்களாக இருக்கலாம்.

ஸாம்பஸி—லிம்போபுபோ ஆற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படும் 150 பண்டைய இடிபாடுகளில் மிகப்பெரியது. ஸிம்பாப்வே ஆகும். ஸிம்பாப்வேக்கும், மாஷோனாலாந்துக்கும் அருகில் ஒன்று முதல் ஐந்து மதிலரண்கள் கொண்ட வேறு சிதைவுகளும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் கட்டுமானங்கள், ஸிம்பாப்வே பாணியில் அமைந்துள்ளன. இங்குக் கிடைத்துள்ள பொன் அணிகலன்கள், செப்பு வளையல்கள் கண்ணாடி ம்ணிகள், சுட்ட மண்பாண்டங்கள், நூல் சுற்றும் கதிர்கள் போன்றவை ஸிம்பாப்வே பண்பாட்டுக்குச் சான்று பகர்வன். ருவாங்கா, சிப்பாட்சே பகுதிகளில் கால்நடை வளர்ப்பு முக்கியமாக நடைபெற்றுள்ளது. ஐந்து இடங்களில் நடைபெற்ற புதைபொருளாராய்ச்சிகள் மூலம், இங்கு 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 15 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் குடியிருப்புகள் கட்டப்பட்டன என்பது தெரிய வருகிறது. சில கட்டிடங்கள் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

இந்தச் சிதைவுகள் அனைத்தும் சிறியவை: இங்கு மிகக் குறைந்த மக்களே வாழ்ந்தனர். இவர்கள் கற்கள் மிகுதியாகக் கிடைக்கும் குன்றுகளினடியில் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இக் குடியிருப்புகள் மிகச்சிறியனவாக இருந்தமையால், இவை பொருளாதாரத்தில் தனித்து வாழ முடியவில்லை.

---

**ப்ரையன் ஃபாகன்** ஆங்கிலேயர்; அமெரிக்கா சான்டா பார்பராவிலுள்ள கலிஃபோர்னியப் பல்கலைக் கழக மனித இனவியல் பேராசிரியர்; மனித இனவியலாரும் அகழ்வாய்வாளருமான இவர் கிழக்கு, தெற்கு ஆஃப்ரிக்காவின் இரும்புக் கால, கற்காலப் பண்பாடுகள் பற்றிப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார்.

ஸிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயின் தெற்கில் பெரும் ஸிம்பாவேயின் கல்லரண்களின் அழிபாடுகளைக் காணலாம். 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டில் இரும்புக் கால மக்கள் இங்கு குடியேறினர். 1300ஆம் ஆண்டில் பெரும் ஸிம்பாப்வே ஆற்றலும் செல்வாக்கும் மிகுந்த அரசாக இருந்தது. இப்பகுதியிலும் இதன் அருகிலுமுள்ள அழிபாடுகளில் சீன, பாரசீக, சிரிய நாடுகளின் கண்ணாடியும் பீங்கானும் அகழ்ந்தெடுக்கப்பெற்றன. இதிலிருந்து, பெரும் ஸிம்பாப்வே பகுதி கிழக்கு ஆஃப்ரிக்க கரையோர வாணிகத்தில் பெரும் பங்கு பெற்றதெனத் தெரிகின்றது. 14ஆம் நூற்றாண்டில் வாணிகம் கண்டத்தின் உட்புறத்திலும் நடைபெற்றது. மேலே இடப்புறம்: 7மீட்டர் உயரமுள்ள அரண்கள் சூழ்ந்த பெரும் .கோட்டையின் அழகிய அழிபாடுகளின் வான்தோற்றம். மேலே: வெளியரணுக்கும் அதனருகிலிருக்கும் முடிக்கப்பெறாத உட்சுவருக்குமிடையேயுள்ள குறுகிய பாதை அப்பகுதியில் கிடைத்த கருங்கற்களாலே பெரும் ஸிம்பாப்வே கட்டப்பெற்றது.

வெப்பமண்டலப் புல்வெளியில் இடம் பெயர் வேளாண்மை மூலம் வாழ்ந்த சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வந்த தொழிலாளர்களின் உதவியுடன் இவை அமைக்கப்பட்டன.

நுங்குசா சிதைவுகளில் ஒரேயொரு பெரிய குடிசை இருந்தது; இதில் மூன்று அறைகள் இருந்தன. ஓர் அறை, பலர் தங்கக்கூடிய அளவுக்குப் பெரிதாக இருந்தது; இரண்டாவது அறையில் ஓர் இருக்கை மட்டும் இருந்தது. மூன்றாவது அறை, ஒரு தனி அறையாகும். விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க இந்த அறை பயன்பட்டது. இந்த அமைப்பு, அன்றையச் சமய அதிகார ஆயத்தின் இருப்பிடமாக இருந்திருக்கலாம். அக்காலத்தில், ஸிம்பாப்வே அரசின் ஒற்றுமையை நிலை நாட்டியது. இந்தச் சமய அதிகார ஆயமேயாகும். சிதறி வாழும் கிராம மக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் வாய்ந்தவர், வலுவான அரசியல்—சமய அதிகாரத்தைப் பெற்று விளங்கினார்.

ஸிம்பாப்வே அரசின் இதயபீடமாக விளங்கியது மத்திய மாஷோனாலாந்து. எனினும், அந்த அரசின் எல்லை திட்ட வட்டமாக வரையறுக்கப்படவில்லை. ஸிம்பாப்வே பாணிக் கட்டிடச் சிதைவுகள் சில, இன்றைய மாட்டாபிள்லாந்திலும் காணப்படுகின்றன. இதனால் லியோப்பார்டு கோப்ஜேயின் நிலப் பரப்பிற்குள் ஸிப்பாப்வே மக்கள் ஊடுருவிச் சென்றார்கள் என்பது தெரிகிறது.

ஸிம்பாப்வே மற்றும் அதன் குறுகிய எல்லைகளுக்கு அப்பாலும் பரவியது. கிழக்கு ஆஃபிரிக்கக் கடலோரமிருந்த கீல்வாவின் செல்வ வளம், சோஃபாலாவின் தங்க வாணிக ஏற்றத்தாழ்வுகளுடன் இணைந்திருந்தது. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அரபுப் புவியியல் வல்லுநராகிய அல்—மசூதி என்பார், கீல்வாவின் தங்க வாணிகம் பற்றி எழுதியிருக்கிறார். இதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இபின் பதூதா, தெற்குத் தங்க வாணிகத்தால் வளமடைந்திருந்த கீல்வாவை உலகிலேயே அழகிய நகரம் என வருணித்துள்ளார்.

கடற்கரையோர வாணிகத்தையொட்டி ஸிம்பாப்வே அரசர்களின் செல்வ வளத்தில் ஏற்ற இறக்கம் ஏற்பட்டது. கீல்வாவிலுங்கூட வாணிபத்தில் உயர்வும் தாழ்வும் ஏற்பட்டது. 15ஆம் நூற்றாண்டில் கீல்வா செல்வச் செழிப்பின் உச்ச நிலையில் இருந்தது. அப்போதுதான் அங்கு புகழ்பெற்ற பெரிய மசூதியும், அதன் உயர்ந்த கூம்பு வடிவக் கவிகை மாடக் கூரையும் கட்டப்பட்டன. ஆனால், நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கீல்வாவும், கிழக்கு ஆஃப்ரிக்கக் கடலோரமும், ஸிம்பாப்வேயும் வீழ்ச்சியடைந்தன. சோஃபூலாவுக்குப் போர்ச்சுகீசியர் வந்த போது முந்தையக் கடலோர வாணிகத்தின் வெறும் நிழலைத்தான் காண முடிந்தது. ஸிம்பாப்வே தனித்து வாழ்ந்த போதிலும், அதன் வாணிகத் தொடர்புகளும், அதன் தங்க வளமும், கிழக்கு ஆஃப்ரிக்கக் கடலோரப் பகுதியில் மட்டுமின்றி, உள்நாட்டுப் பகுதிகளிலும் பொருளாதாரச் செழிப்புக்கு உதவின.

எனினும், 14, 15 ஆகிய நூற்றாண்டுகளில் வடக்கு மாஷோனாலாந்திலும், ஸாம்பஸிப்பள்ளத்தாக்கிலும் கணிசமான அளவு வாணிக நடவடிக்கை நிகழ்ந்ததைப் புதைபொருள்கள் காட்டுகின்றன.

மாஷோனாலாந்தில் வட மேற்குக் கோடியிலும், ஸாம்பஸிப் பள்ளதாக்கின் மையப்பகுதியிலும் நிலைமை வேறாக இருந்தது. இங்கு, பெரிய குடியிருப்புகள் அமைந்திருந்தன; செப்புத் தொழிலும், வாணிகமும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. செழிப்பான உருங்குவே மாவட்டத்திலுள்ள செட்சுர்குவே பகுதி, 24 ஹெக்டேர் புல்வெளியைக் கொண்டிருந்தது. இங்கு கால்நடை வளர்ப்பு முதன்மையாக நடைபெற்றது; வேட்டையும் முக்கியத் தொழிலாக இருந்தன. இதன் அருகில் செம்பு, இரும்புத் தாதுக்கள் மிகுதியாகக் கிடைத்தமையால், இங்கு செப்புத் தொழிலும், இரும்புத் தொழிலும் பெருமளவில் நடைபெற்றன. இரு குறிப்பிட்ட எடைகளில் செப்புக் கட்டிகள் தயாரிக்கப்பட்டன. செப்புலளையல்களும், வெள்ளீய உலோகக் கலவையும் மிகுதியாகத் தயாராயின. பருத்தி ஆடைகளும் பயன்படுத்தப் பட்டன. நேர்த்தியான வேலைப்பாடுகளுள்ள மட்பாண்டங்களும் தயாரிக்கப் பட்டன.

தமிழில்: இரா. நடராசன்



நிழற்படம் ஜார்ஜ் லேசார் © அட்லாஸ் நிழற்படம், பாரிஸ்

**பெரும் ஸிம்பாப்வேயின் கோட்டை அழிபாடுகளின் அருகில் (முன் பக்கம் பார்க்க), பெரும் பாறைத் தொகுதியுடன் இணைந்த, மலையுச்சியிலுள்ள மாபெரும் உள்ளரண் உயர்ந்து விளங்குகிறது. இடப்புறம்; உள்ளரணிலுள்ள குறுகிய, மூடிய வழியின் வாயில்.**



**இந்த மாக்கல் சிற்பத்திலுள்ள பறவை பெரும் ஸிம்பாப்வே பள்ளத்தாக்கின் அழிபாடுகளில் கிடைத்தது. இதுவே இன்று ஸிம்பாப்வே அரசின் தேசிய சின்னமாக இருக்கின்றது.**

நிழற்படம் பி. எஸ். கார்லேக்கின் கிரேட் ஸிம்பாப்வேயிலிருந்து எடுக்கப்பெற்றது © தாமஸ் அண்டு ஹட்சன்.

# ஐரோப்பா முதல் கத்தே வரை வாணிக இணைப்புகள்

மேற்கு மத்தியதரைக்கடலைச் சுற்றி யுள்ள இடங்களுக்கிடையே வாணிகத் தொடர்புகள்




சாய்வெழுத்துகளிலுள்ள ஆண்டுகள் நாடுகளிடையே ஏற்பட்ட வாணிப ஒப்பந்தங்களைக் குறிக்கின்றன. பிற ஆண்டுகள் இத்தொடர்புகளின்போது நடந்த முக்கிய நிகச்சிகளைக் (உடன்படிக்கை, தூதுவர் பரிமாற்றம், பிணக்குகள் போன்றவை) குறிக்கின்றன.

ஆதாரம்: ஷான் தெவிஸ்

12 முதல் 16ஆம் நூற்றாண்டு வரையில் கண்டங்களுக்கிடையே ஏற்பட்ட தொடர்புகளிலும், குறிப்பாக மத்திய தரைக்கடல் பகுதியிலும், இந்தியப் பெருங்கடல் வழியாக ஆசியாவுடனும் ஏற்பட்ட தொடர்புகளிலும் ஆஃப்ரிக்கா பெரும் பங்கு பெற்றது.

**மத்தியதரைக்கடல்**

கொட்டைகள், மிளகு, தந்தம் ஆகியவற்றில் ஓரளவு வாணிகம் நடைபெற்ற போதிலும், ஆஃப்ரிக்காவின் நெஞ்சத்திலிருந்து பறித்தெடுத்த தங்கத்தினாலும் அடிமைகளினாலும்தான் மத்திய தரைக்கடல் பொருளாதாரத்தில் ஆஃப்ரிக்க விளைவு தெளிவாகத் தெரியத் தொடங்கியது. 10ஆம் நூற்றாண்டின் முடிவிலேயே ஸ்பானிய கிறித்துவர்கள் தெற்கிலிருந்து தங்கம் பெறத் தொடங்கினர். 15ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தங்கம் வட ஆஃப்ரிக்காவுக்குச் சென்று கொண்டிருந்தது. 13ஆம் நூற்றாண்டு முதல் இலாபம் பெருகியது. மத்தியக் கடலின் பெருங் கிறித்துவத் துறைமுகங்களிலும், மிலான், ஃப்ளாரன்ஸ் போன்ற சில பெரிய நகர்களிலும் செயலாக்கமுள்ள வணிக வகுப்பினர் தோன்றினர். வளர்ந்து வந்த மேல்நாட்டுப் பொருளாதாரத்தில் "தங்கத் தாகம்" ஆஃப்ரிக்காவின் உட்புறம் செல்லும் தங்கப் பாதைகளைக் காணும் விழைவைத் தூண்டியது. இதனால் பெருமளவு ஆஃப்ரிக்கத் தங்கம் ஐரோப்பிய வணிகச் சுழற்சியினுள் நுழைந்தது.



நிழற்படம்: © பியர் கொலோம்பெல், பாரிஸ்

628இல் டாங் வம்ச காலத்தில் கறுப்பு ஆஃப்ரிக்காவிலிருந்து தூதுவர்கள் சீனாவுக்கு நறுமணப்பொருள்களும் தந்தமும் கொண்டு வந்தனர் என்று சீன ஆதாரங்கள் கூறுகின்றன. கன்சு மாநிலத்தில் டுன்ஹுவாங் குகைகளின் (5—10 நூற்றாண்கள்) சுவரோவியங்கள் இதைக் காட்டுகின்றன. இந்த ஓவியங்கள் புத்தக் கலையின் அரும் படைப்புகளாகும். "நிர்வாண நிலையிலுள்ள புத்தருக்காக அழும்" இச் சுவரோவியத்திலுள்ள ஆட்களுள் (அடியிலிருந்து மூன்றாம் வரிசையில் வலப்புறமுள்ள) சுருண்ட முடியுள்ள கருநிறமான உருவம் ஆஃப்ரிக்கர்களின் கற்பனைத் தோற்றமென டுன்ஹுவாங் நிலைய அறிஞர் கருதுகின்றனர்.

ஆசியா பண்டைய வரலாற்றறிஞரின் கருத்துப்படி, 12ஆம் நூற்றாண்டில் கிழக்கு ஆஃப்ரிக்க கரையில் ஏற்கெனவே செறிந்த வாணிகம் நடைபெற்றுவந்தது. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாணிக நடவடிக்கை பெருகியது. முஸ்லிம், சீன, இந்திய சந்தைகள் பெரிதும் விரும்பிய ஆஃப்ரிக்க உள்நாட்டுத் தந்தமும், தோலும், இரும்பும், தங்கமும் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாக இருந்தன. தென் பகுதியிலுள்ள தங்கம் சோஃபாலா வழியாக ஏற்றுமதியாகி கில்வாவில் விற்கப்பட்டது. இவை இவ்வாணிகத்தில் சிறப்பிடம் பெற்றன.

அராபியர் வருகைக்கு முன்னே சுவாஹிலி பகுதியில் உரமான நகர வளர்ச்சி இருந்ததென்பதை கார்டாஃபுல் முனை முதல் சேஃபாலா வரை 50 நகர்கள் காட்டுகின்றன. இவற்றுள் செழிப்புள்ள நகர்களுள் ஒன்று கில்வா. அங்கிருந்த நான்கு ஐந்து மாடி வீடுகளைச் சீன ஆதாரங்கள் விவரிக்கின்றன;

15ஆம் நூற்றாண்டில் சீனர்கள் இந்த ஆஃப்ரிக்க கரைக்குச் சென்றனர். 6-7 ஆம் நூற்றாண்டிலே ஆஃப்ரிக்கர் சீனாவுக்குச் சென்றதாகச் சான்றுகள் உள்ளன. கறுப்பு ஆஃப்ரிக்கர் புத்த குகைகளில் இருப்பதாக தாங் ஊழிச் சித்திரங்கள் காட்டுகின்றன. 13ஆம் நூற்றாண்டு தொகுப்பு நூல் சுவாஹிலி நாட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறது. 1402 இல் கொரியா நிலப்படம் ஒன்று தெற்கு ஆஃப்ரிக்காவின் எல்லைக்கோடுகளை ஓரளவு திட்டவட்டமாகக் காட்டுகிறது.

# மேற்கு ஆ்ப்ரிக்காவின்

மாலியில் ஷெனே நகரின் அருகிலுள்ள பண்டைய பகுதியில் 1977—லும் 1981–லும் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் விளைவுகள் மேற்கு ஆஃப்ரிக்கா வரலாற்றைப் பற்றிய முந்திய ஊகக் கருத்துகளை மறுத்துள்ளன. அப்பகுதியின் செழிப்பான வணிக மையங்களுள் ஒன்றான இந்நகரின் காலத்தை இவ்வாராய்ச்சி 1000 ஆண்டுகள், பின்தள்ளிவிட்டது.

ஷெனே–ஷெனோ (சோங்கே மொழியில் ''பண்டைய ஷெனே'')எனும் அகழ்வாராய்ச்சிப் பகுதி இன்றைய ஷெனோ நகருக்கு 3 கி.மீ. தெற்கிலுள்ளது. இது வளமிகுந்த நைஜர் கழிமுகச் சமவெளியில் அமைந்துள்ளது.

கணவனும் மனைவியுமான இரு அமெரிக்க அகழ்வாராய்ச்சியாளர்கள் ரோடரிக் ஜே.மக்கின்டோஷ், சூசன் கீச் மக்கின்டோஷ் ஆகியோரின் அகழ்வாராய்ச்சிக்குப் பிறகுதான் ஷெனேயும் (1100இல் நிறுவப்பப்பட்ட) டிம்பக்டுவும் 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரே காலத்தில் வளர்ச்சியடைந்தன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவை மேற்கு ஆஃப்ரிக்காலவ நகரமயமாக்கிய சகாரா வழி வாணிகத்தின் அணிகலன்களாக விளங்கின.

ஆயினும், கட்டிடங்கள், வீடுகள், ஆகியவற்றின் அழிபாடுகளினால் அமைந்த 33 ஹெக்டேர் பரப்புள்ள செயற்கை மேடாகிய முக்கிய பகுதியில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியும், 1000 ச.கி.மீ. பரப்புள்ள சுற்றுப்புறங்களில் நடந்த பரந்த ஆய்வும், கி.மு. 3ஆம் நூற்றாண்டிலே ஷெனே—ஷேனோவில் ஏற்கெனவே குடியேற்றம் இருந்ததென்றும், இரும்பு செய்து வாணிகம் நடத்தி வந்த மக்கள் அங்கு வாழ்ந்தனரென்றும் காட்டுகின்றன. கி.பி. 800இல் ஷெனே—ஷெனோ 10,000 மக்களுள்ள செழிப்பான பரந்த மையமாக மாறியது.

பல நூற்றாண்டுகளில் நகரின் வாணிகம் பரந்து விரிவடைந்தது. ஷெனே—ஷெனோ தொலை நாடுகளிலிருந்து கல்லும், இரும்புக் கலவையும், சகாராவிலிருந்து செம்பும், கி.பி. 600–800இல் தங்கமும் இறக்குமதி செய்தது. இவற்றிற்குப் பதிலாக அவ்வள நகர் பல்வேறு பொருள்களை, குறிப்பாக நெல் (கி.பி. முதல் நூற்றாண்டிலே ஆஃப்ரிக்க நெல் ஷெனே-ஷெனோவில் பயிரிடப்பட்டது). மீன், மீன்எண்ணெய் ஆகியவற்றை ஏற்றுமதி செய்தது.

உணவு உற்பத்தியும் கைத்தொழிலும் சேர்ந்து அந்நகரின் வெற்றிக்கு காரணமாக இருந்தன். கி.பி. 50இல் அக்குடியேற்றம் 12 ஹெக்டேருக்கு மேலாகப் பரவியது. கி.பி. 300இல் அது 25 ஹெக்டேராகவும், 750இல் 33 ஹெக்டேராகவும் பரவி, 2 கி.மீ. நீளமும், 3.6 மீட்டர் அகலமும், 4மீட்டர் உயரமுமுள்ள நிலம் சூழ்ந்திருந்தது.

750-க்கும் 1150-க்கும் இடையேஷெனே ஷெனோவும் அதைச் சூழ்ந்திருந்த கிராமங்களும் தம் வளர்ச்சியின் உச்ச



# மிகப் பண்டைய தலைநகர்

நிலையை அடைந்தன. அப்போது அங்கு 20,000 மக்கள் வாழ்ந்தனர். உட்பகுதியில் அதன் மக்கள் நெருக்கம் இன்றிருப்பதை விட 10 மடங்கு அதிகமாக இருந்திருக்கலாம்.

ஷெனே-ஷெனோவில் கண்டெடுக்கப்பட்டவையும், நைஜீரியாவிலுள்ள இக்போ—உக்வுவில் கிடைத்த 8ஆம் நூற்றாண்டு ''வெண்கலப்'' பொருள்களும் புதியதொரு வரலாற்று விளக்கம் தருகின்றன. கி.பி. 1000இல் மேற்கு ஆஃப்ரிக்காவில் தொலை வாணிகமும் நகர வளர்ச்சியும் நிகழ்ந்ததெனத் தெரிகின்றது. சகாராவுக்கும் நைஜர் வளைவுக்குமிடையே பெரும் வாணிக வழிகளை அமைப்பதில் ஷெனே—ஷெனோ முக்கியப் பங்கு பெற்றதெனவும், முன்னால் கருதப்பட்டதுபோல், சகாரா வழியாகச் சென்ற உப்பு, தங்க வழியின் கிளை வழியல்ல எனவும் இப்போது உறுதியாகி விட்டது.




படம் © தேசிய நிலவியல் இதழ், வாஷிங்டன்

இன்றைய ஷெனே நகரின் (வான் படத்தில் நடுவில் இடப்புறம்) நெருங்கிய கட்டிடங்கள் மாலியின் உள்நாட்டு நைஜர் கழிமுகச் சமவெளியில் நிற்கின்றன. 3 கி.மீ. தொலைவிலுள்ள நீண்ட முட்டைவடிவ மேடு (மேலே வலப்புறம்) பண்டைய ஷெனே (''ஷெனே—ஷெனோ'') பகுதியாகும். இடப்புறம்: 1977 முதல் அகழ்வாய்வாளர் எடுத்த சில பொருள்கள் மேற்கு ஆஃப்ரிக்காவில் நகரங்கள் இருந்ததாகக் கருதப்படுவதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்னே ஷெனே—ஷெனோ தோன்றியதை இவை காட்டுகின்றன. கீழே உட்படம்: மாடுகள் ஒருபுறம் செல்ல, பணியாளர் களிமண் வீட்டின் வட்ட வடிவ அடித்தளத்தைத் தோண்டுகின்றனர்.



# குடியேற்ற அறை கூவல்

ஆல்பெர்ட் ஆது போஹென்

ஆஃப்ரிக்க வரலாற்றில் 1880–க்கும் 1935க்குமிடையில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களைப்போல் வேறெந்தக் காலத்திலும் நிகழ்ந்ததில்லை. குறிப்பாக 1890 முதல்1910 வரையிலான 20 ஆண்டுகளில் அவலமான மாறுதல்கள் நேர்ந்தன. இக்காலத்தில், ஏகாதிபத்திய வல்லரசுகள் படையெடுத்து ஆஃப்ரிக்கா கண்டம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு, அங்கு குடியேற்ற ஆதிக்க முறையை நிறுவின. அடுத்த 25 ஆண்டுகளில் இந்த ஆதிக்க முறையை நிலை நாட்டுவதிலும் சுரண்டுவதிலும் அந்த வல்லரசுகள் கவனம் செலுத்தின.

இக் கொடூரங்கள் மிக அசுர வேகத்தில் நடந்தன. 1880இல் மேற்கு ஆஃப்ரிக்கா முழுவதிலும், செனகாலின் கடலோரப் பகுதிகளும், ஃபிரிடவுன் நகரும், கானாவின் தென் பகுதிகளும், ஐவரிகோஸ்டின் கடலோரப் பகுதியாகிய அபிட்ஜானும், டஹோமியிலுள்ள போர்ட்டோ நோவோவும், லாவோஸ் தீவும் மட்டுமே ஐரோப்பியர்களின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தன. வட ஆஃப்ரிக்காவில், அல்ஜீரியா மட்டும் ஃபிரான்சின் குடியேற்ற ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. கிழக்கு ஆஃப்ரிக்காவில் ஓரங்குலங்கூட ஐரோப்பியர் ஆதிக்கத்தில் வரவில்லை. மத்திய ஆஃப்ரிக்காவில், மொசாம்பிக்கும் அங்கோலாவும் மட்டும் போர்ச்சுகேசியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

தென் ஆஃப்ரிக்காவில் மட்டுமே அயலவர் ஆதிக்கம் நிலைபெற்று, உட்பகுதிகளிலும் பரவியிருந்தது. சுருங்கக்கூறின் 1880இல் ஆஃப்ரிக்கக் கண்டத்தின் 80% பகுதியை உள்நாட்டு அரசர்களும், அரசிகளும், சிற்றரசர்களும், குறுநிலத் தலைவர்களும் ஆண்டு வந்தார்கள். அடுத்த 30 ஆண்டுகளில் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. 1914-க்குள், எத்தியோப்பியாவும் லைபீரியாவும் நீங்கலாக ஆஃப்ரிக்கா முழுவதும் ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அடிமைப்பட்டது. இக் குடியேற்ற ஆதிக்கத்தை, ஆஃப்ரிக்கத் தலைவர்களில் மிகப் பெரும்பான்மையினர் கடுமையாக எதிர்த்தார்கள்; தங்களுடைய இறைமையினையும் சுதந்திரத்தையும் நிலை நாட்டுவதற்குப் பாடுபட்டார்கள்.

ஃபிரஞ்சுக்காரர்கள் 1883இல் செனகால் மீது படையெடுத்தார்கள். லாட்டியார் பகுதியில் இருப்புப்பாதை அமைக்க அப்போதிருந்த கயோர் டாமல் அரசனிடம் அனுமதி கேட்டபோது ஃபிரஞ்சு அரசுக்கு அவன் பின்வருமாறு பதில் எழுதினான்:

''நான் உயிருடனிருக்கும் வரை இந்த இருப்புப்பாதை அமைப்பதை நான் முழு மூச்சுடன் எதிர்ப்பேன். இருப்புப்பாதை குறித்து உங்களிடமிருந்து கடிதம் வரும் போதெல்லாம் நான் 'முடியாது, முடியாது, முடியாது' என்று கூறி வருகிறேன். இனியும் இந்தப் பதில் தான் கிடைக்கும்; வேறெந்தப் பதிலையும் எதிர்பார்க்க முடியாது. நான் இறந்து போக நேர்ந்தாலும், எனது குதிரை மாலவ்கூட இந்தப் பதிலைத் தான் அளிக்கும்''.

தங்கனீக்காவிலுள்ள (தான்சானியா) யாவோவின் அரசன் மாச்செம்பா, ஜெர்மானியத் தளபதி ஹெர்மான் வான் விஸ்மானுக்கு பின்வருமாறு விடையிறுத்தான்:

''உமது பேச்சைச் செவிமடுத்தேன். ஆனால், உமக்கு நான் ஏன் அடிபணிய

---

'யுனெஸ்கோ கூரியரி'ன் இவ்விதழின் எஞ்சிய பக்கங்களில் யுனெஸ்கோவின் ''ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா''வின் ஏழாம் தொகுதியான ஆஃரிக்கா அன்டர் கலோனியல் டாமினேஷன், 1880-1935''இன் ஆறு அதிகாரங்களின் பகுதிகளைக் காணலாம். பேராசிரியர் ஆ. ஆது பேர்ஹென் பொதுப் பதிப்பாசிரியராக இருக்கும் 7ஆம் தொகுதியின் ஆங்கிலப் பதிப்பு, யுனெஸ்கோ, ஹையன்மன், லண்டன், கலிஃபோர்னியப் பல்கலைக்கழக அச்சகம் ஆகியவற்றின் இணை பதிப்பாக இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளிவரும்.

*1880இல் பிரிவினைக்கும் அந்நிய ஆட்சிக்கும் முன்னால் ஆஃப்ரிக்கா*



# ஆஃப்ரிக்கா, 1880—1935

வேண்டும் என்பதற்கு ஒரு காரணத்தையும் காணவில்லை. அடிபணிவதைவிட இறப்பதை மேலெனக் கருதுகின்றேன். நீர் நட்பினை நாடினால், அதற்கு இன்றும் என்றும் தயாராக இருக்கிறேன். நான் உமது அடிமையாக விரும்பினால், அது ஒருபோதும் நடவாது. போரிட நீர் விரும்பினால், அதற்கும் நான் தயார். ஆனால், உமக்கு ஒரு நாளும் அடிமையாக மாட்டேன். நீரும் என்னைப்போல் கடவுள் படைத்த ஒரு மனிதன்தான். எனவே, உமது காலடியில் நான் விழ மாட்டேன். உமது நாட்டில் நீர் தலைவனாக இருக்கலாம். ஆனால், எனது நாட்டுக்கு நான் அரசன். நீர் எனக்கு அடிமையாக வேண்டுமென நான் கேட்கவில்லை; ஏனென்றால், நீர் சுதந்திர மனிதன் என்பது எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரையில், நான் உம்மிடம் வரமாட்டேன். உமக்கு வலுவிருந்தால், துணிவிருந்தால், நீர் வந்து என்னைக் கொண்டு செல்லும்.''

மேற்கு ஆஃப்ரிக்காவை ஆட்சிபுரிந்த ஹென்ரிக் விட்பாய் என்ற அரசன், 1894இல் ஜெர்மானியரிடம் இவ்வாறு கூறினான்:

''உலகில் பல்வேறு குடியரசுகளை ஆண்டவன் படைத்திருக்கிறார். எனவே, எனது நாட்டுக்கும், மக்களுக்கும் தலைவனாகச் சுதந்திரமாக இருக்க நான் விரும்புவது பாவமோ குற்றமோ அல்ல என்று நான் நம்புகின்றேன்''

மொசாம்பிக்கைச் சேர்ந்த மகோம்பி ஹங்கா என்ற மன்னனும் 1895இல் வெள்ளையருக்குப் பின்வருமாறு மறுமொழியளித்திருக்கிறான் :

''வெள்ளையர்களாகிய நீங்கள் எவ்வாறு ஆஃப்ரிக்காவிற்குள் மேன்மேலும் முன்னேறி வருகிறீர்கள் என்பதை நான் அறிவேன். எனது நாட்டின் எல்லாத் திசைகளிலும் நிறுமங்கள் பணியாற்றி வருகின்றன. இந்தச் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொள்ள எனது நாடு தயாராக இருக்கிறது. நல்ல சாலைகளையும், இருப்புப்பாதைகளையும் நாங்கள் விரும்புகின்றோம். ஆனால், எனது முன்னோர்களைப் போல என்றும் மகோம்பியாகவே இருந்திட விரும்புகின்றேன்''.

மோசி அரசன் ஓபோகோ என்பவன் 1895இல் ஃபிரஞ்சுத் தளபதி டெஸ்டினாவ் என்பவனிடம் பின் வருமாறு கூறினான்.

''எனது நாட்டைக் கைப்பற்றுவதற்காக என்னைக் கொல்ல வெள்ளையர்கள் விரும்புகிறார்கள் என்பதை நான் அறிவேன். எனது நாட்டைச் சீரமைக்க அவர்கள் உதவுவார்கள் என்று நீர் கூறுகிறீர். அவர்கள் உதவி எனக்குத் தேவையில்லை. எனக்கு எது தேவை என்பது எனக்குத் தெரியும். எனக்கு என் சொந்த வணிகர்கள் இருக்கிறார்கள். உமது தலையை வெட்டிவிடும்படி நான் இன்னும் ஆணையிடாமலிருப்பது உனது நற்பேறு. இப்பொழுதே இங்கிருந்து ஓடி விடும்; இனி இந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காதீர்''.

எத்தியோப்பிய அரசர் இரண்டாம் மெனலிக் 1891 ஏப்ரலில் விக்டோரியா அரசிக்கு அனுப்பிய விண்ணப்பம் மிகவும் உருக்கமானது. மெனலிச் தமது விண்ணப்பத்தில், எத்தியோப்பியாவின் பழைய எல்லைகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கான தமது விருப்பத்தை அறிவித்துவிட்டு, மேலும் கூறுகிறார்;—

''கடந்த 14 நூற்றாண்டுகளாக புறச் சமயக் கடலில் ஒரு கிறித்தவத் தீவாக எத்தியோப்பியா விளங்கி வந்துள்ளது. தொலைதூரத்திலிருந்து வந்த வல்லரசுகள், ஆஃப்ரிக்காவைக் கூறுபோடுவதைப் பார்த்துக்கொண்டு வாளா இருக்க நான் விரும்பவில்லை. எல்லாம் வல்ல இறைவன் இதுகாறும் எத்தியோப்பியாவைக் காத்தருளி வந்திருக்கிறான். வருங்காலத்திலும் இந்நாட்டை ஆண்டவன் பாதுகாத்து, விரிவாக்குவான் என நம்புகின்றேன்.

இந்த விண்ணப்பத்தையும் பொருட்படுத்தாமல் இத்தாலியர்கள், பிரிட்டன் மற்றும் ஃபிரான்ஸ் உதவியுடன், எத்தியோப்பியா மீது படையெடுத்தபோது, 1895இல் மெனலிக் படைதிரட்டும் பிர

1914இல் ஆஃப்ரிக்கா




ரோலண்டு ஆலிவர் & ஜே. டீ. பேஜ், ஆஃப்ரிக்க சுருக்க வரலாற்றிலிருந்து

---

**ஆல்பெர்ட் ஆது போஹென்** கானா நாட்டவர்; கானாவில் லெகான் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவரும் பேராசிரியரும், மேற்கு ஆஃப்ரிக்க குடியேற்ற வரலாற்று வல்லுநருமாவார். இது பற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.



நிழற்படம் © ஜார்ஜ் ரோஜர், பாரிஸ்

2ஆம் மெனெலிக் 1844இல் மத்திய எத்தியோப்பியாவிலுள்ள அங்கோபரில் பிறந்தார். இவர் எத்தியோப்பிய அரசருள் மிகப் பெரியவரும், குடியேற வந்தவர்களை வெற்றிகரமாக எதிர்த்த ஆஃப்பிரிக்கத் தலைவருமாவார் 1865இல் இவர் ஷேவா மன்னரானார்; 1889இல் பேரரசரானார். அரசரும், பிறகு பேரரசருமான இவர் தென் எத்தியோப்பியாவின் பெரும் பகுதிகளைத் தம் ஆட்சியில் இணைத்து, அவற்றைத் தற்காலமயமாக்கும் பெரும் முயற்சியில் ஈடுபட்டார். தம் படைகளுக்குத் தற்காலக் கருவிகளை வழங்கும் தொலை நோக்குள்ளவராக இருந்தார். இதனால் இத்தாலியப் படையெடுப்பை எதிர்க்க முடிந்தது; 1896இல் இவர் இத்தாலியரை, ஆஃப்ரிக்க வரலாற்றில் பெரும் போர்களுள் ஒன்றான அடோவாவில் இறுதியாக முறியடித்தார். ஐரோப்பிய ஆதிக்கத்தை எதிர்த்து, தம் நாட்டின் ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் காத்த இவர் 1913 டிசம்பரில் இறந்தார்.

கடனத்தைப் பிறப்பித்தார். அதில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

"நம் நாட்டை அழிக்கவும், நம் சமயத்தை மாற்றவும் எதிரிகள் நம் மீது படையெடுத்துவிட்டனர். பகைவர்கள் சுண்டெலிகளைப்போல் நம் நாட்டுக்குள் நுழைந்து முன்னேறி வருகின்றார்கள். எனது நாட்டை நான் அவர்களிடம் ஒப்படைக்கப் போவதில்லை. அதற்கு ஆண்டவன் எனக்குத் துணையிருப்பான். இன்று, உங்களில் வலியவர்களாக இருப்பவர்கள் எனக்கு உங்கள் வலிமையைத் தாருங்கள்; நலிந்தவர்களாய் இருப்பவர்கள் உங்கள் வழிபாட்டால் எனக்கு உதவுங்கள்."

ஐரோப்பியப் படையெடுப்பாளர்களை சந்திப்பதற்கு ஆஃப்ரிக்க மன்னர்கள் தயாராக இருந்தார்கள் என்பதை இவை காட்டுகின்றன. இந்த அரசர்களில் சிலர் பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்புதான் பெரிய பேரரசுகளை நிறுவினார்கள்; வேறு சிலர் இன்னும் தங்கள் அரசுகளை நிறுவுவதிலும் புதுப்பிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். சிலர் தங்களுடைய மரபு ஆயுதங்களாலும், போர்த் தந்திரங்களாலும் தங்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொண்டார்கள்; மாண்டிங்கோ பேரரசின் சாமோரி, எத்தியோப்பாவின் மென்லிக் போன்றவர்கள், தங்கள் படைகளை நவீனப்படுத்தி இருந்தார்கள். மேலும், இவர்கள் அரசியல் தந்திரம் வாயிலாகவே படையெடுப்பாளர்களைச் சமாளித்துவிடலாம் எனக் கருதினார்கள்.

1830-களில் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள், தங்களுடைய இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தலாக இல்லாதிருந்தமையால், அவற்றை ஆஃப்ரிக்க அரசர்கள் பலர் வரவேற்றார்கள். மேற்கு ஆஃப்ரிக்காவில், கிறித்தவ சமயப் பிரசாரங்களின் முயற்சியினால் 1826இல் ஃபூரா பே கல்லூரி நிறுவப்பெற்றது; கோல்டு கோஸ்டிலும், நைஜீரியாவிலும் 1870 வாக்கில் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. 1887இல் பணக்கார ஆஃப்ரிக்கர்கள் தங்கள் குழந்தைகளை மேற்படிப்புக்காகவும், தொழிற் பயிற்சிக்காகவும் ஐரோப்பாவுக்கு அனுப்பலானார்கள்.

ஆஃப்ரிக்கர்களைப் பொறுத்தவரையில், ஐரோப்பாவுடன் தாங்கள் பல நூற்றாண்டுகளாகக் கொண்டிருந்த உறவுகளில் பெரும் மாறுதல் எதனையும் செய்ய விரும்பவில்லை. ஐரோப்பியர்கள் தங்கள் மீது மாறுதல்களைக் கட்டாயமாகத் திணிக்க முயன்றால் கடந்த காலத்தைப் போலவே அந்த முயற்சியைத் தங்களால் தடுத்திட முடியும் என அவர்கள் நம்பினார்கள்.

ஆனால், 1880இல் "புதிய ஏகாதிபத்தியமும், முதலாளித்துவ ஏகபோகமும்" தலை தூக்கிவிட்டதை ஆஃப்ரிக்கர்கள் உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். ஐரோப்பாவில் தொழிற் புரட்சியாலும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து தொழில் நுட்பம் முன்னேறி நீராவிக் கப்பல், இருப்புப்பாதை, தந்தி, துப்பாக்கி ஆகியவை தோன்றியதாலும் இந்தப் புதிய ஆதிக்கம் தோன்றியது. இப்பொழுது, ஆஃப்ரிக்காவில் வாணிபத்தை மட்டும் ஐரோப்பியர்கள் விரும்பவில்லை; நேரடி அரசியல் ஆதிக்கத்தையும் விரும்பினார்கள்.

இரண்டாவதாக, வாய்ப்பக்கமாக வெடிமருந்தடைப்பதற்குரிய தங்களுடைய துப்பாக்கிகள், பின்வழியேமருந்து குண்டு அடைக்கும் ஐரோப்பியர்களின் துப்பாக்கிகளுக்கு ஈடில்லை என்பதையும் ஆஃப்ரிக்கத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

இதன் விளைவுகள் பயங்கரமாக இருந்தன. மேற்சொன்ன சிற்றரசர்களில் ஒருவரைத் தவிர, மற்ற அனைவரும் தோற்கடிக்கப்பட்டனர். மெனலிக் மட்டுமே படையெடுத்துவந்த இத்தாலியர்களைத் தோற்கடித்துத் தனது இறைமையினையும், சுதந்திரத்தையும் காத்துக்கொண்டார்.

தமிழில் : இரா. நடராசன்

# நிலப் போட்டி

**காட்ஃப்ரே என். உஸோய்க்வே**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் ஆஃப்ரிக்காவின் பல பகுதிகளில் ஃபிரான்ஸ், பிரிட்டன் போர்ச்சுகல்'ஜெர்மனி போன்ற நாடுகள் வாணிப உரிமையைப் பெற்று செல்வாக்குடன் விளங்கின. எனினும், அக்கண்டத்தில் இந்நாடுகளின் நேரடியான அரசியல் ஆதிக்கம் அதிகமாக இல்லை.

குறிப்பாக பிரிட்டனும் ஜெர்மனியும், அவர்கள் விரும்பியஅளவு செல்வாக்குப் பெற்றிருந்தன. ஒரு நாட்டை முழுவதும் தன்னோடு இணைத்துக் கொள்வதால் ஏற்படும் செலவுகளையும். நெருக்கடிகளையும் அறிவுள்ள அரசியல்வாதி அவசியமின்றி ஏற்றுக்கொள்ள மாட்டான். அதிகார பூர்வமற்ற ஆதிக்கம் இத்தொல்லைகள் இல்லாமலே அவனுக்குக் கிடைத்துவிடுகிறது.

1876லிருந்து 1880 வரையிலான கால கட்டத்தில் தோன்றிய மூன்று முக்கிய காரணங்களால் இந்த மனப்பான்மை மாறத் தொடங்கியது.

முதல் காரணம் பெல்ஜிய நாட்டு அரசன் லியோபால்ட் கூட்டில்ப்ரஸ்ஸல்ஸ் பூகோள மாநாடு இம்மாநாட்டின் பலனாக ஆஃப்ரிக்க அனைத்துலக சங்கம் தோன்றியது. இச்சங்கத்தின் சார்பில் ஹென்றி மார்ட்டன் ஸ்டான்லி என்பவர் காங்கோவில் ஆய்வுக்காக நியமிக்கப் பட்டார். இந்த நடவடிக்கைகளால் காங்கோ யாருக்கும் உரியது என்ற நிலை தோன்றியது. பெர்லின், மேற்கு ஆஃப்ரிக்க நாடு-மாநாடு முடிவடைவதற்குள் ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரத்தை இந்நாடு பெறுவதில் லியோபால்ட் வெற்றி பெற்றார்.

இரண்டாவது காரணம் — திடீரென்று வெளிப்பட்ட. போர்த்துகீசியரின் நடவடிக்கைகள் பிரஸ்ஸல்ஸ் மாநாட்டின் சிறிது தயக்கத்திற்குப் பிறகே தான் அழைக்கப்பட்டதைக்கண்டபோர்ச்சுகல் 1876ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பல பயணங்களைமேற்கொண்டது, இதனால் 1880இல் சுதந்திரமாக இருந்த ஆஃப்ரிக்கபோர்ச்சுக்கீஸிய ஆட்சியாளரின் கீழ் இருந்த மொசாம்பிக்கின் சொத்துக்கள் பல போர்த்துகீசிய அரசின் உரிமையாயின.

மூன்றாவது — 1879 - 80ஆம் ஆண்டுகளில் நிலவிய ஃபிரெஞ்சு ஆதிக்க விரிவாக்கக் கொள்கை. இதனால் 1879இல் பிரிட்டனுடன் ஃபிரான்ஸ் இணைந்து எகிப்தில் இரட்டை ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. காங்கோவிற்கு சவார்கன் டி பிரஸ்ஸாவை அனுப்பியது. படேகேயின் தலைவன் மகாகோவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை அங்கீகரித்தது. துனிசியா, மடகாஸ்கர் பகுதிகளில் ஆதிக்கத்தை நிறுவும் முயற்சிகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகளால் ஃபிரான்ஸும் போர்ச்சுகலும் 1876-1880 ஆண்டுகளில் ஆஃப்ரிக்காவில் ஆதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்தைக் காட்டின. இதைத்தொடர்ந்து பிரிட்டனும் ஜெர்மானியும் அதிகார பூர்வமற்ற ஆதிக்கத்தை விட்டு, உண்மையான ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டியதாயிற்று. 1883ஆம் ஆண்டு முதல் கிழக்கு மற்றும் மேற்கு ஆஃப்ரிக்கப் பகுதிகளை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தன.

1880ஆம் ஆண்டுகளில் நாடுபிடிக்கும் போட்டி மிகத் தீவிரமானது. ஆஃப்ரிக்காவிலிருந்து விரட்டப்படுவோம் என்ற எண்ணத்தில், மத்திய ஆஃப்ரிக்காவில் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்துலக மாநாடு கூட்டவேண்டும் என்று போர்ச்சுகள் அழைப்பு விடுத்தது.

காங்கோப் பகுதியில் நிகழ்ந்த ஐரோப்பிய நடவடிக்கைகள் காரணமாக எழுந்த எல்லைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக போர்த்துகள் விடுத்த அனைத்துலக மாநாடு கூட்டப் பட வேண்டும் என்ற கருத்தைப் பின்னர் பிஸ்மார்க் தொடர்ந்தார்- 1884 நவம்பர் மாதம் 15-ம் தேதி முதல் 1885 ஆண்டு நவம்பர் 26-ம் தேதி வரை இம்மாநாடு

---

**காட்ஃப்ரே என். உஸோக்வே,** நைஜீரியா; அமெரிக்காவில் அன் அபாரிலுள்ள மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியர். கிழக்கு ஆஃப்ரிக்க வரலாற்றிலும் குறிப்பாக உகாண்டாவிலுள்ள முந்திய பன்யோரோ அரசின் வரலாற்றிலும் வல்லுநர். ஆஃப்ரிக்க வரலாறுபற்றியப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.



*1884 நவம்பரில் பெர்லினில் நடைபெற்றமேற்கு 'ஆஃப்ரிக்க மாநாட்டில் கலந்துகொண்ட 15 நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாடு ஆஃப்ரிக்க கரைப் பகுதிகளைப் பிடிக்கப் பின்பற்ற வேண்டிய வழிகளை'' வகுத்தது.*

நிழற்படம் © மேரி இவான்ஸ் படநூலகம் லண்டன்

பெர்லினில் நடைபெற்றது. இம்மாநாடு நடக்கப்போகிறது என்ற செய்தி, போட்டியை மேலும் அதிகமாக்கியது. அடிமை வாணிபம் பற்றியோ, மற்ற மனிதாபிமானக் கொள்கைகள் பற்றியோ இம்மாநாடு முழுமனதுடன் விவாதிக்க வில்லை. அடிமைவாணிபத்தை ஒழிப்பது பற்றியும் ஆஃப்ரிக்காவின் நல்வாழ்வு பற்றியும் உதட்டளவு தீர்மானம் நிறை வேற்றியதுடன் அவர்கள் நின்றுவிட்ட னர்.

பெர்லின் சட்டத்தின் 34வது விதிப்படி ஆஃப்ரிக்கக் கரைப் பகுதியை உரிமை யாக்கிக் கொள்ளும் ஐரோப்பிய நாடு— அதை உடனடியாக, இம்மாநாட்டின் மற்ற உறுப்பினருக்கு அதைத் தெரியப் படுத்தி அங்கீகாரம் பெறவேண்டும். இதுதான் ''உரிமைப்பகுதி'' என்ற தத் துவம். இத்துடன் ''ஆற்றின் பின்பரப்பு'' என்ற பொருளற்றகருத்தும் இணைந்தது. இதன்படி கரையோரப் பகுதியின் உரி மையைப் பெறுவதன் மூலம். அதன் பின்னணியில் உள்ள எல்லையற்ற நிலப் பரப்பும் சொந்தமாகியது.

35வது விதிப்படி கரையோரப் பகுதி களை உரிமையாக்கிக் கொண்ட நாடு. அப்பகுதிகள் தனது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் வாணிபம் செய்யவும் ஒப்புக்கொண்ட நிபந்தனை களின்படி போக்குவரத்துக்கும் போது மான அதிகாரம் இருப்பலத நிலைநாட் டிக் காட்ட வேண்டும். ''மெய்யான ஆதிக்கம்'' என்ற இந்தக் கருத்து காரணமாகத்தான் ஆஃப்ரிக்காவைக் கைப்பற்றும் செயல் வெறிமிக்கதாயிற்று.

ஒரு கண்டம், தயக்கமின்றி மற்றொரு கண்டத்தை ஆக்கிரமித்துப் பங்கு போடுவது பற்றிப் பேசியதாக அதுவரை சரித்திரமே இல்லை. ஆஃப்ரிக்கவரலாற் றில், இம்மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இம்மாநாடு ஆப்ரிக்காவைப் பிரிவினை செய்யவில்லை என்பது ஓரளவே உண்மையானது.

பெர்லின் மாநாட்டுக்கு முன்னர், குடி யேற்றம், பயணங்கள், வாணிப மையங் களை ஏற்படுத்துதல், முக்கியமான பகுதி களை ஆக்கிரமித்தல் ஆஃப்ரிக்கத் தலைவர்களுடன் ஒப்பந்தம்—போன்ற செயல்களின் மூலம் ''உரிமைப் பகுதி'' களை ஏற்படுத்திக் கொண்டு விட்டனர். மாநாட்டுக்குப் பிறகு ஒப்பூந்தங்கள் மூலம் வந்த வலிமையால், அக்கண்டம் பிரிக்கப்படுவதற்கு முக்கியக் காரண மாயிற்று. இவ்வொப்பந்தங்கள் இரு வகைப்படும்: ஒன்று, ஐரோப்பியருக்கும் ஆஃப்ரிக்கருக்குமிடையே ஏற்படுவது, இரண்டாவது, ஐரோப்பிய நாடுகளுக் கிடையே ஏற்படும் ஒப்பந்தம் என ஆஃப் ரிக்க ஐரோப்பிய ஒப்பந்தங்களில் இரு வகை இருந்தன.

ஆஃப்ரிக்கத் தலைவர்கள் இவ்வகை உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பல காரணங்கள் இருந்தன, இம்மாதிரி ஒப்பந்த உறவுகளால் பெருமைகொண்ட ஆஃப்ரிக்க நாடுகள் – இவை அண்மை ஆப்ரிக்க நாடுகளுடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் அரசியல் இலாபங் களைத் தருவதாகக் கருதினார்கள். ஓர் ஆஃப்ரிக்கா மன்னன் தன்னுடன் வேற்றுமை கொண்ட மற்ற நாடுகளை அடக்கி வைக்க இம்மாதிரி ஒப்பந்தம் தேவை என்று கருதினான். சில சமயம் வலுக்குறைந்த ஆஃப்ரிக்க அரசு, பலம் வாய்ந்த ஆஃப்ரிக்க நாட்டிற்கு அடி பணியாமலிருப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைந்தன. அல்லது மற்ற ஐரோப்பிய நாடுகளால் தனது சுதந்திரத்திற்கு வர விருக்கும் அபாயத்திலிருந்து இவ்வொப் பந்தங்கள் பாதுகாப்பளித்தன.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

டாஹோமே (பெனின்) அரண்மனை யிலுள்ள புடைப்போவியம். ஐரோப்பிய படைக்கலத்தின் மேம் பாட்டைக் காட்டுகிறது.



நிழற்படம் மனித அருங்காட்சியகம், பாரிஸ்.

## வண்ணப் பக்கங்கள்

**பக்கம் 19**

மேலே; ஃபிரெஞ்சு ஓவியர் பியர் காஸ் டாஞ் தீட்டிய சாமோரி தூரேயின் படம். சாமோரி தூரே குடியேற்றக் காலத்தில் கிளர்ச்சி செய்த பெரும் ஆஃப்ரிக்க வீரருள் ஒருவர். மாண்டிங்கோ பேரர சின் தலைவரான இவர் 17 ஆண்டு களாக ஃபிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துவந்தார். பிறகு சிறைப்பட்டு காபோனுக்கு அனுப்பப்பட்டார். அங்கு 1900இல் இறந்தார். (27ஆம் பக்கக் கட்டுரை காண்க)

நிழற்படம் © லோரே—ஜிரோதோன், பாரிஸ்.

கீழே: செனகாலிலுள்ள டாக்காரில் விடுதலை நாள் அணிவகுப்பு

நிழற்படம் எம். ரெனோதோ © ஹோ--குமி, பாரிஸ்

**பக்கம் 20**

(1) ஒருவேளை 12—15 ஆம் நூற் றாண்டில் செய்யப்பட்ட இம்மட்பாண் டத் தலை (17.5 செ.மீ. உயரம்), இன்றைய நைஜீரியாவின் தென்மேற்கு பகுதியின் வாழ்க்கைக் கலைக்கு ஓர் அரிய எடுத்துக்காட்டாகும். இயற்கை வடிவமுள்ள இம் மனிதத் தலைக்கு மாறாக, மரபுவடிவமான, உருளை மட் பாண்ட உருவத்தில் (2) முடி (அல்லது தலையணி), கண்கள், வாய் ஆகிய வற்றை மட்டும் காணலாம். 19 செ.மீ. உயரமுள்ள இது முற்காலக் கலைக்கு எடுத்துக்காட்டாகக் கருதப்பட்டது. இது ஒரு வேளை 12—15ஆம் நூற் றாண்டைச்சேர்ந்தாகவும் இருக்கலாம். சங்கிலிகள் குமிழ்கள், மணிகள் (21.6 செ.மீ. உயரம்) அமைந்த இரு முட்டை களுள்ள இப்பதக்கம் (3) இதைக் காட்டு கிறது. 47 செ.மீ. உயரமுள்ள இவ் வெண்கலத் தகடு (4) 16 ஆம் நூற் றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். அக்கால்த்தில் (15—18ஆம் நூற் றாண்டு) பெனின் கலை வளம் வளர்ந்தது. மரபு வடிவிலுள்ள தலை, கைகள், கால்கள் அமைந்த இவ்வடிவம் ''சாவின் தூதன்' எனப்படும். (ஐஃப், இக்போ—உக்வு, பெனின், நாக் கலை பற்றி 5 ஆம் பக்கக் கட்டுரை காண்க).

நிழற்படம் © ஆந்திரே ஹெல்டு, எக்குபிளென்ஸ் சுவிட்சர்லாந்து.

**பக்கம் 21**

இந்த 3 சிறு சிலைகளும், வேறு பல பொருள்களும், மாலியிலுள்ள ஷெனா—ஷெனோவில் (''பண்டைய ஷெனே'') அண்மையில் அகழ்ந்தெடுக்கப் பெற்றன. முழங்காலிலிருக்கும் உரு வங்கள் (5) முன்னோரின் ஆவிகளாக இருக்கலாம். இருபாய் கூறுள்ள எழில் சிலையும் (32 செ மீ. உயரம்) சமயச் சிறப்புள்ளதாக இருந்திருக்கலாம். அதன் கழுத்திலும் கரங்களிலும் பாம்புகள் சுற்றியுள்ளன. தலையும் உடலும் ஒன்றாகக் கிடந்தபோதிலும். அவை ஒரே சியைச் சேர்ந்தவையா என்பது உறுதியில்லை. அண்மை ஆஃப்ரிக்க அகழ்வாய்வில் ஊக்கமிகு நிகழ்ச்சியாகும். அங்கு திகழும் ஆய்வுகள் முற்கால ஆஃப்ரிக்க வரலாற்றைப் பற்றி முக்கிய புதிய செய்திகளைத் தருகின்றன. (12, 13 ஆம் பக்கம் பார்க்க)

நிழற்படம்: மிஷேல்; ஓபின் கிர்ட்லி © ஏ'என்·ஏ. பாரிஸ்.










I am
part of me
You are
part of me.
We are
the people
We are
the majority
We were
the silent majority
No more.
no more.
no.. no.. no.
itva mackay
DEAD

# சம வலிமையற்ற போர்

காட்ஃப்ரே என் உஸோய்க்வே



1896 அசாண்ட் போரில் பயன்படுத்திய எறி கோடரிகளும் கத்திகளும்



காட்லிங் துப்பாக்கி

நிழற்படம் © தேசியப் படை அருங்காட்சியகம், லண்டன்.

நிழற்படம் © இன ஒதுக்கத்தை எதிர்க்கும் உலகக் கலைஞர், பாரிஸ்

## வண்ணப் பக்கம் இடப்புறம்

வெள்ளையர் ஆதிக்கத்தையும் இன ஒதுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட இன ஒதுக்கக் கொள்கையின் தொடக்கத்தை, ஒரு சில வெள்ளையர் பெரும்பான்மையான கறுப்பர் மீது ஆதிக்கம் செலுத்திய வரலாற்றில் காணலாம். 'லிவ்ர் சுவர் லாஃப்ரிக் து சுத்' எனும் ஒட்டியிணைக்கப்பட்ட இப்படம் ''இன ஒதுக்கத்தை எதிர்க்கும் கலைஞர்'' எனும் காட்சியில் இடம் பெற்றது. சென்ற ஆண்டு பாரிஸில் நடைபெற்ற இக்காட்சியை ஐ.நா.வும், இன ஒதுக்கத்தை எதிர்க்கும் உலகின் கலைஞர் குழுவும் நடத்தின.

மாபெரும் இன்னல்களை எதிர்த்துப் போராடிய வீர காவியமே ஆஃப்ரிக்காவைப் படைவலிமையால் கைப்பற்றிய கதையாகும். இப்போராட்டத்தில் எல்லா வகைகளிலும் ஐரோப்பியப் படைகளே நல்வாய்ப்பு பெற்றிருந்தன.

முதலாவது, 1880-க்குள் ஐரோப்பிய ஆய்வுப் பயணிகளும் சமய குருக்களும் ஆற்றியசெயல்களின்விளைவாக, ஆஃப்ரிக்கர் ஐரோப்பாவைப்பற்றி அறிந்ததைவிட, ஐரோப்பியர் ஆஃப்ரிக்காவைப் பற்றியும், அதன் இட அமைப்பு, வளங்கள் பற்றியும், அதன் அரசுகள், சமூகங்கள் ஆகியவற்றின் வலிவு நலிவு பற்றியும் நன்கு தெரிந்திருந்தனர்.

இரண்டாவதாக, மருத்துவ முறைகளில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களினாலும், சிறப்பாக மலேரியாவைத் தடுக்க கொயினாவின் பயனைக் கண்டு பிடித்ததினாலும், ஐரோப்பியர் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னாலிருந்ததைவிடக் குறைவாகவே ஆஃப்ரிக்காவைப்பற்றி அஞ்சினர்.

மூன்றாவதாக, ஐரோப்பாவின் பொருள், நிதிவளங்கள் ஆஃப்ரிக்காவின் வளங்களைவிட ஏராளமாக இருந்தன. ஆகவே, வெளிநாட்டுப் படையெடுப்புக்காக ஐரோப்பா ஆயிரக்கணக்கில் செலவழிக்கத் தயாராக இருந்தது. ஆனால் ஆஃப்ரிக்க ஐரோப்பியப் படைத்தாக்குதலை நீண்டகாலம் எதிர்த்து நிற்க இயலவில்லை.

நான்காவது, 1877—78ஆம் ஆண்டு ரஷ்ய—துருக்கியப் போருக்குப் பிறகு வரலாற்றறிஞர் ஜே. ஹாலண்டு ரோஸ் கூறுவதுபோல், ''ஐரோப்பாவில் அமைதியையும் தேக்கத்தையும் ஏற்படுத்திய அரசியல் சமநிலை'' தோன்றியது. ஆனால் ஆஃப்ரிக்காவில் அரசுகளுக்கிடையேயும் அரசுகளுக்குள்ளேயும் பூசலும் பிணக்கும் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக, மாண்டிங்கோ டுக்குலோருடனும், அசாண்டே ஃபாண்டேயுடனும், பகாண்டா புனியோரோவுடனும், பாட்டுரோ புனியோரோவுடனும், மாஷோனா ஏன்டெபெலுடனும் பொருதினர்.

இவ்வாறாக, ஐரோப்பா உள்நாட்டுக் குழப்பமில்லையாதலால், குடியேற்ற நாட்டு நடிவடிக்கையில் முழுக் கவனத்துடன் ஈடுபட்டது. ஆனால் ஆஃப்ரிக்க அரசுகளின் கவனம் பிரிவுபட்டிருந்தது. மேலும் 1914 வரை பிரிவினைக்காலம் முழுவதும் ஐரோப்பிய அரசுகளிடையே குடியேற்றநாட்டுப் பிரச்சினைகளில் வேறுபாடு இருந்த போதிலும், அவை அவற்றைப் போரின்றித் தீர்த்துக்கொண்டன. தென் ஆஃப்ரிக்காவில் ஆங்கிலேயருக்கும் போயர்களுக்கும் ஏற்பட்ட போர் ஒன்றுதான் இதற்கு விதிவிலக்கு.

ஆகவே, போட்டியும் நெருக்கடியும்



நிழற்படம் © மனித இன அருங்காட்சியகம், லண்டன்

ஐரோப்பியர் ஆஃப்ரிக்காவைப் பிடித்த காலத்தில் படைக்கல உற்பத்தியில் தொழில்நுட்பமுன்னேற்றம் ஏற்பட்டது. அதனால் போர் முறையில் பெரு மாற்றம் ஏற்பட்டு, ஐரோப்பியருக்கு அவர்களை எதிர்த்த ஆஃப்ரிக்கரை எளிதில் முறியடிக்கும் போர் வலிமை ஏற்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பின்வழியாக மருந்தடைக்கும் துப்பாக்கிகளும் உலோகத் தோட்டாக் குண்டுகளும் பயன்பட்டதால், தனி வெடிவீரர்களால் நீண்டதூரம், நுட்பமாகத் தாக்க முடிந்தது. இயந்திரத் துப்பாக்கி கண்டுபிடித்ததும், குறிப்பாக 1862-இல் காக்லிங் துப்பாக்கியும் (முன் பக்கம் பார்க்க), 1883இல் மாக்ஸிம் துப்பாக்கியும் (இடப்புறம்) கண்டுபிடித்ததும் முக்கிய நிகழ்ச்சிகளாகும். முன்புறம் மருந்தடைக்குப் பழைய துப்பாக்கி எறி கோடரி, ஈட்டி ஆகியவற்றைப் பயன்படுத்திய பெரும் ஆஃப்ரிக்கப் படைகள், இப்புதிய கொடிய கருவிகளையுடைய சிறிய, கட்டுப்பாடுடைய பயிற்சிமிக்க ஐரோப்பிய படைகளின் முன்னால் நிற்கமுடியவில்லை.

இருந்தபோதிலும், ஆஃப்ரிக்காவைப் பங்கிட்ட ஐரோப்பிய அரசுகளிடையே அரியதோர் ஒற்றுமை காணப்பட்டது. இதனால் அவற்றினிடையே போர் தவிர்க்கப்பட்டதுமல்லாமல், அவற்றினிடையே சண்டை மூட்டவும் ஆஃப்ரிக்க அரசர்களால் இயலவில்லை.

அக்கால முழுவதும் பல்வேறு ஐரோப்பிய அரசுகள் ஆஃப்ரிக்க நாடுகளை ஒவ்வொன்றாகப் பிடித்தன. அப்போது எந்த ஓர் ஆஃப்ரிக்க அரசையும் ஐரோப்பிய அரசு எதுவும் ஆதரிக்கவில்லை.

ஆயினும், ஆஃப்ரிக்க அரசுகளிடையே ஒற்றுமையும் கூட்டுறவும் காணப்படவில்லை. அவற்றுள் சில தம் அண்டை நாடுகளுக்கெதிராகக் கூட்டுச் சேரவும் தயங்கவில்லை. இதனால் இறுதியில் அவை தோற்கடிக்கப்பட்டன. பகாண்டா புனியோரோவுக்கெதிராக ஆங்கிலேயருடனும், பரோட்சே எல்டெ செலேவுக்கெதிராக ஆங்கிலேயருடனும், பம்பாரா ருக்குலோருக்கெதிராக ஃபிரெஞ்சுக்காரருடனும் கூட்டுச் சேர்ந்தனர்.

ஆஃப்ரிக்காவைவிட ஐரோப்பா பெற்றிருந்த படைத்துறை வலிமையே இறுதியும் முக்கியமுமான காரணமாகும். ஐரோப்பாவிடம் நன்கு பயிற்சி பெற்ற நிலையான படை இருந்தது. ஒரு சில ஆஃப்ரிக்க அரசுகளே நிலையான படை வைத்திருந்தன- மேலும் ஐரோப்பியர் எண்ணிக்கை உயர்வுக்காக ஆஃப்ரிக்க கூலிப்படைகளை எப்போதும் பெற முடிந்தது.

எல்லாவற்றிற்கு மேலாக, 1890ஆம் ஆண்டின் ப்ரசல்ஸ் ஒப்பந்தப்படி, ஆஃப்ரிக்கருக்குப் போர்க்கருவிகள் விற்பதில்லையென்று ஏகாதிபத்திய அரசுகள் ஒப்புக்கொண்டன. இதனால் ஆஃப்ரிக்கப் படைகள் பெரும்பாலும் வழக்கொழிந்த துப்பாக்கி, கல்பொறித் துப்பாக்கி, வாய்ப்புறம் மருந்தடைக்கும் துப்பாக்கி ஆகியவற்றைப் பயன்படுத்தினர். அவர்களிடம் பீரங்கி அல்லது கடற்படை இல்லை.

ஐரோப்பியர் பெற்றிருந்த இந்த பொருளாதார, அரசியல், எல்லாவற்றிற்கு மேலாக படைத்துறை, தொழில்நுட்ப மேன்மையின் பயனாக, அவர்களுக்கும் ஆஃப்ரிக்கருக்கும் நடந்த போராட்டம் சம ஆற்றலில்லா போராட்டமாக இருந்தது. அதன் முடிவும் தவிர்க்க முடியாததாகவே இருந்தது. ஐரோப்பாவிற்கு, வெற்றிபெற அதைவிட மேலான தருணம் இருந்திராது; ஆஃப்ரிக்காவுக்கும் அதைவிட மோசமான தருணம் இருந்ததில்லை.



நிழற்படம் © லாங்மன், லண்டன்

19ஆம் நூற்றாண்டு யோருபா ஒபா (அரசர்)வும் இரு தளபதிகளும். இவர்கள். 'டேன்' துப்பாக்கி எனப்படும். கல்பொறித் துப்பாக்கிகளை வைத்திருக்கின்றனர்.

# வட ஆஃப்ரிக்கா: நீண்ட போராட்டம்

அப்தல்லா லாரூய்



மொராக்கோவில் ரிஃப் போரின் போது உளவு விமானம் பீரங்கி படைக்குச் செயல் எல்லைபற்றி அறிவுறுத்துகிறது.

நிழற்படம் © ரோஜர் வியோல், பாரிஸ்

வட ஆஃப்ரிக்காவில் 19ஆம் நூற்றாண்டில் குடியேற்ற ஆதிக்கவாதிகளின் ஆக்கிரமிப்பு, முந்தையப் படையெடுப்புகளைவிடத் தீவிரமாகியது. ஸ்பானியர்கள், சியூட்டாவிலும், மெலிலாவிலும் நிலை கொண்டு, முன்னேற முயன்று வந்தார்கள். அவர்களின் முயற்சியை மொராக்கோ அரசு நான்கு நூற்றாண்டுகளாக எதிர்த்து முறியடித்து வந்தது. ஸ்பானியர்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ள மொராக்கோ மக்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்த முற்றுகையை நீக்குவதற்காகவே 1859-60இல் ஸ்பெயின் போர் தொடுத்தது. ரியோ டி ஓரோ விரிகுடாவை ஸ்பெயின் ஆக்கிரமித்தது. இந்த ஆக்கிரமிப்பு குறித்து, ஆஃப்ரிக்காவை ஆதிக்க மண்டலங்களாகப் பிரிப்பது பற்றி பெர்லினில் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளுக்கு 1884 டிசம்பர் 26இல் தெரிவிக்கப்பட்டது. இத்துடன், சென்ற நூற்றாண்டின் இறுதிக்குள் வட ஆஃப்ரிக்காவின் கடலோரமாக ஸ்பெயினுக்கு மூன்று ஆக்கிரமிப்பு வாயில்கள் கிடைத்தன.

மொராக்கோவின் தனிநபர்களுக்குப் "பாதுகாப்பு" அளிப்பது குறித்து 1880-லும் 1881-லும் நடந்த மாட்ரிடு மாநாட்டில், மொராக்கோவின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த "மக்சன்" என்ற சமய—அரசியல் குழுமம், பன்னாட்டளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, தெளிவாக எல்லை வரையறுக்கப்பட்ட நிலப்பரப்புக்குச் சுதந்திரத்தையும் இறைமையினையும் பெற முயன்றது. இதற்கு ஆங்கிலேயரும் ஆதரவளித்தனர். எனினும், ஃபிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளின் தன்னலக் கூட்டணி காரணமாக இம் முயற்சி தோல்வியடைந்தது.

மொராக்கோவை இழந்துவிட்டதாகவே எப்போதும் எண்ணி வந்த ஃபிரான்ஸ் இந்த மாநாட்டிற்குப் பிறகு, உடனடியாக டுவாட் பாலைவனச் சோலைகள் பற்றிய சிக்கலை எழுப்பியது. மத்திய ஆஃப்ரிக்காவுக்கும் ஃபிரான்சுக்கும் வாணிகத்தைப் பெருக்க உதவும் சகாரா இருப்புப் பாதை அமைப்பது குறித்துப் பாரிசில் மிகுதியும் பேசப்பட்டு வந்தது. ஆனால் இத்திட்டத்திற்கு பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன. மத்திய சகாராவிலிருந்த பாலைவனச் சோலைகள் அரசியல் முறையில் மொராக்கோவைச் சார்ந்திருந்தன. அதன் சுல்தானைத் தன் பக்கம் இழுக்க ஃபிரான்ஸ் முயன்றது. ஆனால், ஆங்கிலேயரின் ஆதரவுடன் சுல்தான், ஃபிரான்சின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டார். அதே சமயம் டுவாட்டில் தன்னுடைய நிருவாக, அரசியல் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டார்.

மாக்ரபுக்குக் கிழக்கில், துனீசியர்கள் பல நூற்றாண்டுகளாக இத்தாலியருக்கு எதிராகப் போராடி வந்தார்கள். இத்தாலி தனது குடிகளை துனீசுக்கு அனுப்பியிருந்தது. அங்கு முதலீடுகள் செய்திருந்தது; தனது பண்பாட்டையும் பரப்பி வந்தது. எனவே, துனீசில் பக்ர ஆட்சியாண்மையை ஏற்படுத்த இத்தாலி எண்ணியிருந்தது. ஆயினும் நூற்றாண்டுகளுக்கு மேலாக அல்ஜீரியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த ஃபிரஞ்சுக்காரர்களால் தான் உண்மையில் துனீசியாவுக்கு அபாயம் தோன்றியது.

அல்ஜீரியாவில் தனக்கு ஏற்பட்ட தோல்விகளைத் தொடர்ந்து, டிரிப்போலிட்டானியாவையும், சிரினேக்காவையும் தன் ஆட்சியின் கீழ் மீண்டும் கொண்டு வரவும், துனீசியாவில் தனது அரசியல் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ளவும் கான்ஸ்டாண்டிநோப்பிள் சுல்தான் தீர்மானித்தார். பகர ஆட்சியாண்மையில் ஆட்டோமனுக்கு ஆதரவான கருத்து நிலவியது. ஆனால், சுல்தானின் நடவடிக்கைகள் தனது ஆட்சியுரிமையைப்பறிக்குமென அஞ்சிய பே, இத்தாலி, ஃபிரஞ்சு நாடுகளின் ஆதரவை நாடினார். இந்த நடவடிக்கை அவருக்கே அழிவாக முடிந்தது. அரசியல் குழப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஃபிரஞ்சு அரசு, அந்நாட்டின் மீது படையெடுத்தது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆபத்து சூழ்ந்து விட்டதை உணர்ந்த சுல்தான், ஃபிரான்சுடன் 1881 மே 12இல் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது. இதன்படி அவர், ஃபிரான்சின் காப்பாட்சியின் கீழ் வர நேர்ந்தது.

எனினும், சர்கல் சமயத் தலைநகராகிய கைரூவான் ஆகியவற்றின் குடிமக்கள், ஆட்டோமான் ஆதரவு கிடைக்கும் என நம்பி, உடனடியாகக் கிளர்ச்சி செய்யலானார்கள். இந்தச் சமயத்தில் வடமேற்கிலும், மத்திய பகுதியிலும், தென்பகுதியிலும் உள்ள மலைப்பகுதிகளில் வலுவான எதிர்ப்பினை முறியடிப்பதற்காக இரண்டாவது படையெடுப்பை ஃபிரெஞ்சுப்படைகள் தொடங்கின. ஸ்பாக்ஸ், காபிஸ் பகுதிகளில் கடற்

---

**அப்தல்லா லாரூய்** மொர்ராக்கோ நாட்டவர்; ராபாட் பல்கலைக்கழகத் தற்கால, இன்றைய வரலாற்றுப் பேராசிரியர்; மாக்ரெப் வரலாற்று வல்லுநரான இவர், 19ஆம் நூற்றாண்டில் வட ஆஃப்ரிக்க வரலாற்றுப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

படையினரால் குண்டுகள் வீசப்பட்டன. 1881 குளிர்காலத்தில் நீண்ட முற்றுகையை கைரூவான் தாக்குப்பிடித்தது. டிரிப்போலிட்டானியாவுக்கு அருகிலிருந்த தென்பகுதிகள் பாதுகாப்பற்ற பகுதிகளாக இருந்தன.

துனீசியா மீது இத்தாலி உரிமை கொண்டாடி வந்தது. ஆனால், அதன் முயற்சிகளுக்கு துனீசியர்கள் இடங்கொடுக்கவில்லை. இஸ்லாமிய இறைமைக்கு அவர்கள் விசுவாசமுடையவர்களாக இருந்தார்கள்; துனீசியரின் தேசிய உணர்வுக்கு இது அடித்தளமாக அமைந்தது.

இங்கிலாந்துக்கும் ஃபிரான்சுக்குமிடையில் 1904 ஏப்ரலில் பொது உடன்படிக்கை ஏற்படும் வரையில், ஐரோப்பிய வல்லரசுகள், யாக்ரப் மீது உரிமை கொண்டாடிக் கொண்டு, அவ்வப்போது சிறுசிறு நிலப்பகுதிகளைக் கைப்பற்றி வந்தன. முதலாம் ஹசன் ஆட்சியின் இறுதியில், 1893இல் ஏற்பட்ட போரின் விளைவாக, மெலிலாவின் அண்டைப் பகுதியில் 1860இல் தான் கைப்பற்றிய பகுதிகளை ஸ்பெயின் தக்க வைத்துக்கொண்டது.

இதற்கு ஏழாண்டுகளுக்குப் பிறகு, பா அகமதுவின் பகவர் ஆட்சியாண்மையின்´ இறுதியில், டுவாட் சிக்கலைத் தனக்குச் சாதகமாக இறுதியாகத் தீர்த்துக்கொள்ள இதுவே தக்க தருணம் என ஃபிரான்ஸ் கருதியது. அறிவியல் ஆய்வு என்ற சர்க்கில், வலுவான படையொன்று டுவாட் பாலைவனச்சோலைகளை நெருங்கியது இப்படையினர், 1899 டிசம்பரில் இன்சலாவைத் தம்மிடம் ஒப்படைத்துவிடும்படி கோரினர். மொராக்கோ சுல்தானால் நியமிக்கப்பட்ட குறுநிலத் தலைவரும் அரசுப் படையினரும் இன்சலாவின் தலைவர்களும் சேர்ந்து ஃபிரெஞ்சுப்படையினரைக் கடுமையாக எதிர்த்தனர். இரத்தக் களரி மிகுந்த பல போர்களுக்குப் பிறகு, 1901 மார்ச்சில் தால்மினில் நடந்த இறுதிப் போரில் ஃபிரஞ்சுப் படையினர் பாலைவனச் சோலைப் பகுதியைக் கைப்பற்றினர்.

இளம் சுல்தான் அப்தல் - அசீஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஆலோசனையின் பேரில், உண்மை நிலையை உணர்ந்து, கட்டாயத்தின் கீழ் 1902 ஏப்ரல் 20இல் உடன்படிக்கையொன்றில்கையெழுத்திட்டார். இதற்குக் கைம்மாறாக, கிழக்கிலும் தெற்கிலும் மொராக்கோவுக்கும், ஃபிரஞ்சுப் பகுதிக்குமிடையிலான எல்லையைத் தெளிவாக வரையறுக்கும்படி சுல்தான் கோரினார். ஆனால், மேற்கொண்டும் படையெடுப்புக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள ஃபிராஸ்ன் விரும்பியதால், இக் கோரிக்கையை அது ஏற்றுக்கொள்ளவில்லை.

டுவாட் பகுதியை•இழந்ததன் காரணமாக, சுல்தானின் அதிகாரம் 1911 வரையில் மேலும் பலவீனமடைந்து வந்தது, மொராக்கோவை அடிமை கொள்ளும் நோக்கத்துடன் அதைச் சுற்றி வளைக்க ஃபிரான்ஸ் விரும்புகிறது என்பதை மொராக்கோ அரசு உணர்ந்திருந்தது. ஃபிரான்சின் நோக்கங்களை இங்கிலாந்து எதிர்க்கவில்லை என்பதையும், ஜெர்மனியின் உதவியை நம்ப இயலாது என்பதையும் மொராக்கோ அரசு அறிந்திருந்தது.

மொராக்கோவுடனான எல்லையை ஃபிகுலிக் பாலைவனச்சோலைக்கு அப்பால் வரையறுக்க ஃபிரான்ஸ் எப்போதுமே மறுத்து வந்தது. அதுமட்டுமின்றி, மொராக்கோ நிலப்பகுதியைக் கொஞ்சங்கொஞ்சமாக ஆக்கிரமித்துக் கொண்டு வந்தது. இவ்வாறு, சாவ்ரா பள்ளத்தாக்குவரை வந்துவிட்ட ஃபிரஞ்சுக் காரர்கள், குழப்ப நிலையை ஒடுக்கி வாணிகத்திற்குப் பாதுகாப்பு ஏற்படுத்துவதாகக் கூறிக் கொண்டு, வாடிர் கிர்ருக்கும் வாடி சூஸ்ஃபானாவுக்குமிடையிலான பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர். சுங்கவரிகளில் மொராக்கோ அரசு தமக்குப் பங்கு தரவேண்டுமெனவும் ஃபிரெஞ்சுக்காரர்கள் கேட்டனர். இதற்

(தொடர்ச்சி IIIஆம் பக்கம் பார்க்க)

## சைரனாய்க்காவையும் ட்ரிப்போலிட்டானியாவையும் இத்தாலி கைப்பற்றுதல்

ஆட்டோமன் ஆட்சியிலிருந்த சைரனாய்க்காவையும் ட்ரிப்போலிட்டானியாவையும் கைப்பற்ற இத்தாலி முனைந்து வந்தது. ஆட்டோமனின் கவனக்குறைவைக் கண்டித்து இத்தாலி செப்டம்பர் 28, 1911இல் கான்ஸ்டான்டிநோப்பிளுக்கு எச்சரிக்கை விடுத்து, அக்டோபரில் ட்ரிப்போலி, பெங்காசி, ஹோம்ஸ், டோப்ருக் ஆகிய இடங்களில் படைகளை இறக்கியது. விரைவில் துருக்கியர் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. ஆயினும் சனுசியா எனும் இஸ்லாமிய சமூகத்தின் ஆன்மீகத் தலைவரான அகமது அல்—ஷரீஃப் (கீழே வலப்புறம்) தலைமையில் இயங்கிய இப்பகுதி வாழ் மக்கள் இத்தாலியருக்குப் பணியவில்லை. 1913இல் இத்தாலியர் டெர்னாவுக்குத் தெற்கில் அகமது அல்—ஷெரீஃபின் படைகளைத் தாக்கினர். ஆனுல் மே 16இல் அவர்கள் யாம அல்—ட்ஜுமா எனும் போரில் படுதோல்வியுற்றனர். சனுசியா எதிர்ப்பு20ஆண்டுகளாக, குறிப்பாக உமர் அல்-முக்தார் (கீழே இடப்புறம்) தலைமையில் தொடர்ந்து வந்தது. இத்தாலியர் மக்களைப் பெருமளவில் சிறைப்படுத்திய போதிலும், 1931இல் உமர் அல்—முக்தாரைப் பிடித்துத் தூக்கிலிட்ட பிறகுதான் எதிர்ப்பைஇறுதியில்முறியடிக்கமுடிந்தது.





# மேற்கு ஆ∴ப்ரிக்கா வாழ்வுப் போர்

எம்பே கயே, ஆல்பெர்ட் ஆது போஹென்

1880 முதல் 1900 வரையிலான காலம் மேற்கு ஆஃப்ரிக்காவை ஐரோப்பியர்கள் வென்று உரிமை பெற்றகாலம். மேற்கு சூடான், ஐவரி கோஸ்ட், டஹோமி பகுதிகள், 1880, 1898 ஆண்டுகளில் ஃபிரெஞ்சுப் படையெடுப்புநிகழ்ந்தது. 1895, 1903 ஆம் ஆண்டுகளில் அசான்டே, சமவெளிப்பகுதி மற்றும் நைஜீரியாவிள், பிரிட்டீஷ் படையெடுப்புகளும் நடைபெற்றன.

இக் காலகட்டத்தில் எல்லா ஆஃப்ரிக்கர்களும் கொண்டிருந்த ஒரே நோக்கம், தங்கள் சுதந்திரத்தையும். பரம்பரை வாழ்க்கை முறைகளையும், காத்துக் கொள்வதுதான். எனினும் இதற்கென அவர்கள் மேற்கொண்ட முறைகள் வேறுபட்டன. ஆஃப்ரிக்கர்களுக்கு எதிர்த்துப் போரிடுதல், ஒப்பந்த உறவு, அல்லது அடி பணிதல் என்ற மூன்று வழிகளே இருந்தன. எதிர்த்துப் போரிடுவதற்கு, நேரடியான போர், முற்றுகை, கொரில்லாப் போர்முறைகள், வறண்ட நிலக்கொள்கை ஆகியவற்றுடன் அரசியல் தந்திரமான முறைகளிலும் ஈடுபட வேண்டியிருந்தது.

மேற்கு ஆஃப்ரிக்காவில் ஆதிக்கம் ஏற்படுத்த ஃபிரான்ஸ் பெரும்பாலும் இராணுவ முறைகளையே மேற்கொண்டது. பிரிட்டன் ஒப்பந்தங்கள் மூலம் வெற்றி கண்டது. ஆஃப்ரிக்க நாடுகளோ அடி பணிதல், ஒப்பந்தஉறவு, நேரடி எதிர்ப்பு போன்ற மூன்று முறைகளையும் மேற்கொண்டன. எனினும் மிக அதிகமான தலைவர்கள் ஆதிக்கத்தை நேரடியாக எதிர்த்துப் போரிட்டனர். மேற்கு ஆஃப்ரிக்காவில் எதிர்ப்பு இருந்ததற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் இருந்தன. முதலாவதாக இங்கே ஃபிரான்ஸ் இராணுவ முறையை மேற்கொண்டது. இரண்டாவது காரணம் இங்கே வாழ்ந்த மக்கள் இஸ்லாமியர்களாக இருந்தது. கிரௌடர் என்பவர் சொன்னதுபோல, மேற்கு ஆஃப்ரிக்க முஸ்லிம் சமுதாயத்தில் வெள்ளையர் ஆட்சி—வேற்று மதத்தவரின் ஆட்சி எனக் கருதப்பட்டதால்—முஸ்லிம் மக்கள் ஏற்க முடியாததாக இருந்தது. இஸ்லாமியர் அல்லாதாரை விட, இவர்கள் அதிக உணர்ச்சியுடனும் உறுதியுடனும் ஐரோப்பியரை எதிர்த்தனர்.

இந்தப் பொதுவான கருத்தை மன்ங்கோ அரசின் தலைவனான சமோரி டுரே என்பவரின் வரலாற்றிலும் வாழ்க்கையிலும் விளக்கமாகக் காணலாம்.

(அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த வீரர்களில் சிறந்தவரான சமோரி டுரே, 1830ஆம் ஆண்டில் தற்போதைய கினிக்கு அருகில் சர்ராங்கோ என்ற இடத்தில் பிறந்தார். இவர் தியூலா இன முஸ்லிம். மான்டிங்கோ இன மக்களின் ஆதரவுடன் மெல்ல மெல்ல ஒரு மாபெரும் அரசை நிறுவினார். 1880இல் சிறந்து விளங்கிய இவரது ஆட்சி அப்பர் ஓல்டா விலிருந்து– ஃபௌதா ஜலான் பகுதிக்கு மேற்குவரை விரிவடைந்திருந்தது).

சமோரி டுரே நேரடி எதிர்ப்பை மேற்கொண்டார். ஒப்பந்த உறவுகொள்ள அவர் விரும்பவில்லை. அரசதந்திரத்தையும் அவர் கையாண்ட போதிலும், போரையே முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தினார். 1881ஆம் ஆண்டுக்குள் மேற்கு ஆஃப்ரிக்கக் காடுகள் முழுவதையும் ஒட்டிய சூடானின் தெற்குப் பகுதியையும், தற்போதைய சியரா லியோனின் வடக்குப் பகுதிக்கும், ஐவரி கோஸ்டின் சசான்டிரா நதிக்கும் இடைப்பட்ட பகுதிகளை எல்லாம் தனது ஆட்சிக்கு உட்பட்ட தனிப்பெரும் அரசாக மாற்றி விட்டார்.

டுகுலார் அரசைப் போல அல்லாது, 1882இல் ஃபிரான்ஸுக்கும் சமோரிக்கும் இடையே நிகழ்ந்த முதற்போரின்போது மன்டிங்கோ ஆட்சி மேலோங்கிய நிலையில் இருந்தது. அப்பகுதியில் பெற்ற வெற்றியின் காரணமாக சமோரி ஐரோப்பியப் போர்க்கருவிகளுடன் ஒரு வலிமை

*1898 செப்டம்பர் 29இல் கெலமூவில் தளபதி கூரோ, சாமோரி தூரேயைப் பிடிக்கிறார். வண்ணப் ப்க்கம் 19 பார்க்க)*



நிழற்படம் © ஹாலிங்-வியோல், பாரிஸ்

---

**எம்பே கயே,** செனகால் நாட்டவர். டாக்கர் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளர் 19,20 ஆம் நூற்றாண்டு மேற்கு ஆஃப்ரிக்க வரலாற்று வல்லுநர்; அடிமை வாணிகம், ஃபிரெஞ்சுக் குடியேற்றம்பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார்

**ஆல்பெர்ட் ஆது போஹென்** (வாழ்க்கைக் குறிப்பு 15 ஆம் பக்கம் பார்க்க)

மிக்க இராணுவத்தை உருவாக்கினார். இந்தப் படையில் காலாட்படை (சோபா) குதிரைப்படை என்று இரு பிரிவுகள் இருந்தன. 1887இல், காலாட் படையில் 30,000 முதல் 35,000 பேர் வரையிலும் குதிரைப் படையில் 3,000 பேர்களும் இருந்தனர்.

காலாட்படை 10 முதல் 20 பேர் களடங்கிய நிரந்தரப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இப்பிரிவுகள் சே (கால்கள்) அல்லது குலு (குவியல்) எனப்பட்டன. ஒவ்வொரு பிரிவுக்கும் குன்டிகி என்ற தலைவன் இருந்தான். பத்து பிரிவுகள் (சேச்கள்) ஒரு போலோ என்று அமைக்கப்பட்டு ஒரு போலோ குன்டிகியின் தலைமையில் இயங்கின. குதிரைப்படை, "செரெ" என்ற 50பேர் அடங்கிய பிரிவுகளாக அமைக்கப்பட்டன. போலே முக்கியமான தாக்கும் படையாக இருந்தது. ஒவ்வொரு போலேவுடனும் ஒரு 'செரெ' உடன் செல்லும் இப்பிரிவுகள் நிரந்தரமானவையாக இருந்தமையால் வீரர்கள் ஒருவருக்கொருவர் நட்புடன் பழகினர். அவர்கள் தமது பிரிவின் தலைவனுக்கும் பின்னர் சமோரிக்கும் நன்றியுடையவர்களாக இருந்தனர். இம்மாதிரியான ஒருமைப்பாட்டை உருவாக்கியதால் இப்படை ஓரளவு தேசியப்படையாக விளங்கியது.

சமோரியின் இராணுவம் உயர்ந்த பயிற்சியும் போர்க் கருவிகளும் கொண்டிருந்தது. மேற்கு ஆஃப்ரிக்காவின் மற்ற படைகளைப்போல் அல்லாது இப்படை தொழில் திறனுடன் விளங்கியது. சமோரி இப்படைக்குப் போர்க் கருவிகளைத் தந்தான். 1876 வரை உள்நாட்டுக் கொல்லர்களால் பழுதுபார்க்கக் கூடியதுமான பழைய துப்பாக்கிகளை இப்படைக்கு சமோரி அளித்தான். 1876ஆம் ஆண்டு முதல் சியரா லியோனிலிருந்து நவீன ஐரோப்பிய ஆயுதங்களை வாங்கினான். அவனது பகுதிக்கு உகந்த ஆயுதத்தைப் பரிசீலனை செய்து தேர்ந்து எடுத்துக் கொண்டான். சாஸ்பாட் துப்பாக்கிகளின் பெரிய குண்டுகள் ஈரமான தட்பவெப்ப நிலையினால் பாதிக்கப்பட்டதால் 1885 முதல், கனமில்லாத குண்டுகளை உடைய கிராஸ் துப்பாக்கிகளையும் க்ராபாட்செக் துப்பாக்கிகளையும் பயன்படுத்தத் தொடங்கினான்.

1880 ஆண்டுகளில் தன் நாட்டைச் சேர்ந்த கொல்லர்களைக் கொண்டு இத்துப்பாக்கிகளைப்போன்று தயாரிக்க பயிற்சி அளித்தான். 1888இல் விரைந்து சுடக்கூடிய துப்பாக்கிகளைச் சேர்த்து 1893ஆம் ஆண்டில் அவனிடம் 6,000 துப்பாக்கிகள் இருந்தன. தோல்வி அடையும் வரை இவற்றையே அவன் பயன்படுத்தினான். ஆனால் அவனிடம் பீரங்கிப்படை இல்லாததால், ஃபிரெஞ்சுப் படைகளுடன் நடத்திய போர்கள் அவனுக்குச் சாதகமாக இல்லை.

1882இல் ஃபிரெஞ்சுக்காரர்களை எதிர்த்தபோது சாமுரி பெரும் ஆற்றலுடையவனாக இருந்தான். அவ்வாண்டு பிப்ரவரி மாதம் லெப்டினன்ட் அலகமேசா அவனை அழைத்து மேற்கு செனகால்–நைஜர் உயர் அதிகாரிகளின் ஆணையைத் தெரியப்படுத்தினான். அவ்வாணைப்படி மன்டிங்கோ பகுதிகளுக்குச் சமோரி செல்லும் வழியில் இருந்த வாணிப–மையமான கென்யேரானிலிருந்து அவன் விலகிச் செல்ல வேண்டும்.

எதிர்பார்த்ததுபோல, சமோரி இதற்கு உடன்படவில்லை. இதனால் அவனுடைய படைகள்மீது ஃபிரெஞ்சுத் தளபதி போர்க்னி தெபார்டே திடீர்த் தாக்குதல் நடத்தினான். ஆனால் அவன் அவசரமாகப் பின்வாங்க வேண்டியதாயிற்று. ஏப்ரல் மாதம் சமோரியின் சகோதரன் பமாகோவிற்கு அருகில் வென்யாகோ என்ற இடத்தில் ஃபிரெஞ்சுப் படைகள் மீது தாக்குதல் நடத்தினான். ஏப்ரல் இரண்டாம் நாள் நடந்த போரில் அவன் வெற்றி பெற்றான். ஆனால், ஏப்ரல் 12ஆம் தேதி அதைவிடச் சிறிய ஃபிரெஞ்சுப் படையால் தோற்கடிக்கப்பட்டான். அதன் பின்னர் ஃபிரெஞ்சுக்காரர்களுடன் மோதுவதைத் தவிர்த்து, தனது நடவடிக்கைகளை கென்டுகுவின் பக்கம் திருப்பினான்.

1885இல் கோம்ப்ஸ் புரேயைக் கைப்பற்றினார்கள். அவன் நாட்டுப் பொருளாதாரத்திற்கு அப்பகுதியின் தங்கம் மிக மிகத் தேவை என்பதை உணர்ந்த சமோரி தன் நாட்டை எதிர்நோக்கியிருந்த அபாயத்தை உணர்ந்தான். அப்பகுதியிலிருந்து, ஃபிரெஞ்சுக்காரர்களை விரட்டுவதென்று முடிவு செய்தான். அவனுடைய படையுடன், கெமி, மசாரா—மமாடி ஆகிய மற்ற இரண்டு படைகளும் இப்போரில் ஈடுபட்டன. பெரும் இருமுனைத் தாக்குதலால் புரே மீண்டும் கைப்பற்றப்பட்டது. ஃபிரெஞ்சுப் படை பின்வாங்கி ஓடவேண்டியதாயிற்று.

அதன் பின்னர், சியரா லியோனில் இருந்த பிரிட்டிஷாருடன் சமோரி உறவு வளர்த்துக்கொள்ள முடிவு செய்தான். 1884இல் ஃபலபாவைக் கைப்பற்றிய பிறகு, ப்ரீடௌவுனுக்கு தூதர்களை அனுப்பி, கவர்னரிடம் பிரிட்டிஷ் ஆட்சியின் பாதுகாப்புப் பொறுப்பில் தன் நாட்டை ஒப்புவிப்பதாக செய்தி விடுத்தான். உண்மையில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு இவ்வுறவின் மூலம் தன்பால் அச்சத்தை ஏற்படுத்தவே சமோரி இந்த வேண்டுகோள் விடுத்தான். உண்மையில் தனது சுதந்திரத்தை அடகு வைக்கும் எண்ணம் ஒருபொழுதும் அவனுக்கு இருந்ததில்லை.

ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே, 1836ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் நாள் ஃபிரெஞ்சுக்காரர்களுடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டான். தனது படைகளை நைஜர் நதியில் வலது கரைக்குத் திரும்ப அழைத்துக் கொள்ள ஒப்புக் கொண்டான். எனினும், புரே, கன்காபாவின்

## நைஜர் கழிமுகத்தில் எதிர்ப்பு

நைஜீரியாவின் பிற பகுதிகளைப் போலவே நைஜர் கழிமுகத்திலும் ஆங்கிலேயர் 1884இல் கழிமுகத் தலைவர் பலருடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்திருந்தனர். சில தலைவர்கள் மத குருக்களைத் தமது அரசுகளில் அனுமதித்தனர்; சிலர் அனுமதிக்கவில்லை. ஆனால் எல்லோரும் வாணிகத்தைக் கட்டுப்படுத்தி, ஆங்கிலேய வணிகர்மேல் வரிவிதிப்பதை வலியுறுத்தினர். புதிய ஆங்கிலேயத் தூதர்களான ஹீவட், ஜான்சன் போன்றோர் இதை ஏற்கவில்லை. கழிமுகத் தலைவருள் செல்வமும் ஆற்றலும் மிகுந்தவரான ஒப்போவின் ஜாஜா ஆங்கிலேய வணிகர் வரி செலுத்த வேண்டும், என்று வலியுறுத்தி, ஓர் ஆங்கிலேய நிறுவனம் வரி செலுத்த இசையும் வரை ஆற்று வணிகத்தை முற்றிலும் நிறுத்திவிட வேண்டும் என்று ஆணையிட்டார். அவர் வரிவிதிப்பதை நிறுத்தவேண்டும் என்று தூதுவர் ஜான்சன் கட்டளையிட்டார். ஆனால் ஜாஜா அதை ஏற்காமல், அதை எதிர்ப்பதற்காக குடியேற்ற அலுவலகத்திற்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பினார். 1887இல், தமது நகரைத் தகர்த்து விடுவதாக ஜான்சன் அச்சுறுத்தியபோதிலும் ஜாஜா இணங்க மறுத்தார். ஜான்சன் அவரைப் பாதுகாப்புடன் கப்பலில் அழைத்துச் செல்வதாக ஏமாற்றிக் கைது செய்து அக்ராவிற்கு அனுப்பினான். அங்கு அவரை விசாரித்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு நாடு கடத்தினர்ன். இதைக் கண்டு நடுங்கிய பிற தலைவர்கள் சரணடைந்து, ஜான்சுன் தம்மீது திணித்த ஆட்சிக் குழுக்களை ஏற்றுக்கொண்டனர்.



நிழற்படம் © லாங்மன், லண்டன்

மன்டிங்கோ இவற்றின் மீது அவனுக்கு உரிமையாயிருந்தது. 1887ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் நாள் மீண்டும் ஒரு ஒப்பந்தப்படி சமோரி, நதியின் இடது கரையை ஃபிரெஞ்சுகாரர்களுக்குக் கொடுத்ததோடு, . ஃபிரெஞ்சுக்காரர்களின் பொறுப்பில் தன் நாட்டின் பாது காப்பையும் ஒப்படைத்தான்.

ஒருக்கால், 1887 ஏப்ரலில் அவனால் 12,000 பேர்களடங்கிய படையினால் தாக்கப்பட்ட டீபா சிகாஸ்ஸோ ஃபாமா இவர்களுக்கு எதிராக, ஃபிரான்ஸ் தனக்கு உதவுவார்கள் என்ற எண்ணத்துடன் ஒப்பந்தத்தில் சாமோரி கையெழுதிட்டிருக்கக் கூடும். ஆனால் சாமோரிக்கும், தங்களை எதிர்த்த சோனிங்கே தலைவன் மாமது லமினுக்கும் இடையே உறவு ஏற்படுவதைத் தடுக்கவே ஃபிரஞ்சுக்காரர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். ஆனால் அவர்கள் அவனுக்கு உதவுவதைவிட, அவனால் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் பிரிவினையையும், புரட்சியையும் ஏற்படுத்துவதில் ஃபிரஞ்சுக்காரர்கள் ஈடுபட்டதோடு, சியரா லியோனிலிருந்து அவன் போர்க்கருவிகளைப் பெறுவதற்கும் தடை செய்தனர் என்பதை உணர்ந்த போது, சமோரி 1888 ஆகஸ்ட் மாதம் சிகாஸ்ஸோவை முற்றுகையிட்டு போர்க் கொடி உயர்த்தினான்.

அவன் இராணுவத்தை திருத்தி அமைத்தான். 1890இல் சியரா லியோனிலிருந்த ஆங்கிலேயருடன் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அதிகமான போர்க் கருவிகளைப் பெறுவதற்கும், படை வீரர்களுக்கு ஐரோப்பிய முறையில் பயிற்சி பெறுவதற்குமான ஒப்பந்தங்களைச் செய்து கொண்டான். படை வீரர்களின் பிரிவுகள் ஊக்கமூட்டப்பட்டன. தற்காப்பை தனது இராணுவ தந்திரமாக ஆக்கினான். மண்ணாலான கோட்டைகள், ஃபிரெஞ்சுபீரங்கிகளுக்கு முன் நிலைத்து நிற்க முடியாது என்பதை உணர்ந்திருந்தான். விரைந்து செயலாற்றும் வகையில் படைவீரர்க்குப் பயிற்சி அளித்திருந்தான். இதனால் எதிர்பாராத நேரத்தில் எதிரிகள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி பெரும் சேதத்தை விளைவித்துவிட்டு மறைந்துவிட முடிந்தது.

1890 மார்ச் மாதம் சமோரியைத் தோற்கடிக்கும் முயற்சியில் ஆர்கினார்ட் செகௌவைக் கைபற்றினான். மேற்கு செனகால்—நைஜர் படைப் பொறுப்பை ஹம்பர்டிடம் ஒப்படைப்பதற்கு முன்னர், 1891இல் தாக்குதல் நடத்தினான். முதல் தாக்குதலிலேயே சமோரியின் ஆட்சி வீழ்ந்துவிடும் என்று ஆர்கினார்ட் கருதினான். இத்தாக்குதலினால் ஏப்ரல் ஏழாம் நாள் கன்கன் கைப்பற்றப்பட்டு, பிஸான்டாகு தீக்கிரையாகியது என்றாலும், விளைவு வேறுவிதமாக இருந்தது. சமோரிக்கு இது எச்சரிக்கையாக அமைந்தது. மட்டுமின்றி கன்கனின் ஃபிரெஞ்சுக்காரர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி 1891 ஆண்டு செப்டம்பர் மூன்றாம் நாள் பாபடுகு என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ஃபிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடிக்கவும் உதவியது.

சமோரிக்கும், ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே மிகப் பெரிய போர் 1892 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 1892 ஜனவரி மாதம் ஹம்பர்ட், அவன் நாட்டின் நடுப்பகுதியில் 1,300 தலைசிறந்த

(தொடர்ச்சி III இணைப்புப்பக்கம்பார்க்க)




## சியரா லியோனில் ஆங்கிலேயர்

சியரா லியோனில் ஆங்கிலேயர் தம் ஆட்சியை நிலைநாட்டுவதற்காக மாவட்ட ஆணையாளரை நியமித்து, எல்லைப்புறக் கவலரைப் பெருக்கி, அடிமை முறையையும். அடிமை வாணிகத்தையும் ஒழித்து, 1896இல் பாதுகாப்பு அவசரத் சட்டத்தை இயற்றி, இரு அறைகளுள்ள எல்லா வீடுகள் மீதும் ஆண்டுக்கு 5 ஷில்லிங்கும், பெரிய வீடுகள் மீது 10 ஷில்லிங்கும் வரிவிதித்தனர். இவற்றை டெம்மெண்டு ஆகிய இனத்தவர் எதிர்த்தனர். இதுவே 1898ஆம் ஆண்டுக் குடிசை வரிப்புரட்சி எனப்படும். டெம் தலைவர் அனைவரும் இவ்வரிசெலுத்த மறுத்து, பாய் ப்யூரே எனும் தலைவரின் கீழ் புரட்சி செய்தனர். ஆட்சிப் பகுதியின் $\frac{3}{4}$ பகுதி அவர்களை ஆதரித்தது. புரட்சிப் படையினர் வாணிக நிலையங்களைத் தாக்கி, கொள்ளையடித்து, ஆங்கிலேய அலுவலரையும் படைகளையும், அந்நிய ஆட்சியை ஆதரித்ததாக சந்தேகப்பட்ட அனைவரையும் கொன்றனர். 1898 மே மாதம் புரட்சிப் படையினர் ஃப்ரீடனுக்கு 25 மைலுக்குள் வந்துவிட்டனர். அந்நகரைக் காக்க லாகோஸிலிருந்து இரு படைப் பிரிவுகள் கொண்டு வரப்பட்டன. இப்புரட்சியின் உண்மை இயல்பு யாது? சியரா லியோனின் ஆங்கிலேய ஆளுநர், இப்புரட்சி மட்டுமல்லாமல் அப்போது அந்நிய ஆட்சிக்கு எதிராக எழுந்த பொது எதிர்ப்பும் ''ஆஃப்ரிக்கர் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றதாலும் அவர்கள் தம் தகுதியையும் தன்னாட்சியையும் உணரத் தொடங்கியதாலும் ஏற்பட்டன என்றார். அவர் கூறியது போல், வெள்ளையன் தனது விளைபொருளுக்கும் உழைப்பிற்கும் கொடுத்த விலையிலிருந்து, ஆஃப்ரிக்கன் தனது 'ஆற்றலை உணரத் தொடங்குகிறார். கடந்த காலத்தைப் போல், வருங் காலத்திலும் வெள்ளையன் ஆஃப்ரிக்கரின் எளிமையையும் 'அறியாமையையும் பயன்படுத்திச் சுரண்ட முடியாது''

மேலே: சிறைப்பட்ட புரட்சித் தலைவர் ப்யூரே. இப்படத்தை ஆங்கிலேய படை அதிகாரி ஒருவர் தீட்டினார்.

நிழற்படம் © பி.பி.சி, ஹல்ட்டன் பட நூலகம், லண்டன்.

# கிழக்கு ஆஃப்ரிக்கா: சூழ்ச்சித் திறமும் எதிர்ப்பும்

**ஹென்றி ம்வான்ஸி**

கிழக்கு ஆஃப்ரிக்காவில் குடியேற்றப் போட்டி மும்முனைப் போட்டியாக இருந்தது. அதில் ஸான்ஸிபார் சுல்தானின் அரசு, ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய மூன்று அரசுகள் போட்டியிட்டன. முதலில் வந்தவர்கள் ஸான்ஸிபாரிலிருந்து செயப்பட்டுவந்த அராபியர். அவர்கள் பெரும்பாலும் கடற்கரையிலும் உள்நாட்டிலும் தந்தத்தையும் அடிமைகளையும் வாங்கி வாணிகம் செய்தனர். 1880-1890—க்கு முன்னால் இந்த அராபிய, சுவாஹிலி வணிகர்கள் கரையிலேயே வாணிகம் செய்துவந்தனர். ஆனால் சென்ற நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளில் கிழக்கு ஆஃப்ரிக்கா உள்நாட்டுப் பகுதியில் நிலையாக ஊடுருவி வந்த ஜெர்மானியரும் ஆங்கிலேயரும் அராபியரின் வாணிக நலத்தைப் பாதிக்கத் தொடங்கினர். ஆகவே அராபியர் தமது வாணிகச் சலுகைகளைப் பாதுகாப்பதற்காக சில பகுதிகளில் தம் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டனர்.

உள்நாட்டிற்குள் சென்ற ஐரோப்பியரும் வணிகரும் சமயக் குருக்களும் இருந்தனர். இவர்கள் அனைவரும் தம் அரசாங்கங்கள் கிழக்கு ஆஃப்ரிக்காவைக் கைப்பற்றவேண்டுமென விரும்பினர். ஏனெனில் அவர்கள் தம் வேலைகளைத் தடையின்றிச் செய்யப் பாதுகாப்பும் உரிமையும் பெற விழைந்தனர்.

ஐரோப்பியர் முன்னேறிய வகை இடத்திற்கிடம் வேறுபட்டது. ஆனால், பொதுவாக வன்முறையையும், கூடுமானபோது ஒரு பகுதிக்கெதிராக மற்றொரு பகுதியுடன் தூதாண்மை ஒப்பந்தங்களையும் அவர்கள் பயன்படுத்தினர். இதற்கு எதிராக ஆஃப்ரிக்கர் படையையும் அரசியல் சூழ்ச்சித்திறத்தையும் பயன்படுத்தினர்; சிலவேளைகளில் பின்வாங்குதல், ஒத்துழையாமை, அறப்போர் ஆகியவற்றையும் பயன்படுத்தினர்.

தாங்கனீய்க்காவின் கடற்கரை நில மக்கள் அபுஷிரியின் தலைமையில் எதிர்ப்பை நடத்தினர். சமூக அளவில், தாங்கனீய்க்காவின் கரையிலும் கென்யாவிலும் சுவாஹிலி, இஸ்லாமியப் பண்பாடு மேலோங்கியிருந்தது. அங்கு அராபியரும் ஆஃப்ரிக்கரும் கலந்த கலப்பின மக்கள் வாழ்ந்தனர். கலப்புத் திருமணம் செய்துவந்த அவர்கள் அப்பகுதியில் வாணிகம் செய்துவந்தனர்.

19ஆம் நூற்றாண்டில் தந்தமும் அடிமைகளும் மிகுதியாகத் தேவைப்பட்டதால், அராபியர் உள்நாட்டுப் பகுதிகளில் தம் வாணிகத்தைப் பெருக்கினர். இவ்வாணிகச் செழிப்பின் விளைவாக கரையோரத்தில் பல நகர்கள் முளைத்தன, ஜெர்மானியரின் வருகையினால் இவ்வாணிகத்திற்கு இடையூறு ஏற்பட்டது. அவர்கள் அங்கு வாணிகம் செய்ய முற்பட்டனர். அப்பகுதி மக்கள், குறிப்பாக அராபியர் இதை எதிர்த்தனர்.

தலைவர் அபுஷிரி 1845இல் அராபியத் தந்தைக்கும் கால்லா அன்னைக்கும் பிறந்தார்.

அவரது தலைமையில் 1888 செப்டம்பரில் கரையோர மக்கள் தாங்காவில் ஒரு ஜெர்மானியப் போர்க் கப்பலைச் சுட்டனர்; பிறகு ஜெர்மானியர் கரையை விட்டுப் போவதற்கு இரு நாள் தவணை கொடுத்தனர். பிறகு அவர்கள் கில்வாவைத் தாக்கி இரு ஜெர்மானியரைக் கொன்றனர். செப்டம்பர் 22இல் 8,000 பேருள்ளபகாமோயோவைத் தாக்கினர். இதை 'அராபியப் புரட்சி' எனக் கூறிய ஜெர்மானியர் ஹெர்மன் வான் விஸ்மனை அனுப்பினர். அவர் 1889 ஏப்ரலில் ஸான்ஸிபாரை அடைந்து, பகாமோயோவினருகிலுள்ள கோட்டையில் அபுஷிரியைத் தாக்கி வெளியேற்றினார். அபுஷிரி வடக்கே உஸிகுவாவிற்குத் தப்பிச்சென்றார். அங்கு அவர் காட்டிக்கொடுக்கப்

**ஹென்றி ம்வான்ஸி:** கென்யா நாட்டவர்; நைரோபி பல்கலைக்கழக வரலாற்று முதுநிலை விரிவுரையாளர். கிழக்கு ஆசிய வரலாற்று வல்லுநர். இதுபற்றிப் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.



இருப்புப்பாதை குடியேற்றத்தின் முக்கிய கருவியாக் இருந்தது. அது படைத்துறை வெற்றிக்கும் அரசியல் ஆதிக்கத்திற்கும் துணைசெய்தது. ஆங்கிலேயர் அமைத்த உகாண்டா இருப்புப் பாதை உகாண்டா, கென்யா ஆகியவற்றின் உட்பகுதிகளைக் கடற்கரையுடன் இணைத்தது, 1901இல் விக்டோரியா ஏரிப்பகுதியையும். 1890களின் தொடக்கத்தில் தாங்கனீய்க்காவில் ஜெர்மானியர் அமைத்த இருப்புப் பாதை டாங்காவில் தொடங்கப்பட்டது. 1905இல் அது உசாம்பாரா மலை அடிவாரத்தை இணைத்தது. கீழே உகாண்டா இருப்புப்பாதையின் நகர்வு முகாம் கட்டுவதில் தண்டவாளம் அமைக்கும் தொழிலாளர் ஈடுபட்டுள்ளார்

நிழற்படம் © அரச பொதுநலக்கூட்டுச் சங்கம், லண்டன்

படவே, ஜெர்மானியர் அவரை 1889 டிசம்பர் 15இல் பங்கானியில் தூக்கிலிட்டனர். 1890 மே திங்களில் ஜெர்மானியர் கில்வாவைத் தாக்கிப் பிடித்ததும் கரையோர எதிர்ப்பு தகர்ந்தது.

கென்யாவிலிருந்த ஆங்கிலேயரைப் போலவே, ஜெர்மானியரும் ஒரு பகுதிக்கு எதிராக மற்றொரு பகுதியுடன் சேர்ந்து கொண்டு பிரித்தாளும் முறையைப் பின்பற்றினர். இதனால் அவர்களுக்குப் பல நண்பர்கள் இருந்தனர். கிளிமஞ்சாரோ உசாம்பாரா ஆகிய தாங்கனீய்க்க மலைகளினருகில் வாழ்ந்த மாரியால், கிபாங்கா இனத்தவர் இதற்கு இரு எடுத்துக்காட்டுகள். இந்தகையோர் தம் எதிரிகளைத் தோற்கடிக்க ஜெர்மானியரின் நட்பை நல்வாய்ப்பாகக் கருதினர். கென்யாவிலிருந்த வாங்கா இனத்தவர் போன்று, இவர்களும் ஜெர்மானியரைத் தாம் பயன்படுத்துவதாக நம்பினர்.

உகாண்டாவில் தோன்றிய பிரிட்டிஷ் குடியேற்ற ஆட்சியிலும் இவ்வாறே நடைபெற்றது. 1891 முதல் 1899 வரை புனியோரோ மன்னர் கபாரேகாவின் படைகளுக்கும், லுகார்டு, பிற பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ஆகியோரின் படைகளுக்கும் சண்டை மூண்டது. கபாரேகாவின் படைகள் சில சண்டைகளில் முறியடிக்கப்படவே, அவர் சூழ்ச்சித் திறத்தைப் பயன்படுத்தினார். அவர் இருமுறை லுகார்டுடன் ஒப்பந்தம் செய்ய முயன்றார். ஆனால் லுகார்டு அம்முயற்சிகளுக்கு இணங்கவில்லை. புகாண்டாவின் கபாக்க இனத்தவரான முவாங்கா, புனியோரோ மன்னரின் சார்பாகப் பரிந்துபேசியும் பயனில்லை. இறுதியில் கபாரேகா மறைமுகப் போரிலிறங்கினார். இதுவே கிழக்கு ஆஃப்ரிக்காவில் முதல்முறை நடைபெற்ற மறைமுகம் போராக இருக்கக்கூடும். கபாரேகா புனியோரோவைவிட்டு வெளியேறி, வடக்கிலுள்ள லாங்கோ நாட்டிற்குச் சென்று, அங்கிருந்து இடையிடையே பிரிட்டிஷ் படைகளுக்குத் தொல்லை கொடுத்துவந்தார்.

லாங்கோவில் பிறகு கபாரேகாவுடன் முவாங்காவும் சேர்ந்துகொண்டார். ஆனால் 1899இல் அவர்கள் ஒளிந்திருந்த இடம் தாக்கப்பட்டு, இரு மன்னர்களும் கைது செய்யப்பட்டு, கிசிமாயுவுக்கு கொண்டு போகப்பட்டனர். அங்கு முவாங்கா 1903இல் உயிர் துறந்தார்.



ஜெர்மானிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய தாங்கனீய்க்க கடற்கரை மக்களின் தலைவர் அபுஷிரி

ஒளிப்படம் © கிழக்கு ஆஃப்ரிக்க வெளியீட்டகம்



ஆங்கிலேயப் படைகளால் கைது செய்யப்பட்டு, கடற்கரைக்கு காவலரால் கூட்டிச்செல்லப்படும் புகான்டா மன்னர் ம்வாங்கவும். புனியோரா மன்னர் காபரேகாவும். சீசெல்ஸ்-க்கு காபரேகாவும், கிசிமாயுவுக்கு ம்வாங்காகவும், நாடுகடத்தப்பட்டனர். 1903 இல் ம்வாங்கோ இறந்தார். இரு மன்னர்களும் சூழ்ச்சித்திறம், நேர்முக எதிர்ப்பு, மறைமுகப் போர் ஆகியவற்றின் மூலம் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்தனர்.

ஒளிப்படம் © அரச பொதுநலக்கூட்டுறச் சங்கம், லண்டன்


குடியேற்ற

ஆல்பெர்ட் ஆது போஹென்



ஆஃப்ரிக்காவை 1935 வாக்கில் குடியேற்ற ஆதிக்கம் உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டது. இந்த ஆதிக்கம் இங்கு என்றென்றும் நிலைபெற்றுவிடுமோ என்று கூடத் தோன்றியது. எனினும், வன்முறையால் தோன்றிய வேறெந்த நிறுவனத்தையும் போலவே குடியேற்ற ஆதிக்கமும் நிலையற்றதாகியது. 1935–லிருந்து 45 ஆண்டுகளுக்குள் குடியேற்ற ஆதிக்க முறை, ஆஃப்ரிக்காவின் 90% பகுதியில் வேருடன் வீழ்த்தப்பட்டது. இன்று இக்கண்டத்தில் லிம்போபே ஆற்றுக்குத் தெற்கில் மட்டுமே குடியேற்ற ஆதிக்கம் நிலவி வருகிறது.

இக்கண்டத்தின் வரலாற்றில் அது ஏதேனும் புரட்சியை உண்டாக்கியதா? அல்லது வந்துபோன வெறும் நிகழ்ச்சியாக அமைந்ததா? சில வரலாற்றறிஞர்கள் இதனை 'நலக்கேடு போலத் தோன்றும் நலம்' என்கின்றனர்; இன்னும் சிலர், குடியேற்ற ஆதிக்கத்தால் ஆஃப்ரிக்காவுக்குத் தீங்கு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை என்கின்றனர்.

"குடியேற்ற ஆதிக்கத்தின் முதல் அரை நூற்றாண்டில் பொருளதார வளர்ச்சி மிகவும் பொதுவாக நடைபெற்றது எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆஃப்ரிக்கச் சமுதாயம் இருந்த நிலைமையை மடு என்றால் இரண்டாம் உலகில் போரின் இறுதியில் இருந்த நிலைமையை மலை என்று சொல்ல வேண்டும். குடியேற்ற ஆதிக்க வல்லரசுகள் இங்கு ஏற்படுத்திய உள்ளமைப்புகளைத்தான், இன்றையச் சுதந்திர அரசுகள் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக நம்பியுள்ளன. மூலை மூடுக்கி

ஆர்பெர்ட் ஆது போஹென் (வாழ்க்கை குறிப்புகளுக்கு 15ஆம் பக்கம் பார்க்க)

"(அந்நிய ஆட்சியில்) நகர்ப்புறங்களில் மக்கள் தொகை பெருகியதற்கு இயற்கையான நகர்ப்புறமக்கள்தொகை பெருக்கம் காரணமன்று; கல்வியும் வேலையும் தேடி இளைஞர் நகரங்களுக்கு இடையறாது சென்றதும், பஞ்சம், கொள்ளை நோய், வறுமை, ஆகியவற்றின் விளைவாககிராமங்களிலிருந்து வெளியேறியதும் காரணமாகும்".

எதிர்பக்கம்: செனகால் தலைநகர் டாக்கரின் இன்றைய தோற்றம்.

"இன்றும் ஆஃப்ரிக்காவில் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையே பெரும் இடைவெளி இருக்கின்றது. குடியேற்ற நாட்டு முறைதான் இந்த இடைவெளியைத் தோற்றுவித்து விரிவாக்கியது".

இடப்புறம்: நமீபியாவில் ஓவாம்போலாந்திலுள்ள பயிர்நிலம் சூழ்ந்த கிராமம்.

நிழற்படங்கள் ஜார்ஜ் கெர்ஸ்டர்ரோபோ, பாரிஸ்

அந்நிய ஆட்சியினால் ஆஃப்ரிக்க கலையை மிகுதியாகவோ, நிலையாகவோ மாற்றமுடியவில்லை. அந்நிய ஆதிக்கம் பற்றிக் குறிப்பிடும்போது கூட ஆஃப்ரிக்க கலைஞர் தம் கண்டத்தின் பண்டைய கலை மரபுகளையே பயன்படுத்தினர். 1920-களில் பெல்ஜிய அதிகாரி ஒருவர் ஓட்டுநரால் ஓட்டப்பட்ட உந்துவண்டியில் செல்வதை காங்கோ (ஸாயர்) நாட்டவரான ஒரு மரச்சிற்பி சித்தரித்திருப்பதில் (இடப்புறம் உட்படம்) இதைக் காணலாம்.

நிழற்படம் © வெர்னர் ஃபோர்மன் ஆவணக் களஞ்சியம், லண்டன்



''அந்நிய ஆட்சியில் பணப் பயிர்கள் மிகுதியாக பயிரிடப்பட்டதால், ஆஃப்ரிக்கர் தமக்கென உணவுப் பயிர்களைப் பயிரிட முடியவில்லை. உணவு உற்பத்திக் குறைவும் கட்டாய வேலையும் அந்நிய ஆட்சியின் தொடக்கத்தில் ஆஃப்ரிக்காவின் சில பகுதிகளில் கடும் பஞ்சத்தையும் கொள்ளை நோய்களையும் விளைவித்தன. இவ்வாறாக அந்நிய ஆட்சியில் ஆஃப்ரிக்கர் பெரும்பாலும் தமக்குப் பயன்படாததை உற்பத்தி செய்தும், தாம் உற்பத்தி செய்யாததைப் பயன்படுத்தியும் வந்தனர்.''
மேலே: சூடானில் பருத்தி அறுவடை.

நிழற்படம்: ஜார்ஜ் ரோட்ஜர் © மாக்னம், பாரிஸ்

லுள்ள கிராமங்களையும் எட்டும் வகையில் திறமையான நிருவாகத்தையும், மற்றும் இரயில் போக்குவரத்துகளையும், சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தியவர்கள் குடியேற்ற ஆதிக்கவாதிகளேயாவர்'' என்று பி.சி. லாய்டு எழுதியுள்ளார்.

குடியேற்ற ஆதிக்கத்தினால் ஆஃப்ரிக்காவுக்கு ஏற்பட்ட நன்மை எதுவுமே இல்லை என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். கயானாவைச் சேர்ந்த கறுப்பு வரலாற்றிஞராகிய வால்டர் ராட்னியின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது;

''அடக்குமுறையும் சுரண்டலும் நடைபெற்ற அதே சமயத்தில் குடியேற்ற ஆதிக்க அரசுகள், ஆஃப்ரிக்கர்களுக்கு நன்மை செய்து ஆஃப்ரிக்காவை மேம்படுத்தினர் எனச் சிலர் கூறுகின்றனர். இது முற்றிலும் பொய்யான கூற்று. குடியேற்ற ஆதிக்கத்திற்கு ஒரே ஒரு கரம் தான் இருந்தது. அதுதான் ஆயுதந்தாங்கிய கொள்ளையரின் கரம்'.

இவ்விரு கருத்துகளுமே நேர் எதிரான தீவிரக் கருத்துகள் ஏன்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். குடியேற்ற ஆதிக்கத்தால் நன்மையும் ஏற்பட்டிருக்கிறது; தீமையும் ஏற்பட்டுள்ளது. ஆனால், செய்யப்பட்ட நன்மைகள் அனைத்தும் குடியேற்றவாதிகள் தங்கள் தன்னலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகச் செய்தவையேயாகும்.

குடியேற்ற ஆட்சியால் ஆஃப்ரிக்காவில் ஏற்பட்ட முதலாவது ஆக்கமுறையிலான அரசியல் நன்மை அங்கு தொடர்ச்சியான அமைதியும் உறுதிப்பாடும் ஏற்பட்டதாகும். 19ஆம் நூற்றாண்டின் ஆஃப்ரிக்காவில், உறுதிப்பாடின்மையினையும், பாதுகாப்பின்மையினையும் ஏற்படுத்திய பல சீர்குலைவு நடவடிக்கைகள் நிகழ்ந்தன. குடியேற்ற ஆதிக்கம் ஏற்பட்ட பின்பு முதல் 30 ஆண்டுகளில் (1880 — 1910) இந்த உறுதிப்பாடின்மையும், வன்முறையும், குழப்பமும் மேலும் தீவிரமடைந்து பேரழிவும், மக்கள் உயிரிழப்பும் ஏற்பட்டன. ஆயினும், குடியேற்ற ஆக்கிரமிப்பு நிலைகொண்டு, பல்வேறு நிருவாக அமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட பின்பு ஆஃப்ரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில், குறிப்பாக இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, தொடர்ச்சியான அமைதியும் பாதுகாப்பும் ஏற்பட்டது.

குடியேற்ற ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்பு, ஆஃப்ரிக்காவில் அரசியல் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட நாடுகள் அமைந்திருக்கவில்லை. நூற்றுக்கணக்கான மரபுக் குழுமங்களும், நகர அரசுகளும், குறுநில அரசுகளும், முடியரசுகளுமே இருந்து வந்தன. இவற்றுக்கு வரையறுக்கப்பட்ட எல்லைகள் கிடையாது. குடியேற்ற ஆட்சி ஏற்பட்ட பின்பு, ஏறத்தாழ 50 நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்பட்டன. இந்த எல்லைகள், சுதந்திரத்திற்குப் பின்னரும் மாற்றப்படவில்லை

குடியேற்ற ஆட்சிக்கு முன்பு ஆஃப்ரிக்கா ஒருபோதும் அறிந்திராத நீதிமுறை அமைப்பினையும், அதிகாரவர்க்க முறை அமைப்பினையும், குடியேற்ற ஆட்சியாளர்கள் தாம் இங்கு ஏற்படுத்தினார்கள். இவ்விரு அமைப்பு முறைகளையும், சுதந்திர அரசுகள் அப்படியே காத்து வருகின்றன.

இறுதியாக. ஆஃப்ரிக்கத் தேசிய உணர்வு மட்டுமின்றி, ஆஃப்ரிக்க ஒருமைப்பாட்டுணர்வும் உருவாவதற்குக் குடியேற்ற ஆதிக்கம் காரணமாக இருந்தது. ஆஃப்ரிக்கத் தேசியத்தை உருவாக்க வேண்டுமெனக் குடியேற்ற ஆதிக்கவாதிகள் நினைத்ததேயில்லை. எனினும், அரசர்களின் நடவடிக்கைகளினால், அவர்களே எதிர்பாராத வகையில், இந்தத் தேசிய உணர்வு தோன்றியது.

ஆனால், இந்த நன்மைகளைவிடத் தீமைகள் அதிகமாக இருந்தன. முதலாவதாக, குடியேற்ற ஆதிக்கவாதிகள், அடக்கு முறைகளிலும், சுரண்டலிலும், ஏவஞ்சனைகளிலும் ஈடுபட்டனர். இதனால். விரக்தியடைந்த மக்களுக்கு ஆட்சியாளர்களின் மீது அடங்கா ஆத்திரம் தோன்றியது. குடியேற்ற ஆதிக்கம் ஒழிந்து, நாடு சுதந்திரமடைந்த பின்னரும், ஆட்சியாளர்களை மக்கள் ஆத்திரத்துடனேயே நோக்குகின்றனர். அவர்களுடைய ஆத்திரத்தைத் தணித்து ஆக்க முறையான தேசிய உணர்வாக மாற்ற வேண்டியது இன்றைய அரசுகளின் முதற் பணியாக இருக்கிறது.

குடியேற்ற ஆட்சியாளர்கள் நாடுகளின் எல்லைகளை வரையறுக்கும் போது, வெவ்வேறு பண்பாடுகளையும், மரபுகளையும் மொழிகளையும் கொண்ட மக்கள் குழுமங்களை ஒரே நாட்டில் இணைத்துப் பல நாடுகளை உருவாக்கி விட்டார்கள். இதனால், இன்று மக்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கி, நாட்டு முன்னேற்றத்தில் அவர்கள் கவனத்தைத் திருப்புவதில் கடுமையான சிக்கல்கள் தோன்றியுள்ளன. மேலும், இவ்வாறு உருவாக்கப்பட்ட நாடுகள் பல்வேறு வடிவளவுகளில் உள்ளன; அவற்றின் இயற்கை வளங்களும், பொருளாதார வள வசதிகளும் ஏற்றத்தாழ்வாக இருக்கின்றன.

குடியேற்ற ஆதிக்கவாதிகள், உள்நாட்டு ஆட்சிமுறைகளைப் பலவீனப்படுத்தியது மற்றொரு பெருந்தீமையாகும். குடியேற்று ஆட்சியர்ளர்களின் அதிகாரிகள், மரபு அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருப்பதைவிடுத்துச் சர்வாதிகாரிகளாகச் செயற்பட்டார்கள். கட்டாயவேலை, நேரடி வரிகள், படைக்குக் கட்டாயமாக ஆளெடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மரபு அரசர்கள் எதிர்த்தார்கள். மேலும், கிறித்தவ சமயத்தைத் தீவிரமாகப் பரப்பியதாலும், அரசர்களின் ஆன்மீக பலம் வெகுவாகக் குறைந்துவிட்டது.

இறுதியான, மிக முக்கியமான தீமை, ஆஃப்ரிக்கர்கள் தங்கள் இறைமையையும், சுதந்திரத்தையும், வெளியுலகுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளும் உரிமையினையும் இழந்தமையாகும். இதன் விளைவாக, அவர்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை இழந்தார்கள்; தங்கள் முன்னேற்றத்திற்குத் தாங்களே திட்டமிடுவதற்கும், தங்களுடைய உத்திகளையும், முன்னுரிமைகளையும் தாங்களே வகுத்துக் கொள்வதற்கும், தங்களுக்குப் பொருத்தமான தொழில் நுட்பத்தை உலக நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும், தங்களுடைய விவகாரங்களைத் தாங்களே நிருவகித்துக் கொள்வதற்கும், தங்களுடைய வெற்றி தோல்விகளிலிருந்து தாங்களே பாடங்

"கிறித்துவ மறையுடன் இணைத்து மேல்நாட்டுக் கல்வியும் பரவியது. அந்நிய ஆட்சியின் இறுதியில் தொடக்கப் பள்ளியாவது இல்லாத இடங்கள் இல்லை எனலாம்.... அந்நிய ஆட்சியாளரே இந்நிலையங்களின் பாடத்திட்டத்தை வகுத்தனர். இது அயல்நாட்டுப் பாடத்திட்டத்தைச் சார்ந்து அல்லது அதைப் போலவே இருந்ததால் ஆஃப்ரிக்காவின் தேவைகளுக்கு ஏற்றதாக இல்லை."
வலப்புறம்: உகாண்டாவில், மெங்கோ விலுள்ள சமய குருகுல உயர்நிலைப் பள்ளி



நிழற்படம் © அரச பொதுநலக் கூட்டுச் சங்கம், லண்டன்.

கற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை இல்லாமற்போயிற்று. சுருங்கக் கூறின், மக்களிடமிருந்து பிரிக்க முயாத, மிக அடிப்படையான உரிமையாகிய சுதந்திர உரிமையை ஆஃப்ரிக்கர்களிடமிருந்து குடியேற்ற ஆதிக்கம் பறித்துக்கொண்டது.

மேலும், ஆஃப்ரிக்காவில் குடியேற்ற ஆட்சி நடந்த 75 ஆண்டுக் காலமும், முதலாளித்துவ நாடுகளிலும், சோசலிச நாடுகளிலும் பெரும் முன்னேற்றமும், மாறுதல்களும் ஏற்பட்ட காலமாகும். எடுத்துக்காட்டாக, விமான யுகத்திலும், மோட்டார் வாகன, அணுஆற்றல் யுகத்திலும் ஐரோப்பா நுழைந்தது இந்தக் காலத்தில்தான். ஆஃப்ரிக்காவும் சுதந்திரமாக இருந்திருந்தால், இந்த முன்னேற்றங்களினால் அதுவும் பலனடைந்திருக்கும்; அந்த மாறுதல்களில் தானும் முக்கியப் பங்கு கொண்டிருக்கும். ஆனால், குடியேற்ற ஆதிக்கம், ஆஃப்ரிக்காவை முற்றிலுமாகத் தனிமைப்படுத்தி வைத்திருந்தது. குடியேற்ற ஆதிக்க நாடுகளை ஆஃப்ரிக்கா நம்பி வாழவேண்டியிருந்தது.

பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட விளைவுகளிலும் நன்மையும் தீமையும் கலந்திருந்தன. நன்மைகளுள் முக்கியமானவை சாலைகளும், இரயில் பாதைகளும், தந்தி தொலைபேசித் தொடர்புகளும், விமான நிலையங்களும் ஏற்பட்டதாகும். இந்த உள்ளமைப்பு வசதிகள் 1930-களில் அமைத்து முடிக்கப்பட்டன. இதனால், சரக்குகள், உணவுப்பொருள்கள், படைகள் ஆகியவற்றின் போக்குவரத்து எளிதாயிற்று; மக்களிடையே குறுகிய மனப்போக்குகள் குறைவதற்கும் இவை உதவின.

குடியேற்ற ஆதிக்கக் காலத்தில்தான், ஆஃப்ரிக்காவின் கனிமவளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுரங்கத் தொழில் வளர்ச்சியடையலாயிற்று. கோக்கோ, காப்பி, புகையிலை, நிலக்கடலை, நார், தாழை, ரப்பர் போன்ற பணப்பயிர்களின் சாகுபடியும் பெருகியது. மேற்கு ஆஃப்ரிக்காவில் இந்தப் பணப்பயிர்களை ஆஃப்ரிக்கர்களே சாகுபடி செய்தனர். தக்க வசதியும் ஊக்கமும் அளித்தால் ஆஃப்ரிக்கர்கள் எந்தப் புதிய உத்திகளையும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கு இது சான்றானது.

பொருளாதாரப் புரட்சியினால், பல முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. குடியேற்ற ஆதிக்கத்திற்கு முன்பு, ஆஃப்பிரிக்காவில் பெரும்பகுதி நிலங்களில் மக்கள்தொகை குறைவாக இருந்தது; அந்த நிலங்களும் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை. பணப்பயிர்களின் சாகுபடியும், சுரங்கத் தொழில் வளர்ச்சியும் இதற்கு முடிவு கட்டின. இரண்டாவதாக, பொருளாதாரப் புரட்சியின் காரணமாக சில ஆஃப்ரிக்க நாடுகளின் வாங்கும் திறன் அதிகரித்தது. அதனால், நுகர் பொருள்களுக்கான தேவையும் பெருகியது. மூன்றாவதாக, ஆஃப்ரிக்கர்கள் பணப்பயிர்களை சாகுபடி செய்வது பெருகியதால், தனி நபர்களின் முக்கியமாகக் கிராமங்களிலுள்ளவர்களின் – செல்வம் ஈட்டும் திறன் அதிகரித்தது.

பணப் பொருளாதாரத்தைப் புகுத்தியது மற்றொரு புரட்சிகரமான மாறுதலாகும். இதனால், சம்பளம் பெறும் புதிய தொரு வர்க்கம் தோன்றியது. ஆஃப்ரிக்காவில் வங்கியியல் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் பணப் பொருளாதாரம் வழிவகுத்தது. 1935 வாக்கில், ஆஃப்ரிக்காவின் பொருளாதாரம் பொதுவாக உலகப் பொருளாதாரத்துடனும், குறிப்பாகக் குடியேற்ற ஆதிக்க வல்லரசுகளின் முதலாளித்துவப் பொருளாதாரத்துடனும் பின்னிப் பிணைந்து விட்டது. 1935க்குப் பிந்திய ஆண்டுகளில் இந்த பிணைப்பு மேலும் விரிவடைந்தது. விடுதலைக்குப் பின்னர்கூட இந்நிலை மாறவில்லை.

ஆஃப்ரிக்காவின் பொருளாதாரத் துறையில் குடியேற்ற ஆதிக்கத்தின் பாதிப்பு ஏற்புடையதாக இருந்ததா? இல்லை என்றே கூறவேண்டும். முதலாவதாக, ஆஃப்ரிக்காவில் குடியேற்ற ஆதிக்கம் ஏற்படுத்திய உள்ளமைப்பு வசதிகள் போதுமானவையாக அல்லது பயனுள்ளவையாக இல்லை. பெரும்பாலான சாலைகளும், இருப்புப்பாதைகளும் நாடுகளையும் நகரங்களையும் இணைப்பதற்காகப் போடப்படவில்லை. கனிமச் சுரங்கங்களை இணைப்பதற்கும், பணப் பயிர்கள் சாகுபடியாகும் இடங்களைக் கடலுடன் இணைப்பதற்குமே இவை போடப்பட்டன. துணைச் சாலைகளும், கிளைச் சாலைகளும் அமைக்கப்படவில்லை. ஆஃப்ரிக்க நாடுகளிடையே பயணவசதிகளையும், செய்திப் போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்த எதுவும் செய்யப்படவில்லை.

இரண்டாவதாக, ஆஃப்ரிக்காவின் பொருளாதார வளர்ச்சி அதன் இயற்கை வளங்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. இதனால் இயற்கை வளங்கள் குன்றியிருந்த பகுதிகள் அடியோடு புறக்கணிக்கப்பட்டன.

மூன்றாவதாக, குடியேற்ற ஆதிக்கப் பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படவில்லை. மூலப் பொருள்களையும், வேளாண்மை விளை பொருள்களையும் உள்நாட்டிலேயே பக்குவம் செய்யும் தொழில்கள் தொடக்கப்படவில்லை. ஆஃப்ரிக்காவிலேயே தயாரித்திருக்கக் கூடியதீப்பெட்டி, மெழுகுவர்த்தி, உண்ணத்தக்க எண்ணெய், எலுமிச்சம்பழம், ஆரஞ்சுப்பழம் போன்ற அடிப்படைப் பொருள்கள்கூட இறக்குமதி செய்யப்பட்டன. ஆஃப்ரிக்க நாடுகள் அனைத்துமே தாங்கள் உற்பத்தி செய்த மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்து விட்டு, அவற்றின் நுகர்வுப் பொருள்களுக்காக வெளிநாட்டுச் சந்தைகளை எதிர்நோக்கி இருந்தன. ஆஃப்ரிக்காவில், தொழில் வளர்ச்சியை இவ்விதம் புறக்கணித்தது, குடியேற்ற ஆதிக்க நாடுகள் செய்த மன்னிக்க முடியாத குற்றமாகும்.

நான்காவதாக, ஆஃப்ரிக்காவில் தொழில் வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டது மட்டுமின்றி, அங்கு குடியேற்ற ஆதிக்கத்திற்கு முன்னர் இருந்துவந்த தொழில்களும் கைவினைகளுங்கூட, மலிவான பொருள்களின் இறக்குமதியால், அழிந்து விட்டன. இதனால், ஆஃப்ரிக்காவில் தொழில் நுட்ப மேம்பாடு தடைபட்டது; சுதந்திரத்திற்குப் பின்புவரை இதில் ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஐந்தாவதாக, பெரும்பாலான ஆஃப்ரிக்க நாடுகளுக்கு வேளாண்மைப் பயிர்களே முக்கியமான வருவாய் ஆதாரமாக இருந்த போதிலும், குடியேற்றங்களின் வேளாண்மைப் பொருளாதாரங்களைப் பன்முகப்படுத்துவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, 1935இல், ஒரேயொரு, அதிகம் போனால், இரண்டு பயிர்கள் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டன. கோல்டு கோஸ்டில் கோக்கோவும், செனிகாலிலும் காம்பியாவிலும் நிலக்கடலையும், சூடானில் பருத்தியும், உகாண்டாவில் காப்பியும் பருத்தியும், தங்கனீக்காவில் காப்பியும் நார்த்தாழையும் பயிரிடப்பட்டன. பெரும்பாலான ஆஃப்ரிக்க நாடுகள், சுதந்திரமடைந்த பின்னர், ஒற்றைப் பண்பாட்டுப் பொருளாதாரங்கள் தங்கள் மீது திணிக்கப்பட்டிருப்பதையும் இதனால், இன்றையப் பன்னாட்டு வாணிகப் போக்குகள் தங்களை அலைக்கழிப்ப



அந்நிய ஆட்சியின்போது, ''கிராமங்களிலும், ஓரளவு நகரங்களிலும் புதிய கோட்பாடுகள், புதிய கடவுளர், புதிய கலங்கள், புதிய கலைப்பொருள்கள் ஆகியவை பழையவற்றுடன் சேர்க்கப்பட்டன. இவற்றிலெல்லாம் கிறித்துவர் தம் பண்டைய கடவுளர் பற்றிய கொள்கைகளைப் பின்பற்றினர்; பின்பற்றியும் வருகின்றனர். சமயத்துறையில் ஐரோப்பிய சமயங்கள் ஆ∴ப்ரிக்க மயமாயின என்பது உறுதி. சில சமரச, கிறித்துவ ஊழிச் சமயங்களின் வழிபாடுகளில் இதைக் காணலாம்.''

மேலே; அனைத்துலகைப் படைத்த கடவுளைக் காட்டும் பாவுலே கு முகமூடியின் வளைவுகள் கண்களை, படைக்கும் ''மூச்சு ஆவி''யின் பிறப்பிடமான வாயுடன் இணைக்கின்றன. ''ஆ∴ப்ரிக்க மகளிரின் நிலை நலிவுற்றது. அந்நிய ஆட்சியினால் ஏற்பட்ட மற்றொரு வருந்தத்தக்க சமூக விளைவு....... அந்நிய ஆதிக்க உலகம் ஆடவர் உலகமாக இருந்தது. அதில் மகளிர் பயனுள்ளவாறு பங்குபெற ஊக்கமளிக்கப்படவில்லை.'' கீழே: காபோனிலுள்ள ∴பாங் முகமூடி



தையும் உணர்ந்தன. ஆஃப்ரிக்கப் பொருளாதாரங்களைப் பன்னாட்டுப் பொருளாதாரங்களுடன் குடியேற்ற ஆதிக்கம் ஒருங்கிணைத்தது உண்மை தான். ஆனால் இந்த ஒருங்கிணைப்பு ஆஃப்ரிக்காவுக்குப் பாதமாகவும், சுரண்டலுக்கு வழிவகுப்பதாகவுமே அமைந்திருந்தது.

குடியேற்ற ஆதிக்க. காலத்தில் பணப் பயிர்களைச் சாகுபடி செய்வதிலேயே கவனம் செலுத்தப்பட்டமையால், ஆஃப்ரிக்கர்களின் சொந்தப் பயனுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதுகூடப் புறக்கணிக்கப்பட்டது. இதனாலும், கட்டாய வேலை முறையாலும், குடியேற்ற ஆதிக்க காலத் தொடக்கத்தில் ஆஃப்ரிக்காவின் சில பகுதிகளில் ஊட்டக் குறைபாடும் கடும்பஞ்சமும், கொள்ளை நோய்களும், நிலவின. இவ்வாறாக, குடியேற்ற ஆட்சி முறையில் ஆஃப்ரிக்கர்கள், தாங்கள் நுகராத பொருள்களை உற்பத்தி செய்வதற்கும், தாங்கள் உற்பத்தி செய்யாத பொருள்களை நுகர்வதற்கும் கட்டாயப் படுத்தப்பட்டார்கள். குடியேற்ற ஆதிக்கப் பொருளாதாரத்தின் சுரண்டலுக்கு இது சான்று.

குடியேற்ற ஆதிக்கத்தின் கீழ் ஆஃப்ரிக்காவில் அயல் நாடுகளைச் சேர்ந்த வங்கியியல், கப்பல், வாணிக நிறுவனங்கள் தோன்றின. இவை ஒன்றோடொன்று இணைந்து, ஒரு சில ஏகபோக நிறுவனங்களாயின. இந்த நிறுவனங்கள் தாம் ஏற்றுமதி இறக்குமதி வாணிகத்தைக் கட்டுப்படுத்தின. இறக்குமதிப் பொருள்களின் விளைவுகளை மட்டுமின்மின்றி ஆஃப்ரிக்கர்கள் உற்பத்தி செய்த ஏற்றுமதிப் பொருள்களின் விலைகளையும் இந்நிறுவனங்களே நிர்ணயித்தன. இந்நடவடிக்கைகளால் கிடைத்த கொள்ளை இலாபங்கள் இந்நிறுவனங்களுக்கே சென்றன; ஆஃப்ரிக்கர்களுக்குக் கிடைக்கவில்லை. குடியேற்றத்தின் அயல்நாட்டு வாணிகம், குடியேற்ற ஆதிக்க நாடுகளின் வாயிலாக நடைபெற்றதால், ஆஃப்ரிக்க நாடுகளுக்கிடையிலான வாணிபம் அடியோடு நின்றுவிட்டது.

இறுதியாக, குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் ஏதேனும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்குமாயின், அது ஆஃப்ரிக்கர்கள் கொடுத்த மிகப் பெரிய விலையால் ஏற்பட்டதாகும். கட்டாய வேலை, அயல் நாட்டுத் தொழிலாளர், சில பயிர்களைக் கட்டாயமாகப் பயிரிடுதல், கட்டாய நிலப்பரப்பு, மக்களைக் கட்டாயமாகக் குடிபெயர்த்தல், அதனால் குடும்ப வாழ்வு சீர் குலைதல், சுரங்கங்களிலும் தோட்டங்களிலும் உயர்ந்த மரணவிகிதம், கடுமையான அடக்குமுறை, அதனால் எழுந்த எதிர்ப்பு இயக்கங்கள் ஆகியவைதாம் இந்தப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆஃப்ரிக்கர்கள் கொடுத்த விலை.

சமூகத்துறையில் குடியேற்ற ஆதிக்க முறையின் சாதனை என்ன? குடியேற்ற ஆதிக்கத்தின் முதல் 30 ஆண்டுகளில் ஆஃப்ரிக்க மக்கள் தொகை குறைந்து, பின்னர் மொத்தத்தில் 40% உயர்ந்தது. பொருளாதார அடிப்படையை ஏற்படுத்தி, பஞ்சப் பகுதிகளுக்கு உடனடியாக உணவுப்பொருள்களைக் கொண்டு செல்வதற்கு சாலை மற்றும் இருப்புப் பாதை வசதிகளைச் செய்தமையும் உறக்கநோய், மஞ்சள் காய்ச்சல், அக்குள் கழலை நோய் ஆகியவற்றை ஒழிப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் .மேற்கொண்டமையுமே இந்த உயர்வுக்குக் காரணம்.

குடியேற்ற ஆதிக்கத்தையொட்டி நடந்த நகர்மயமாக்குதலும் சமூகப் பாதிப்பை ஏற்படுத்தியது. ஆஃப்ரிக்க முடியரசுகளிலும், பேரரசுகளிலும், கும்பிசலே, பெனின், இலீ—இஃப், குமாசி, காவோ, ஜிம்பாப்வே போன்ற அரசியல் மையங்களும், கானோ, ஜென்னி, சோஃபாலா, மாலிண்டி போன்ற வாணிக மையங்களும், தம்புக்டு, கெய்ரோ, ஃபெஜ் போன்ற கல்வி மையங்களும் இருந்தன. எனினும், குடியேற்ற ஆதிக்கத்தின் விளைவாக, நகர்மயமாக்குதல் தீவிரமடைந்து, முற்றிலும் புதிய நகரங்கள் தோன்றின.

மேலும், ஏற்கெனவே இருந்து வந்த நகரங்களிலும், புதிதாகத் தோன்றிய நகரங்களிலும், குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் மக்கள்தொகை அபரிமிதமாகப் பெருகியது. உகாண்டா இரயில்வே அமைப்பதற்கான ஒரு சரக்குக் கிடங்காக 1896இல் நிறுவப்பெற்ற நைரோபியின் மக்கள்தொகை, தொடக்கத்தில் மிகச்சிறு அளவிலிருந்து 1927இல் 13,145-க்கும், 1940இல் 25,000-க்கும் உயர்ந்தது. லாகோசின் மக்கள்தொகை 1914இல் 74,000-லிருந்து 1950இல் 2,30,000-க்கு ஏறியது. டாக்காரின் மக்கள்தொகை 1916இல் 19,800-லிருந்து 1936இல் 92,000-க்கும் 1945இல் 1,32,000-க்கும் அதிகரித்தது.

குடியேற்றங்களில் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன; மருந்தகங்கள் அமைந்தன. குழாய்கள் வழியாகக் குடிநீர் வசதி செய்யப்பட்டது. சாக்கடை வசதிகள் ஏற்படுத்தப்பட்டன; அடிமை முறை ஒழிக்கப்பட்டது: வேலை வாய்ப்புகள் பெருகின. இவற்றால், மக்களின் வாழ்க்கைத் தரம்—குறிப்பாக நகர்ப்புறங்களில் — உயர்ந்தது.

குடியேற்ற ஆட்சிக் காலத்தில்தான் ஆஃப்ரிக்காவில் கிறித்தவமும், இஸ்லாமும் பரவின. மேனாட்டுக் கல்வியும் புகுத்தப்பட்டது. கிழக்கு மற்றும் மத்திய ஆஃப்ரிக்காவில் கிறித்தவம் வலுவாக வேரூன்றியது. மேற்கு மற்றும் கிழக்கு ஆஃப்ரிக்காவில் இஸ்லாமும் செல்வாக்குப் பெற்றது. கிறித்தவ சமயத்துடன் சேர்ந்து மேனாட்டுக் கல்வியும் பரவியது. குடியேற்ற ஆதிக்கத்தின் இறுதியில், எல்லா இடங்களிலும் தொடக்கப்பள்ளிகள் அமைந்திருந்தன. மேனாட்டுக் கல்வி கற்ற ஆஃப்ரிக்க அறிஞர்களின் எண்ணிக்கை பெருகியது. இவர்கள்தாம், இன்றைய ஆட்சியாளர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் திகழ்கின்றார்கள்.

ஒவ்வொரு குடியேற்றத்திற்கும் அல்லது குடியேற்றங்களின் ஒரு தொகுதிக்கு ஒரு பொது மொழியை உருவாக்கியது குடியேற்ற ஆதிக்கத்தின் மற்றொரு முக்கிய சாதனையாகும். எல்லாக் குடியேற்றங்களிலும், குடியேற்ற ஆதிக்க வல்லரசின் மொழி அல்லது அதன் கலப்பு மொழி, ஆட்சி மொழியாகவும் வாணிப மொழியாகவும் ஆக்கப்பட்டது. வட ஆஃப்ரிக்காவிலும், தான்சானியாவிலும், கெனியாவிலும், மடகாஸ்கரிலும் நீங்கலாக, மற்ற நாடுகளில் இந்த மொழிகளே இன்றும் ஆட்சி மொழிகளாக நீடித்து வருகின்றன. ஆஃப்ரிக்காவின் சில பகுதிகளில் புதிய சமூகக் கட்டமைப்பினைக் குடியேற்ற ஆதிக்கம் புகுத்தியது. இதில் தனி நபரின் தகுதிக்கும், திறமைக்கும் சாதனைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.



நிழற்படம் © அயல்நாட்டு, பொதுநலக்கூட்டு அலுவலகம், லண்டன்

நகர்ப்புறவாசிகள், கிராமவாசிகள் எனப் பாகுபடுத்திய புதியதொரு சமுதாயம் உருவாகியது.

தீயவிளைவுகளைக் கூறுவதில் நகர்ப்புற மையங்களின் மக்கள்தொகை வெகுவாகப் பெருகியதை முதலில் குறிப்பிட வேண்டும். நகரங்களின் மக்கள்தொகை இயற்கையாகப் பெருகவில்லை. மாறாக, பஞ்சம். நோய், வறுமை, வரி விதிப்பு காரணமாகவும், கல்வி, வேலைவாய்ப்பு தேடியுலையும் கிராமப்புற இளைஞர்கள்—ஆண்களும் பெண்களும்—நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்தமையே நகரங்களின் மக்கள்தொகை அபரிமிதமாக மேலும், பெருகியதற்குக் காரணமாகும். ஐரோப்பியர்கள் நகரங்களிலேயே வாழ்ந்தமையால், வாழ்க்கை வசதிகள் அனைத்தும் அங்கேயே செய்யப்பட்டன; கிராமப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டன. இன்றுங்கூட, ஆஃப்ரிக்காவில் நகர்ப்பகுதிக்கும் கிராமப்பகுதிக்குமிடையே இடைவெளி அதிகமாகவே இருக்கிறது. இந்த இடைவெளியைஏற்படுத்தி, விரிவாக்கியவர்கள் குடியேற்ற ஆதிக்கவாதிகளேயாவர்.

பாதுகாப்பையும், செல்வத்தையும் தேடி நகர்ப்புற மையங்களுக்குக் குடிபெயர்ந்தவர்கள் பாதுகாப்பையும் காணவில்லை; செல்வத்தையும் பெறவில்லை. எந்த நகரத்திலும் ஆஃப்ரிக்கர்கள் சரிசமானமாகஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்களில் பெரும்பாலோருக்கு வேலையோ அல்லது கண்ணியமான வேலையோ கிடைக்கவில்லை. சந்தை நகர்களின் புறநகர்ப்பகுதிகளில் அவர்கள் நெரிசலில் வாழ்ந்தார்கள். வேலையின்மையும், சிறுவர் குற்றமும், குடிபோதையும், விபச்சாரமும், குற்றம் புரிதலும், ஊழலும் அவர்களின் வாழ்க்கையாயிற்று. குடியேற்ற ஆதிக்கம், கிராமப்புற வாழ்க்கையை வறுமையாக்கியது மட்டுமின்றி, நகர வாழ்க்கையை முறைகெட்டதாகவும் ஆக்கியது.

ஐரோப்பாவிலிருந்தும், ஆசியாவிலிருந்தும் ஆஃப்ரிக்காவில் குடியேறியவர்களுக்குப் பெரும் சமூகச் சிக்கலை உருவாக்கிவிட்டுச் சென்றது குடியேற்ற ஆதிக்கமேயாகும். ஆஃப்ரிக்காவிலுள்ள பெரும்பான்மையான செழிப்பான நிலங்களை ஆக்கிரமித்துக் கொள்வதற்காக ஐரோப்பியர்கள் வந்தார்கள். சில்லறை மற்றும் மொத்த வாணிகர்களாகவுள்ள ஆசியர்களின் சிக்கல் 1935இல் தீராத சிக்கலாக உருவெடுத்து விட்டது. இன்றுங்கூட இச்சிக்கலுக்கு சரியான தீர்வு காணப்படவில்லை.

குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் ஒரு சில சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை போதிய அளவில் செய்யப்படவில்லை. இங்குக் குடியேறிய வெள்ளையர்களுக்காகவே அவை ஏற்படுத்தப்பட்டன. அதனால், அவை நகரங்களில் மட்டுமே அமைந்திருந்தன. நைஜீரியாவில் 1930களில் 4000 ஐரோப்பியர்களுக்காக, 12 மருத்துவ மனைகள் இருந்தன. ஆனால், ஆஃப்ரிக்கர்கள் 4 கோடிப் பேருக்கு 52 மருத்துவமனைகள் மட்டும் அமைந்திருந்தன.

குடியேற்ற ஆதிக்கக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கல்வி வசதிகளும் போதுமானவையாகவோ, ஆஃப்ரிக்கர்களுக்கு உகந்தவையாகவோ இல்லை. குடியேற்ற ஆட்சியின்போது, தொடக்க நிலை, உயர்நிலை, ஆசிரியர் பயிற்சி நிலை, தொழில்நுட்பநிலை, பல்கலைக்கழக நிலை என்று ஐந்து நிலைகளில் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், பெரும்பாலான தொடக்கப்பள்ளிகள் பிரிட்டிஷ் மேற்கு ஆஃப்ரிக்காவில் 1860இல் நிறுவப்பட்டிருந்தன; கோல்டு கோஸ்டிலும் நைஜீரியாவிலும் 1876 வரையிலும் ஒரு தொடக்கப்பள்ளிகூட தொடங்கப்படவில்லை. ஆஃப்ரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்தான் தொழில் நுட்பப் பள்ளிகளும், பல்கலைக்கழகக் கல்லூரிகளும் நிறுவப்பெற்றன.

இக்கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்பட்ட பாடத் திட்டங்கள் அனைத்தும் குடியேற்ற ஆதிக்கவாதிகளால் வகுக்கப்பட்டவை; குடியேற்ற ஆதிக்க நாடுகளின் மாதிரியில் அமைந்தவை. ஆஃப்ரிக்கக் கண்டத்து நிலைமைகளுக்கு ஏற்ப இவை அமைந்திருக்கவில்லை. ஆஃப்ரிக்கர்களின் சமய நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் வேரறுக்கும் வகையில் இப்பாடத், திட்டங்கள் அமைந்திருந்தன.

"(அந்நிய கல்வி முறையின் பயனாகத் தோன்றிய) கல்வி கற்ற உயர் வகுப்பார் பெரும்பாலும் தனித்தே நின்றனர். அவர்கள் ஐரோப்பியப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் போற்றி ஆஃப்ரிக்கப் பண்பாட்டை இகழ்ந்தனர். ஆயினும் அவர்கள் செல்வராகவும், அந்நிய ஆட்சியிலும், அதன் பிறகும் உயர் பதவிகள் பெற்றவராகவும் இருந்ததால், எண்ணிக்கையில் குறைந்தவராக இருப்பினும், மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் பெற்றிருந்தனர்.'' மேலே: உயர் தொப்பி, நீள் சட்டை, வெள்ளை விளிம்புத் தொப்பி, அரசாங்க இல்லப் புல்வெளியில் மரப்பந்தாட்டம் போன்றவை அந்நிய ஆட்சிக்காலப் 'புதிய உயர்வகுப்பாரின்' உயர் நிலை அடையாளங்களாக இருந்தன.

இதனால் தான் ஆஃப்ரிக்க சமுதாயங்களின் அடிப்படைகள் ஆட்டங்கண்டு. சமூக பாதுகாப்பின்மையும், அவநம்பிக்கையும், விரக்தியும் தோன்றின.

இத்தகைய தவறான கல்வியால் ஆஃப்ரிக்கச் சமுதாயங்களில் ஏற்பட்ட விளைவுகள் ஆழமானவை. நிரந்தரமானவை. முதலாவதாக எழுத்தறிவற்றவர்களின் எண்ணிக்கை பெருகியது. இச்சிக்கல் தீர்க்க முடியாத பெருஞ் சிக்கலாக உருவெடுத்தது. இரண்டாவதாக படித்தவர்கள், ஐரோப்பியப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் போற்றி, ஆஃப்ரிக்கப் பண்பாட்டை இழிவாகக் கருதினார்கள். இந்தப் படித்தவர்கள் பணக்காரர்களாக இருந்தாலும், குடியேற்ற ஆட்சியின் போதும் அதன் பின்னரும் இவர்கள் உயர்பதவிகளை வகித்தமையாலும், இவர்கள் அளவுக்கு மீறிய அதிகாரத்தையும் செல்வாக்கையும் செலுத்தி வந்தார்கள்.

கல்வி முறைகளினால் பொது மொழி உருவானபோதிலும் 'உள்நாட்டு மொழி ஒன்று தேசிய மொழியாக வளர்வது தடைசெய்யப்பட்டது. கோல்டு கோஸ்டிலும் நைஜீரியாவிலும், பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்கக் குடியேற்றங்களிலும் திவி, ஹவுசா, சுவாகிலி ஆகிய மொழிகள் எளிதாகத் தேசிய மொழிகளாக உரு



நிழற்படம் © டெனிஸ் ஃபோகுல்கொசாக், மெட் ஃபிரான்ஸ்

செனகாலின் சாரக்கோலே இனத்தவரின் பண்டைய வீட்டு முகப்பின் வேலைப்பாடு. மண்ணை வீடு கட்டும் பொருளாகப் பயன்படுத்திய பண்டைய கட்டடக்கலையில் வடிவமும் தனித் தன்மையும் இருந்தன. கற்கூளங்களாலும் நெளிந்த இரும்புத் தகடுகளாலும் கட்டப்படும் இன்றைய வீடுகளில் இவை காணப்படுவதில்லை.

வீாகியிருக்கக்கூடும். பிரிட்டிஷ் கிழக்கு ஆஃப்ரிக்கக் குடியேற்ற ஆட்சியாளர்கள், 1930களிலும் 1940களிலும், சுவாகிலியை ஒரு பொதுமொழியாக வளர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இம்முயற்சியை குடியேற்ற ஆட்சி அமைச்சகம் தடுத்துவிட்டது.

ஆஃப்ரிக்காவில் மகளிர்க்கு ஏற்பட்ட இழிநிலை குடியேற்ற ஆதிக்கத்தால் ஏற்பட்ட மற்றொரு தீமையாகும். குடியேற்ற ஆதிக்க உலகம், ஆடவர் உலகமாகவே இருந்தது. அதில், உருப்படியான பணி எதனையும் செய்ய மகளிர் அனுமதிக்கப்படவில்லை. மேலும், குடியேற்ற ஆதிக்கத்தின் போது, பொதுவாக ஆஃப்ரிக்கர்கள் இழிவாகக் கருதப்பட்டார்கள்; அவமதிக்கப்பட்டார்கள்; ஓரவஞ்சனைக்குள்ளாக்கப்பட்டார்கள். அடிமை வாணிகம் இனவெறி, குடியேற்ற ஆதிக்கம் ஆகிய மூன்றும் ஆஃப்ரிக்கர்களை இழிவுபடுத்திய சாபக்கேடுகளாகும். இதுபற்றி அலி மசூரி என்ற அறிஞர் குறிப்பிடுகையில், ''ஆஃப்ரிக்கர்கள் உண்மையில் முரட்டுத்தனமானவர்கள் அல்ல. ஆனால் இன்றைய வரலாற்றில் மிகவும் இழிவுப் படுத்தப்பட்டவர்கள் அவர்கள்தாம்'' என்று கூறியுள்ளார்.

''குடியேற்ற ஆதிக்கம் தனக்குச் சவக்குழி தோண்டுபவர்களைத் தானே உருவாக்கிக் கொண்டது'' என்று சில வரலாற்றறிஞர்கள் கூறுகின்றார்கள். ''பிரிட்டிஷ் பேரரசின் கல்லறைக் கல்லில் போலிப் பகட்டில் ஏற்பட்ட இழப்பு'' என்று பொறிக்கவேண்டும் அறிஞர் மாய் எழுதியுள்ளார்.

பண்பாட்டுத் துறையில் குடியேற்ற ஆதிக்கம் இழைத்துள்ள தீங்கு இன்னும் கொடுமையானது. குடியேற்ற ஆதிக்க காலம் முழுவதிலும் ஆஃப்ரிக்கக் கலை, இசை, நடனம், வரலாறு அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. ஆஃப்ரிக்க மக்கள் பண்பாடு இல்லாதவர்கள் என்பதை மெய்ப்பிக்கக் குடியேற்ற ஆதிக்கம் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. எனினும், பண்பாட்டுத் துறை மட்டும்தான், குடியேற்ற ஆதிக்கத்தின் பாதிப்பு ஆழமாக அல்லது நிரந்தரமாக ஏற்படவில்லை, இனவெறி ஓரவஞ்சனையும், ஆஃப்ரிக்கப் பண்பாட்டை இழிவுபடுத்துவதும் கடலோரப் பகுதிகளுடன் நின்றுவிட்டன; கிராமப்பகுதிகளுக்கு ஊடுருவவில்லை. அங்கு ஆஃப்ரிக்க வாழ்க்கைமுறை தங்குதடையின்றி முன்பு போலவே நடைபெற்றுவந்தது. ஆஃப்ரிக்கக் கலை, இசை, நடனம் மரபுச் சமய முறைகள் அனைத்தும், அயல்நாட்டுச் சிறப்பியல்புகளையும் தன்மயமாக்கிக்கொண்டு சுதந்திரமாக வளர்ந்தன.

கிராமப்பகுதிகளிலும், ஓரளவுக்கு நகர்ப்புறங்களிலும், பழையனவற்றோடு புதிய நம்பிக்கைளும் புதிய கடவுளர்களும், புதிய சாதனங்களும், புதிய கலைப்பொருள்களும், புதிய பொருள்களும்சேர்த்துக்கொள்ளப்பட்டன. இங்கு கிறித்தவ சமயத்தவர்கள், ஆஃப்ரிக்கர்களின் சில சமயப் பழக்கங்களை தங்களுடைய சமயப் பழக்கத்துடன் சேர்த்துக்கொண்டனரேயன்றி. கிறித்தவ சமயப் பழக்கம் எதுவும் ஆஃப்ரிக்கச் சமய முறையில் கலந்துவிடவில்லை. இன்று ஆஃப்ரிக்கப் பண்பாடு மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆஃப்ரிக்க இசை, கலை, நடனம் ஆகியவை இன்று எல்லாவகைக் கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஐரோப்பாவிலுங்கூட இவற்றின் செல்வாக்குப் பரவி வருகிறது.

ஆஃப்ரிக்காவின் நீண்ட வரலாற்றில், பல்வகைப்பட்ட அனுபவங்களைப் பெற்ற அதன் மக்களுக்கு, குடியேற்ற ஆதிக்கக் காலம் ஓர் இடையீட்டு நிகழ்ச்சியேயாகும். ஆஃப்ரிக்கத் தலைவர்கள் இன்று செய்யவேண்டியது ஒன்றுதான். அவர்கள், குடியேற்ற ஆதிக்கமுறையை அடியோடு ஒதுக்கிவிடாமல், அதன் விளைவுகளை நன்கு புரிந்துகொண்டு, அதன் குற்றங்குறைகளை அகற்றுவதற்கு அவர்கள் முயலவேண்டும்.

தமிழில்: இரா. நடராசன்


யுனெஸ்கோ கூரியர், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது அக்டோபா-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் [ஆண்டுக்கு 11 இதழ்கள் பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ' கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும் பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஓல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலம்: ஹோவார்ட் ப்ராபின் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்ணன்டெஸ்-ஸாண்டேஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: விக்டர் கோ லியச்கோவ்
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி (பெர்ன்)
அராபிக்: அப்தல் மேனீம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ்: கஸுவோ அகவோ (டோக்கியோ)
இத்தலியன்: மரியோ கெய்டேட்டி (ரோம்)
ஹிந்தி: கிருஷ்ண கோபால் (டெல்லி)
ஹீப்ரு அலெக்ஸாண்டர் ப்ரோய்டே (டெல்-அவிவ்
பெர்சியன்: சமத் நௌரினஜத் (டெஹ்ரான்
டச்சு: பல் மோரென் (அண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கியஸ்: மெஃப்ர இல்கசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனு)
மலேசியா: பகதூர் ஷா (கேலலம்பூர்)
கொரியன்: லீ குவாங் யங் (சியோல்)
சுவாஹிலி: டெமினோ ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)
ஃபிரெய்லி: ஃப்ரெடிரிக் போட்டர் (பாரிஸ்)
கிரேரடோ-செர்ப், மாசிடோனியன், செர் போகிராட்
ஸ்லோவேன்: புனிசாபாவ்லோவிக் (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவேஃபென் (பீகிங்)
பல்கேரியன்: பவல் பிஷரெவ் சோஃபிய
கிரீக்: அல்கிஸ் ஆஞ்செலோ
அமைப்பு வடிவம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியரிக்கே எழுதப்படவேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

(இருபத்தியாறாம் பக்கத் தொடர்ச்சி)

கும் மொராக்கோ அரசு 1910 மார்ச்சில் இசைந்தது.

இன்னும் தெற்கில், திரார்ஜா, பிராக்னா ஆகிய குறுநிலங்களில் ஃபிரான்ஸ் தனது காப்பாட்சியை ஏற்படுத்திக் கொண்டது. பின்னர், 1905-இல் சேவியர் கோப்போலானி தமது "அமைதியான ஊடுருவல்" கொள்கையைப் புகுத்தினார்: குறுநிலத்தலைவர்களுடனும், குலமரபுத் தலைவர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டு, அவர்களை ஃபிரஞ்சுச் செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதே இக்கொள்கையாகும். சுல்தானின் பிரதிநிதியாகச் சுமார் 30 ஆண்டுகளாக இருந்துவந்த சேக் மால் அய்னாய்ன், இக்கொள்கையை எதிர்த்தார். சுல்தான் முலாய் அப்தல் அசீஸ் தகவலறிந்து எதிர்ப்புப்படைகளை ஊக்குவிப்பதற்காக தமது மாமன் முலாய் இத்ரிசை அனுப்பினார். இதற்கிடையில், டிட்ஜிக்ஜாவிலிருந்து கோப்போலானியின் கோம் 1905 ஏப்ரலில் தாக்கப்பட்டு, அமைதியான ஊடுருவலின் தந்தைக் கொல்லப்பட்டார்.

மொராக்கோவில் நிலவிய உள்நாட்டு குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு முலாய் இத்ரிசை திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு ஃபிரான்ஸ் கோரியது. அதன்படி 1907 ஜனவரியில் அவர் அழைத்துக் கொள்ளப்பட்டார். எனினும் எதிர்ப்பு நீடித்தது. தளபதி காராடு தலைமையிலான ஒரு வலுவான படை வடக்கு நோக்கிச் சென்றது. 1908 ஜூன் 16இல் இப்படைக்கு அம் முயனாமில் பெருந் தோல்வி ஏற்பட்டது. எனினும், அடுத்த ஆண்டு ஜனவரி 9இல் இப்படை அட்டாருக்குள் நுழைந்தது. சேக் மால் அய்னாய்ன் தமது ஆதரவாளர்களுடன் சகியட் அல்ஹம்ராவுக்குப் பின் வாங்கினார். அங்கிருந்து கொண்டு அவரது படைகள், 1933 வரையில் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கும் ஸ்பானியர்களுக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தன.

இதே காலத்தில், பிரெஞ்சுக்காரர்களுடன் சேர்ந்து, ஸ்பானியர்கள் முன்னேறி வந்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் ஷிங்கட்டை ஆக்கிரமித்தபோது, ரியோ டி ஓரோ விரிகுடாவிலிருந்த தங்கள் குடியிருப்பிலிருந்து ஸ்பானியர்கள் வெளிப்படலானார்கள். அவர்கள், 1906-இல் சகாராப் படை ஒன்றை அமைத்து உள்நாட்டுக்குள் 30 கிலோ மீட்டர் வரை ஊடுருவிச் சென்றார்கள். வடக்கில் ஃபிரஞ்சுக்காரர்கள் வாட்ஜடாவுக்குள் நுழையும் வரைக் காத்திருந்த ஸ்பானியர்கள், 45,000 பேர் கொண்ட ஒரு படையுடன், 1909 செப்டம்பரில் ரிஃப் மீது படையெடுத்தார்கள். புனிதப்போர் நடத்தும்படி சேக் அமெரியான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கிளர்ந்தெழுந்த மொராக்கோ மக்கள், கடுமையாக எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள். அவர்களுடைய எதிர்ப்பு 1926 வரைத் தாக்குப்பிடித்தது.

தமிழில்: இரா. நடராசன்

---

(இருபத்திஒன்பதாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி வீரர்களுடனும், 3,000 சுமை தூக்குபவர்களுடனும் தாக்குதல் நடத்தினார். சமோரி, 2,500 சிறந்த வீரர்கள் கொண்ட படைக்குத் தானே தலைமையேற்றுப் போரிட்டான். வரலாற்று அறிஞர் யுவெஸ் பர்சன் கூறுவதுபோல, இவ்வீரர்கள் பேய்களைப் போல வேகத்துடன் போரிட்டு, வழியில் உள்ள ஒவ்வொரு தற்காப்புமையத்திலும் விடாது நின்ற போதிலும், தோல்வியைத் தழுவினர். ஹம்பர்ட், பிசான்டகு, சனான்கரோ, கெர்வானே ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். ஏற்பட்ட சேதத்தோடு ஒப்பிடுகையில், இம்முடிவு மகத்தானதல்ல என்று ஹம்பர்டே ஒப்புக்கொண்டான். ஃபிரெஞ்சுப் படைகள் நெருங்கும்போது, மக்கள் பின்வாங்கிவிடவேண்டும் என்று சமோரி உத்தரவிட்டிருந்தான்.

எனினும் சமோரி வீண் கனவுகளில் ஈடுபடவில்லை. ஹம்பர்டின் படைகளுடன் செய்த கடும்போரில் அவனுடைய தலைசிறந்த படைவீரர்களில் ஆயிரம் பேருக்கு மேல் மாண்டனர். ஃபிரெஞ்சுப் படையினரில் மாண்டவர் நூறுபேரே. ஃபிரெஞ்சுப் படையினரை எதிர்த்துப் போரிடல் வீண் செயல் என்று அவன் உணர்ந்தான். எனவே, சரணடைவது அல்லது பின் வாங்குதல் என்ற இரண்டு வழிகளே அவனுக்கு இருந்தன. எனவே சொந்த நாட்டைவிட்டு வெளியேறி கிழக்குப் புறமாக ஐரோப்பியர் வரமுடியாத இடத்தில் புதிய ஆட்சியை நிறுவுவதற்காகச் சென்று விட்டான்.

அவன் கிழக்குப் பக்கமாக பண்டாமா கோமோ நதிகள் பக்கமாகச் சென்றான். 1894இல் நவீன போர்க்கருவிகள் வரும் மான்ரோவியா வழியை இழந்தாலும், அவன் தொடர்ந்து போரிட்டான். 1895ஆம் ஆண்டின் துவக்கத்தில் பாயேல் நாட்டிலிருந்து மான்டீல் என்பவரின் தலைமையில் வந்த ஃபிரெஞ்சுப் படையுடன் போரிட்டுத் துரத்தினான். 1895 ஜூலைக்கும் 1896 ஜனவரிக்கும் இடையே அப்ரான் (கியாமன்) நாட்டையும் கோஞ்சாவின் மேற்குப்பகுதியையும் வென்றான். ஐவரிகோஸ்ட், அஸான்டே இவற்றின் கரையோரப் பகுதிகளில் புதிய அரசை நிறுவினான்.

1897 மார்ச் மாதம் அவன் மகன் சரன்கென்யிமோரி, வா என்னுமிடத்தில் ஹென்டர்ஸன் தலைமையில் வந்த ஆங்கிலேயப் படையை வெற்றிகொண்டான். சமோரி, 1897இல் காங்கைத் தாக்கி அழித்தான். போபோ'வில் காட்ரிலியர் தலைமையில் வந்த ஃபிரெஞ்சுப் படையுடன் போரிட்டான்.

ஃபிரான்ஸுக்கும் ஃபிரிட்டனுக்கும் இடையே சிக்கிக்கொண்டதால், ஃபிரான்ஸ் விரும்பிய பௌனா பகுதியை ஃபிரிட்டனுக்குக் கொடுப்பதன் மூலம், இருவரிடையே வேற்றுமை ஏற்படுத்தும் முயற்சியும் தோற்றதால், இறுதியில், சமோரி லைபீரியாவில் இருந்த டோமா இனத்தவரிடம் சென்றான். வழியில் 1898ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் தேதி குலீமூ என்னுமிடத்தில் குரோட் என்பவரால் எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டு, சிறைப்பட்டான். பின்னர் கபனுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கே 1900இல் இறந்தான். ஃபிரெஞ்சு—சூடான் வெற்றிகளில் ஒரு எதிரியை எதிர்த்துவந்த நீண்ட காலப் போர்த் தொடர் அவன் சிறைப்பட்டவுடன் முடிவடைந்தது என்று சமீபத்திய வரலாற்று அறிஞர் கூறுகிறார்.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

---

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)

பித்தளைப் பொருள்கள் உலையில் அடித்துச் செய்யப்பட்டவை அல்லது மெழுகு வார்ப்பு முறையில் செய்யப்பட்டவை என்று ஏற்கெனவே பார்த்தோம். மெழுகு வார்ப்புக் கலை 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னே ஐஃபில் நிலவியது. இயற்கை வடிவ உருவங்களை, குறிப்பாக மனிதத் தலைகளை அமைத்த மட்பாண்டக் கலையும், இரும்புக் காலத்தில் (கி.மு. 6ஆம் நூற்றாண்டு) தொடங்கிய நோக் பண்பாடும் இயற்கையாகவே இணைந்தவை என்று அண்மை ஆய்வுகள் காட்டுகின்றன. இது நோக் பண்பாடு விரிவாகப் பரவியிருந்ததை வலியுறுத்துகிறது. மேலும், புல்வெளி நாடுகளுக்கும் தென் காடுகள் சார்ந்த நாடுகளுக்குமிடையே பரிமாற்றமும் தொடர்புகளும் இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆகலே புகழ்மிகு ஐஃப், பெனின் வெண்கலச் சிலைகளும் இயற்கை வடிவ பித்தளை உருவங்களும் பரந்ததொரு பண்பாட்டு மண்டலத்தில் இருப்புக் காலந் தொட்டே தொடங்கிய கலைவளர்ச்சியின் உச்சநிலை எனலாம்.

1939இல் நைஜீரியாவின் கிழக்கில் இக்போ—உக்வு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இது உறுதியாகின்றது. இப்பகுதியை 1959இல் பேராசிரியர் தர்ஸ்ட்ஷா ஆராய்ந்தார். ஏறக்குறைய 800 வெண்கலப் பொருள்கள் கிடைத்துள்ளன. இவை ஐஃப்—பெனின் வெண்கலச் சிலைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளன. இக்போ—உக்வு ஒரு நகரத் தொகுதி அதன் நடுவில் அரண்மனைகளும் கோயில்களும் இருந்தன. பல கட்டிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தட்டுகளும், வழிபாட்டுப் பொருள்களும், கருவூலங்களுமுள்ள பெரிய அறையும், பெரிய குருவின் அணிமிகு கல்லறையும், மட்பாண்டம், எலும்புகள், பிற பொருள்கள் வைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய குழியும் கண்டுபிடிக்கப்பட்டன.

இக்போ—உக்வுவில் கண்டெடுக்கப்பெற்ற வெண்கலப் பொருள்களுக்கும் ஐஃப் கலைப் பொருள்களுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. ஆயினும் ஒரே இயல்புகள் பல காணப்படுவதால், இரு மையங்களும் ஒரே பண்பாட்டின் பகுதிகளாக இருந்தன எனலாம். ஐஃபில் இருப்பதுபோலவே வழிபாட்டுச் சார்புள்ள முடியாட்சியைக் காண்கிறோம்.

இக்போ—உக்வு மிகப் பரந்த அரசின் சமயத் தலைநகராக இருந்தது என்றும், எஸி—என்ஸி எனும் குரு—அரசரின் பாதுகாப்பில் கருவூலங்கள் இருந்தன என்றும் நம்பப்படுகின்றது. இக்போ—உக்பு பண்பாடுபற்றிச் செய்திகள் கிடைத்தில; வாய்மொழி மரபுபற்றிய ஆய்வு நடைபெற்று வருகின்றது. வெண்கலத் தொழில் பரப்பு பரவலாக இருந்ததாக அகழ்வாராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆயினும் அரசு தோன்றியதைப் பற்றி இதுவரை பரப்பப்பட்ட செய்திகள் தவறென இக்போ—உக்வு காட்டுகிறது. இபோ மக்களிடையே இவ்வுயர் பண்பாடு 9ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியுற்றதென கதிரியக்க கரி ஆய்வு முறை காட்டுகிறது. அவர்கள் "அரசில்லாத" சமூகத்தில் வாழ்ந்தனர். இக்போ-உக்வு பண்பாடு ஐஃப், பெனின் பண்பாடுகளுக்கும், காட்டுப் பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சிக்கலான பண்பாடுகளுக்கும் குறைந்தது 200 ஆண்டுகளுக்காவது முந்தியது.

தமிழில்: வள்ளுவன் கிளாரன்ஸ்

# வாசகர் எண்ணம்

ஐயா,

'யுனெஸ்கோ கூரியர்' மே மாத சிறப்பிதழான 'தமிழரின் வாழும் பண்பாடு' இதழ் கண்டு பெரு மகிழ்வடைந்தேன். தமிழர் கலை, இலக்கிய நாகரிகச் சிறப்புகளை பல்வேறு கோணங்களில் அரிய நிழற்படங்களோடு விளக்கியிருக்கும் பாங்கு போற்றத் தக்கதாயுள்ளது.

பல நூறு உலகத் தமிழ் மாநாடுகளாலும் சாதிக்க முடியாத சாதனையை தாங்கள் எவ்வளவு அனாயாசமாகத் திட்டமிட்டு சாதித்து விட்டீர்கள்! உலகத் தமிழ் மாநாடுகளில் தமிழ் மொழி, கலை, இலக்கிய பண்பாட்டுச் சிறப்புகளை முன்பே அறிந்துணர்ந்த ஒரு சிலர் மட்டுமே வந்து கலந்து கொண்டு செல்கின்றனர்.

ஆனால், உலகின் இருபத்தியேழு முக்கிய மொழிகளில் இச்சிறப்பிதழ் வெளிவந்ததன் மூலம் நம்மைஅறிந்த, இதுவரை நம்மை அறவே தெரியாதிருந்த உலகின் மூலை முடுக்கெல்லாம் ஏன் ஒவ்வொருவரின் வீட்டுக் கதவுகளையும் தட்டும்படி செய்துவிட்ட 'கூரியரை' உண்மைத் தமிழ்த் தூதுவனாக ஆக்கிய உங்களையும் யுனெஸ்கோ 'கூரியர்' தலைமை ஆசிரியர் குழுவையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

''நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை'', என்ற பாரதி வாக்கை உணர்ந்து தமிழர் தம் உயர் சிறப்புக்களை உலகுக்கு முறையாக எடுத்துக் கூறியதன் மூலம்' ''திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கோரிக்கையை முழுமையாக, நிறைவேற்றிய பெருமை உங்களையும் 'கூரியரை' யுமே சாரும்.

தமிழர் பண்பாட்டுக் கூறுகளுக்கிடையே வேற்றுப் பண்பாட்டின் 'நெடி' அடிப்பதைத் தவிர்த்திருக்கலாமே. 'தமிழில் புதிய படைப்புகள்' குறித்து திரு இராமகிருஷ்ணன் எழுதிய கட்டுரை குறைப் பிரசவமாக உள்ளது. தமிழ்ப் புத்திலக்கியப் படைப்புத் துறையில் வரலாறு படைத்துவரும் முன்னோடி எழுத்தாளர்கள் பலரை இரட்டடிப்புச் செய்திருப்பது முறையற்றதாகும்.

'பசியால் வளரும் உலகிற்கு உணவு' பற்றிய ஜூன் இதழ் 'வறுமையையும் பட்டினியையும் ஒழிக்க உலகம் மேற்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளை அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. உணவு உற்பத்தியில் பின்னடைவுக்கான காரணங்களையும் ஊட்டக் குறைவால் இளம் தலைமுறை அடைந்து வரும் அல்லல்களையும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் விளக்கப்பட்டுள்ளன.

'பண்டைத் தமிழர் பொறியியற் புலமை' என்ற தலைப்பில் 'கல்லணையின் சிறப்புக்களையும் கிழக்கு ஆஃப்ரிக்க நாடுகளில் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தரையில் அணைகட்டும் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கினர் என்பதை ஃபிளமிங் போன்ற ஆய்வாளர்களின் மேற்கோளோடு அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரை அருமையாக உள்ளது. நமது முன்னோர்களின் பொறியியற் புலமைகளை உலகுக்கு உணர்த்த இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

'கிரேக்க இசையும் பழந்தமிழிசையும்' என்ற சேலம் எஸ். ஜெயலட்சுமி அம்மையாரின் கட்டுரை கிரேக்கம் வரை நம் இசைச் சிறப்புப் பரவியிருந்ததைக் கூற வருகிறது. கட்டுரை இன்னும் விரிவாக இருந்திருக்கலாமே எனத் தோன்றுகிறது.

உலகளாவிய முறையில் அறிவுச் செல்வங்களை வரையாது வாரி வழங்கி வந்த 'கூரியர்' அண்மைக் காலமாக தமிழரின் பல்வேறு சிறப்புகளை ஆதாரபூர்வமாக, அறிவியல் அடிப்படையில் விளக்க முற்பட்டிருப்பது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் உள்ளது.

என். சிவராமன்
சென்னை—10

## வெளிநாட்டில் கல்வி

**'கூரியர்' வாசகர்களுக்கு ஓர் இனிக்கும் செய்தி**

உலக நாடுகள் பலவும் வெளிநாட்டு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி, கல்வியளித்து வருகின்றன. ஆனால், நம்மவர்களுக்கு எந்தெந்த நாட்டுப் பல்கலைக் கழகங்களில் என்னென்ன கல்வி வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது, உதவித்தொகையைப் பெற என்னென்ன தகுதிகள் வேண்டும், இது தொடர்பாக யாரோடு தொடர்பு கொள்ளவேண்டும் என்ற விவரங்கள் சரிவரத்தெரியாததால் வெளிநாட்டில் கல்வி பெற இயலாமல் போய் விடுகிறது. இக்குறையை அடுத்த ஆகஸ்ட் இதழ் முதல் நீக்க எண்ணியுள்ளோம். ஒவ்வொரு இதழிலும் மேற்கண்ட விரிவான விவரங்களை நாடு வாரியாக வெளியிட எண்ணியுள்ளோம். எனவே 'கூரியர்' வாசகர்கள் தொடர்ந்து இதழைப் பெற்றுப் பயன்பெறுவார்களாக. மேற்கொண்டு தகவல் வேண்டுவோர் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, உரிய தபால் தலைகளுடன் எழுதவும்.

நிர்வாக ஆசிரியர்

# எடை நுட்பமும் இடை நுட்பமும்

இன்று ஒரு கிலோ பஞ்சும், ஒரு கிலோ இரும்பும் ஒப்ப வைத்துப் பார்த்தால் எது கனமாக இருக்கும் எனக் கேட்டால் இரும்பே கனமாக இருக்கும் என்று விடை தருபவர்கள் பலராக உள்ளனர்! இவ்வாறே உயரத்திலிருந்து விழும் இருபொருள்களில் எடை மிகுந்தது வேகமாகவும் எடை குறைந்தது தாமதமாகவும் வந்து பூமியில் வீழும் என்று பலர் ஒரு காலத்தில் நம்பிக் கொண்டிருந்தனர். இவர்கள் எல்லாப் பொருள்களையும் பூமி ஒரே தன்மையில் இழுக்கின்றது என்ற உண்மையை ஏனோ உணர்வதில்லை! கலீலியோ பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தில் ஏறி ஒரு பவுண்டு, நூறு பவுண்டு எடையுள்ள இரு குண்டுகளை ஒரே சமயத்தில் விடுவித்து வீழச்செய்து அவை இரண்டும் ஒரே காலத்தில் பூமியை வந்து தொடுவதை நிறுவிக் காட்டினார். நம் வள்ளுவரோ சாய்ந்த கோபுரமும் இரும்புக் குண்டுகளும் இல்லாமல், எப்பொருளும் பூமி நோக்கி விழ்ந்துகொண்டிருப்பதால் பொருள் அனைத்துக்கும் எடை உண்டு என்பதை இன்றைய அறிவியலாரும் பாராட்டும் வகையில் இரு சோதனை வழி நிறுவிக்காட்டுகின்றார். நுட்பமான ஒரு பொருளின் எடையைக் காண இருவேறு முறைகளை நாம் கையாளலாம். சமன் செய்து சீர் தூக்கும் கோல் நுட்பம் குறைந்ததாக இருந்துவிட்டால் ஒரு தனிப் பொருளின் எடையைக் காண முதலில் அதனையொத்த பல பொருள்களின் கூட்டு எடையைக் கண்டு பின்னர் பொருள்களின் எண்ணிக்கையினால் அதனை வகுத்துத் தனிப் பொருளின் எடையைக் காணவேண்டும். இன்றும் சோதனைக் கூடங்களில் ஓர் ஈயக் குண்டின் எடையைக் காண நூறு ஈயக் குண்டுகளின் கூட்டு எடையைக் கண்டு அதனை நூறால் வகுத்து ஒரு குண்டின் சராசரி எடையைக் காண்கிறோம். வள்ளுவரும் ஒரு மயிற் பீலியின் எடையை உணர்த்தி வலியுறுத்த இம்முறையைக் கையாளுகிறார். கருங்கற்களை ஏற்றிச் செல்லும் ஒரு வண்டியில் அளவுக்கு அதிகமான மயில் பீலிகளை ஏற்றி அவற்றின் கூட்டு எடையைக் கொண்டு வண்டியின் அச்சையே முறித்துக் காட்டுகிறார்.

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''

என்னும் குறள் மயில் பீலியின் எடை ஆற்றலை விளக்குகின்றது.

நுட்பமான சீர்கோல் இருந்துவிட்டால் நுட்பமான ஒரு பொருளின் எடையை நேரடியாக உணரலாம். பல பொருள்கள் வேண்டுவதில்லை. அனிச்சப்பூ மிகவும் மென்மையானது. அது மோப்பக் குழைந்துவிடும் என்பதை நாம் அறிவோம். அதுவே எடை காணவேண்டிய பொருள்! அனிச்சத்தினும் 'மெல்லியள்' ஒரு பெண். அவளுடைய மின்னிடை நுட்பத்தைச் சொல்ல வேண்டுவதில்லை! அதுவே சமன் செய்து சீர் தூக்கும் கோல்! பாவம், அந்தப் பெண் அனிச்சப்பூ ஒன்றைக் காம்பு கலையாமல் தலையில் சூடிவிட்டாள். அதன் விளைவு, அந்தோ அவள் இடை முறிந்தது! பறைகள் நல்லனவாக இனி அவளுக்கு ஒலிக்கப் போவதில்லை!! ஆம்,

அனிச்சப்பூக் கால் கலையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.''

இனியும் அனிச்சப்பூவின் காம்பிற்கு எடை இல்லை என்று யாரே சொல்வார்? கலீலியோவின் இரும்புக் குண்டும், வள்ளுவரின் அனிச்சப் பூக் காம்பும் பைசா நகரத்துக் கோபுரத்திலிருந்து விடுவிக்கப்பட்டால் அவை இரண்டும் ஒரே வேகத்தில், ஒரே காலத்தில் வந்து பூமியைத் தொடும்.

—கொண்டல் சு. மகாதேவன்

ஆ:ப்ரிக்க பொது வரலாற்றை எழுதும் பன்னாட்டு அறிவியல் குழு

# "ஜெனரல் ஹிஸ்டரி ஆ:ப் ஆ:ப்ரிக்கா"



8 தொகுதிகள் கொண்ட "ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்க" எனும் பெரிய நூலைப் பல நாடுகளைச் சேர்ந்த 240 புகழ்மிகு அறிஞர்கள் எழுதிவருகின்றனர். ஆஃப்ரிக்க பொது வரலாற்றை எழுதும் பன்னாட்டு அறிவியல் குழு இவ்வறிவார்ந்த பொறுப்பை ஏற்றுள்ளது. 39 உறுப்பினருள்ள இக்குழுவில் $\frac{2}{3}$ பகுதியினர் ஆஃப்ரிக்கர். ஆஃப்ரிக்கா முழுவதையும் பற்றிய பரவலான இவ்வரலாறு அக்கண்டத்தின் பல் வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள மாறி வரும் உறவுகளையும், பிற கண்டங்களுடன் கொண்டுள்ள தொடர்புகளையும் காட்டுகிறது, இவ்வாறாக ஆஃப்ரிக்கா மனிதஇன வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டை விளக்குகிறது.

இங்கிலாந்திலுள்ள ஹைன்மன் கல்வி நூல் நிறுவனம், அமெரிக்காவில் பெர்க்லியிலுள்ள கலிஃபோர்னியப் பல் கலைக்கழக அச்சகம் ஆகியவற்றின் துணையுடன் வெளிவருகின்றது. இவை முறையே இங்கிலாந்திலும், காமன் வெல்த் நாடுகளிலும், வட, மத்திய, தென் அமெரிக்காவிலும் விற்பனை உரிமை பெற்றுள்ளன.

## இக்கோடையில் வெளிவர இருப்பது :

*தொகுதி iv 'ஆ:ப்ரிக்கா :பரம் தி ட்வெல் :ப்த் டு தி ஸிக்ஸ்டீன்த் செஞ்சுரி'*

பதிப்பாசிரியர்: டி.டு. நியான்

இத்தொகுதி ஆஃப்ரிக்க வரலாற்றின் முக்கிய பகுதியை விளக்குகிறது. இஸ்லாம் பரவுதல் வாணிக பண்பாட்டுத் தொடர்புகள் பெருகுதல், அரசுகளும் பேரரசுகளும்விரிவடைதல் போன்ற முக்கிய செய்திகள் விளக்கப்படுகின்றன. 736 பக்கம், 106 கறுப்பு வெள்ளைப் படங்கள், 50 உருவங்களும் நிலப்படங்களும் உறையுடன் 16.50 பவு.

## ஏற்கெனவே வெளியானவை

*தொகுதி I மெத்தடாலஜி அண்டு ஆ:ப்ரிக்கன் 1981*

848 பக் உறையுடன் 13.50 பவு. (ஃபிரெஞ்சு, அராபிய, ஸ்பானிய, போர்ச்சுகீசிய மொழிகளிலும் வெளிவந்துள்ளது

தொகுதி II *"ஏன்ஷியன்ட் சிவிலிசேஷன் ஆ:ப் ஆ:ப்ரிக்கா"* 1981, 832 பக். உறையுடன் 13.50 பவு (ஃபிரெஞ்சு, ஸ்பானிய, போர்ச்சுக்கீசிய மொழிகளில் ஏற்கெனவே வெளிவந்துள்ளது.

## வரவிருப்பவை:

III. *"ஆ:ப்ரிக்கா :ப்ரம் தி செவந்த் டு தி லெவெந்த் செஞ்சுரி"*

## "ஜெனரல் ஹிஸ்டரி ஆ:ப் ஆ:ப்ரிக்கா: ஸ்டடீஸ் அண்டு டாக்குமென்ட்ஸ்" வரிசை

"ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா' வைத் தயாரிக்கும் வல்லுநர் கூட்டங்கள் சார்ந்த ஆவணங்கள் எவ்வளவு பயனுள்ளவையாக இருக்கின்றனவென்றால் யுனெஸ்கோ அவற்றை "தி ஜெனரல் ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா: ஸ்டடீஸ் அண்டு டாக்குமென்ட்ஸ்" எனும் வரிசையில் தொடர்ச்சியாக வெளியிடத் தீர்மானித்துள்ளது.

## வரவிருப்பவை :

6. "ஆஃப்ரிக்கன் எக்னானிம்ஸ் அண்டு டோப்போனிம்ஸ்"
7. "ஹிஸ்டாரிக்கல் அண்டு சோஷியோ—கல்ச்சுரல் கான்டாக்ட்ஸ் . பிட்வீன் ஆஃப்ரிக்கா அண்டு ஆரப் வோர்ல்டு"
8. "மெத்தடாலஜி ஆஃப் தி கன்டெம்பரரி ஹிஸ்டரி ஆஃப் ஆஃப்ரிக்கா"
9. "ஆஃப்ரிக்கா அண்டு தி செகண்ட் வோர்ல்டுவார்".
10. "தி எஜுகேஷனல் ப்ராசஸ் அண்டு ஹிஸ்டரியோகிராஃபி இன் ஆஃப்ரிக்கா"
11. "லிப்யா ஆன்டிக்குவா".

## பிற யுனெஸ்கோ வெளியீடு

"ரூரல் ஜர்னலிசம் இன் ஆஃப்ரிக்கா" 1981, 35 பக். 10 ஃபி.



REGD. NO. M. 8276

## ஆ∴ப்ரிக்காவும் புதிய உலகமும்

ஐரோப்பாவைவிட புதிய உலகிலேதான் ஆ∴ப்ரிக்காவின் பண்பாட்டு விளைவுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அடிமை வாணிகத்தின் பயனாக அமெரிக்காவில் ஆ∴ப்ரிக்கர் பரவியதால், அவர்கள் வேரூன்றிய சமூகங்களில் பெரும் விளைவுகள் ஏற்பட்டன. இன்றைய பிரேசிலின் தேசியப் பண்பாட்டைக் கறுப்பர் மிகுதியாகப் பாதித்தனர். பெரும்பாலும் கரீபிய சமூகங்களில் கறுப்பர் பண்பாடு மேலோங்கி நின்றது. ஆனால் அவ்வாறு பரவியவரின் குழந்தைகளும் தாயகம் நோக்கியே இருந்ததால், இன்றைய ஆ∴ப்ரிக்காவின் வரலாற்றி[illegible] பெரும் பங்குபெற்றனர். பலர் தாய்நா[illegible] திரும்பினர்; பிறர் தேசிய உணர்ச்சி[illegible]யும், வளர்த்தனர். மேலே: பிரேசிலி[illegible] 'மக்கும்பர்' சடங்கு. (பிரேசிலி[illegible] பாஹியா மாநிலத்தில் 'கன்டம்ப்லே[illegible] எனப்படும்) சமயம் பாண்ட்டு மூடந[illegible]பிக்கைகளும், ரோமன் கத்தோலிக்க[illegible] அடையாளங்களும், சூடானிய சடங்[illegible]களும் கலந்த சமரச சமயமாகும்.